நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

සරිනිහර්

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 195 | ஏப்ரல் 27 - மே 10, 2000 | விலை ரூபா 10. 00



## ஆனையிறவு: ஒரு அவசரத்தந்தி?



## யாழ்ப்பாணத்தை நோக்கி...

தமிழீழ விடுதலைப்புலிகள்

முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி

கூட்டறிக்கை



## மூடப்படுகிறது சமாதானக்கதவு?

## மக்களுக்குத் தேவை எந்தச் 'சக்தி'?



நன்றி - நூலகத்திட்டம்



## திருமலை:
# புஷ்பராதாவுக்கு அரசின் பதில் என்ன?

பெப்ரவரி 24ம் திகதி சல்லிக்கிராமம் கடற்படையினரால் எரியூட்டப்பட்ட (செய்தி சரிநிகரில் (மார்ச் 8-22/2000 வெளியாகியுள்ளது) பதற்றத்தில் செயலிழந்து போன வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட வைரமுத்து ஜெயக்கிளி என்ற இளங்குடும்பஸ்தர் "காணாமற் போய் விட்டார். வழமை போல் பெப்ரவரி 24ம் திகதி மாலை தனது இரு சகாக்களான பத்மசீலன் (19), மோகனராஜ்(18) ஆகியோருடன் கடலுக்குப் புறப்பட்டவர் இன்று வரை வீடு வந்து சேராததால் அவரது மனைவி புஷ்பராதா கலங்கிப் போயிருக்கிறார்.

"என் கணவர் வியாழக்கிழமை தொழிலுக்குப் புறப்பட்டார் சனிக்கிழமை வீடு திரும்புவதாகக் கூறிச் சென்றார். வியாழக்கிழமை இரவு தான் சல்லியில் வீடுகள் கடைகள் கடற்படையிரால் எரிக்கப்பட்டன. புறாமலை எனப்படும் தீவில் வைத்து வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு எனது கணவரும் கூடச் சென்ற இருவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்போது என் கணவரைப் பற்றி எந்தத் தகவலும் இல்லை. கடற்படையினரோ தாங்கள் அவரைக் கைது செய்யவே இல்லை என்று சாதிக்கின்றனர்" என்று விம்மியபடியே கூறுகிறார் அவரது மனைவி புஷ்பராதா.

ஜெயக்கிளிக்கு மூன்று குழந்தைகள். முதற்குழந்தை வேணிஜா (10), சாம்பல்தீவுப் பாடசாலையில் நான்காம் தரத்தில் கல்வி கற்கிறார். அடுத்தவர் வினோஜா (4) கடைசிக் குழந்தை சரண்யா தந்தை காணாமல் போன பிறகு மார்ச் 20ம் திகதி பிறந்திருக்கிறார்.

ஜெயக்கிளி தொழிலுக்குப் புறப்பட்டால் வழக்கமாக இரண்டு நாட்கள் கழித்துத் தான் வருவார். அன்றும் கடலுக்குப் புறப்பட்டவர் நிலாவெளியை அண்டியுள்ள கடற்பரப்பில் பிடித்த மீன்களுடன் புறாமலை என்று அழைக்கப்படும் சிறிய தீவுக்குச் சென்று அவற்றைப் பதனிட்டு விட்டு மத்தியானச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு பாறையொன்றில் தலை வைத்துக் கண்ணயர்ந்த வேளையில் தான் கடற்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

வெள்ளிக்கிழமை - பெப்ரவரி 25ல் பிற்பகல் 2மணியளவில் இது நடந்திருக்கிறது. இவருடன் கூட வந்த இருவரும் கடலில் குளித்துக் கொண்டிருந்திருக்கிறார்கள். கைது செய்யப்பட்ட மூவரும் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களுடைய படகும் கடற்படையினரால் கரைக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறது.



வைரமுத்து ஜெயக்கிளி மனைவி குழந்தையுடன்

"எனது கணவரையும் கூட்டிச் சென்றவர்களையும் கடற்படையினர் நிலா வெளிக் கடற்கரையில் வைத்துத் தாக்கியதை ஊரவர்கள் பலர் பார்த்திருக்கிறார்கள். ஆனால், கடற்படையினரோ தாங்கள் அவரைக் கைது செய்யவில்லை என்று இப்போது கூறுகிறார்கள்" என்று கண்ணீர் விடுகிறார் ஜெயக்கிளியின் மனைவி.

கைது செய்யப்பட்டவர்களின் கண்கள் உடனே கட்டப்பட்டன. நன்றாகத் தாக்கப்பட்டு நிலாவெளிக் கடற்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஞாயிறு இரவு ஜெயக்கிளி மருந்து கட்டுவதற்கென கடற்படையினரால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார். கண்கள் கட்டப்பட்ட நிலையிலிருந்த பத்மசீலனும் மோகனராஜனும் அதன்பிறகு ஜெயக்கிளியின் குரலைத் தாங்கள் கேட்கவில்லையென்று தெரிவித்துள்ளார்கள்.

மோகனராஜனும், பத்மசீலனும் திருகோணமலைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றின்முன் நிறுத்தப்பட்ட போது மோகனராஜ் விடுவிக்கப்பட பத்மசீலன் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் சல்லியில் ஐ.தெசமானந்தம் என்ற ஐந்து பிள்ளைகளின் தந்தை பெப். 25ல் ஜெயக்கிளி புறாமலையில் வைத்துக் கைதான அதேதினத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

இப்போது கடற்படையினரின் வாதம் என்னவென்றால் சல்லியைச் சேர்ந்த மூவரை பெப். 25ம் திகதி கைது செய்தோம். ஒருவர் விடுவிக்கப்பட்டார். இருவர் நீதிமன்றின் மூலம் காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தான். ஜெயக்கிளி என்ற மூன்றாவது நபருக்காக தெசமானந்தம் என்பவரைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

செய்வறியாத புஷ்பராதா தன் கணவனை மீட்டுத் தாருங்கள் என்று கேட்டு தனக்குத் தெரிந்த இடங்களுக்கெல்லாம் சென்று இரந்து வருகிறார். தொல்லைதவிர்ப்புக் குழு, ஈ.பி.டி.பி. மனித உரிமைகள் ஆணையம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியோரிடம் முறையிட்டிருக்கிறார்.

கடற்படை உயரதிகாரிகள் ஜெயக்கிளியின் வீடுதேடிவந்து அனுதாபத்துடன் விசாரணை நடத்தியிருக்கிறார்கள்.

கணவனைத் தொலைத்துவிட்டு வருமானம் தரும் மீன்பிடிப்படகு உபகரணங்களையும் இழந்து மூன்று குழந்தைகளுடன் தவித்துப் போய் நிற்கும் இளம் புஷ்பராதாவுக்கு கடற்படையினரும் அரசும் என்ன பதில் கூறப்போகிறார்கள்?

- விவேகி

# ஆசிரியர் மீது மாணவிகட்குக் காழ்ப்புணர்வாம்!

பாடசாலை மாணவிகள் மீது ஒரு ஆசிரியர் மேற்கொண்டு வந்த பாலியல் அத்துமீறல்களையும் சக ஆசிரியர்களது மூடிமறைக்கும் முயற்சிகளையும் மீறி, சில மாணவிகள் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளனர். இந்தச் சம்பவம் அண்மையில் ஏறாவூர் மீராங்கேணியில் இடம்பெற்றுள்ளது.

ஏறாவூர் மீராங்கேணி மாக்கான் மாக்கார் வித்தியாலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர் எஸ்.எல்.எம். இப்றாகிம் (38), 3 பிள்ளைகளின் தந்தையாகிய இவர், பாடசாலை மாணவிகளிடம் பாலியல் அத்துமீறல்களை பல காலமாக நிகழ்த்தி வந்துள்ளார்.

பாடசாலை முடிவடைந்த பின்னர் மேலதிக நேரவகுப்பிற்கு என்று கூறி மாலை நேரங்களிலும் சில மாணவிகளை வகுப்பறைகளுக்கு அழைப்பித்து அவர்களை பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கி வந்துள்ளார்.

அண்மையில் இந்த பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கான மேடைப்பேச்சிற்கு தயார்படுத்தவென்று மாலை வேளையில் பாடசாலைக்கு அழைக்கப்பட்ட பல மாணவிகளிடமும் இந்த ஆசிரியர் தகாத முறையில் நடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 04.04.2000ம் திகதி மாலை நேர மேலதிக வகுப்பிற்கென்று அழைக்கப்பட்ட 7ம் ஆண்டு மாணவி ஒருவர் மீது குறிப்பிட்ட இந்த ஆசிரியரால் நிகழ்த்தப்பட்ட பாலியல் ரீதியிலான நடவடிக்கையை, தற்செயலாக அந்த வகுப்பறைக்குள் சென்ற மற்றொரு மாணவி நேரடியாகப் பார்த்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆசிரியரது நடத்தை பற்றி பாடசாலை அதிபர் மட்டத்தில் நடைபெற்ற விசாரணையின் போது, பாதிப்பிற்குள்ளான மாணவியும், சம்பவத்தை நேரில் கண்ட மாணவியும் சாட்சியளித்துள்ளார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலையைச் சேர்ந்த 7 மாணவிகள் கையொப்பமிட்டு இந்த ஆசிரியரது நடத்தை பற்றிய ஒரு முறைப்பாடு, மட்டக்களப்பு வலயக் கல்வித் திணைக்களத்திற்கும், சில முக்கிய புள்ளிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் பற்றிய விசாரணை சூடு பிடிக்க ஆரம்பித்தது.

மட்டக்களப்பு வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். மாணிக்கராஜா அவர்களின் உத்தரவின் பெயரில் மட்டக்களப்பு வலயக்கல்வி அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, பாதிக்கப்பட்ட மாணவி அந்த ஆசிரியரின் பாலியல் ரீதியிலான தொந்தரவு பற்றி வாக்குமூலம் அளித்துள்ளார்.

இந்தச் சம்பவம் வெளிவந்து பரபரப்பானதைத் தொடர்ந்து இந்த ஆசிரியருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றாரும் மாணவிகளும் கல்வி அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள் என்று அனைத்து தரப்பினாலும் குற்றவாளி என்று குற்றம்சாட்டப்பட்டுள்ள அந்த ஆசிரியரோ, கிழக்கின் தனித்துவ கட்சியைச் சார்ந்த தன் மீது அரசியல் காழ்புணர்வு காரணமாக சுமத்தப்பட்ட அபாண்டமான பழி என்று இந்தச் சம்பவம் பற்றித் தெரிவித்து வருகின்றார்.

'ஆசிரிய சேவை' என்பது ஒரு உன்னதமான சேவை. இந்தச் சேவை மீது ஏற்படுத்தப்படும் களங்கமும், கறையும் மற்றைய ஆசிரியர்களை மட்டுமல்ல, இந்த சேவையை போற்றி மதிக்கவேண்டிய மாணவர்களையும் பாதித்துவிடும் என்பதை ஒவ்வொரு ஆசிரியரும் உணர வேண்டும்.

- டேவிட்



### ✔ குற்றம் செய்யாத குற்றவாளிகள்!

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு

வாகன விபத்தொன்றில் சிக்குண்டதன் காரணமாக நீதிமன்றம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று ஏற்பட்டது எனக்கு. நான் ஓட்டிச் சென்ற வாகனத்தில் பிழையான முறையில் வந்து மோதிய "ஆட்டோ" ஒன்று குடை சாய்ந்ததால் சாரதிக்கு கணிசமான காயம் ஏற்பட்டது.

முறைப்பாட்டை பதிவு செய்த மருதானை பொலிஸ் நீதிமன்றில் என்னையும் ஆட்டோ சாரதியையும் ஆஜராகும்படி உத்தரவிட்டது.

நீதிமன்ற நுழைவாயிலில் உள்ள ஒரு சட்டத்தரணியை ...னக்காக வாதாட அமர்த்தி, பொலிஸ் நிலைய முறைப்பாடு வரைபடம் எ... றை அவரிடம் சமர்ப்பித்து ஆலோசனை கேட்டேன்.

நான் சொன்ன எல்லாவற்றையும் கேட்ட அவா 'நீர் குற்றத்தை ஒப்புக்கொள்ளும்' என்றார்.

'நான் குற்றம் எதுவும் செய்யவில்லையே?' என்றேன் நான். குற்றத்தை ஒப்புக்கொண்டால் ஒரு நாளில் பிரச்சினை தீரும். இல்லாவிட்டால் வழக்கு மாதக் கணக்கில் இழுபடும். இதனால் நட்டப்படப் போவது நீர் தான்.

'ஆனாலும் செய்யாத குற்றத்தை எப்படி ஒப்புக் கொள்வது"?'

'நீர் குற்றம் செய்யவில்லை என்பது உண்மை தான். அது எனக்குப் புரிகிறது. ஆனால், அதை கோட்டுக்கு புரிய வைக்க நீர் குறைந்தது பத்து தடவையாவது வரவேண்டியிருக்கும். கிட்டத்தட்ட இதே நிலை தான் ஆட்டோ சாரதிக்கும்' என்றார் அவர்.

அவர் சொன்னது உண்மை தான் என்பதை அன்றைய தினம் அங்கு வருகை தந்த அனைத்து 'குற்றவாளிகளும்' ஒப்புக் கொண்டார்கள்.

நான் குற்றத்தை ஒப்புக் கொண்டேன். 250 ரூபா தண்டம் கட்ட உத்தரவிடப்பட்டது. சட்டத்தரணியின் கட்டணத்தைச் செலுத்திவிட்டு வெளியே வந்தேன்.

சமயங்களில் குற்றத்தை ஒப்புக் கொள்வது, அதை மறுப்பதை விட காலத்தையும் பணத்தையும் விரயமாக்காமல் இருக்க நல்ல வழி என்று மீண்டும் அறிவுரை சொன்னார் அந்த சட்டத்தரணி.

# # #

அண்மையில் இன்னொரு சட்டத்தரணியுடன் பேசிக்கொண்டிருந்த போது இந்தக் கதையை அவரிடம் சொன்னேன்.

அவர் சிரித்தார். இது ஒன்றும் பெரிய விடயம் அல்ல. கிரிமினல் குற்றங்களைக் கூட தவிர்க்க முடியாமல் ஒப்புக்கொள்கிற நிலை இன்று நிலவுகிறது. வருடக்கணக்காக சிறைகளில் இருக்காமல் இருப்பதற்காக ஏதாவது சிறிய - ஆனால், கிரிமினல் குற்றங்களை ஒப்புக்கொள்ளும்படி சில சட்டத்தரணிகளே ஆலோசனை சொல்லும் நிலை இங்கு நிலவுகிறது. அதுவும் சாதாரண பொலிஸ் முதல் நீதிமன்றம் வரை இனரீதியான சிந்தனை ஆதிக்கம் செலுத்துகிற இன்றைய சூழலில் இந்தமாதிரி விடயங்கள் தவிர்க்க முடியாமல் இருக்கிறது.

அதிகாரிகளுக்கு உள்ள அதிகாரம், இலகுவில் அவர்களால் யாரையும் பயங்கரவாதத்துடன் இணைத்துவிட வசதியளிக்கிறதாய் இருக்கையில், நீதிமன்றத்தினதும் நீதித்துறையினதும் பயன் பெரிதும் கேள்விக்குரியதாக்கி விடுகிறது. சட்டத்தரணிகளும் சட்டத்துடன் மட்டும் நின்றுவிடாமல் அதற்கப்பாலும் போய் செயற்படும் தேவை ஏற்பட்டு விடுகிறது.

வெளிநாடுகளுக்கு காசு வாங்கிக் கொண்டு, போலி ஆவணங்களுடன் வெளியேற அனுமதிக்கும் அதிகாரிகள் விமான நிலையங்களில் இருக்கிறார்கள். அதே வேளை உண்மையான ஆவணங்களுடன் போக முயல்பவர்களில் சிலர் காசு கொடுக்க மறுத்து நியாயம் கேட்ட காரணத்திற்காக 'உள்ளே' இருக்கிறார்கள்.

இதுதான் இன்றைய நிலை என்றார் அவர்.

'அது எப்படி' என்று கேட்டேன்.

கடவுச் சீட்டில் குத்தப்பட்டிருப்பது போலி விசா என்று தான் சந்தேகப்படுவதாக ஒரு அதிகாரி சொன்னால், அவர் பணம் எதிர்பார்க்கிறார் என்று அறியாமல் நியாயம் கேட்டு சண்டை பிடிப்பது ஆபத்தான விளைவுகளைத் தரலாம். கடவுச் சீட்டில் ஒரு ஒற்றையை கிழித்துவிட்டு பாஸ்போட்டில் ஒற்றை குறைகிறது என்று கூறி அவர் உங்கள் பயணத்தை தடைப்படுத்திவிடலாம். அவர் கிழித்தார் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆதாரங்கள் காட்ட உங்களிடம் எதுவும் இருக்காது. நீதிமன்றம் அதிகாரிகளை தகுந்த ஆதாரமில்லாமல் நம்ப மறுக்கப் போவதில்லை.

இது இன்று நடக்கிறது.

அப்ப என்னதான் செய்ய?

இதுதான் இன்றைய யதார்த்தம். தமிழர்களின் யதார்த்தம். ஒரு சட்டத்தரணியாக அல்ல. தமிழர் என்ற முறையில் காசைக் கொடுத்து விட்டு போய் சேருங்கள் என்று தான் நான் சொல்வேன்.

நான் பதில் பேசவில்லை.

(இப்படி அனுபவங்கள் வாசகர்களுக்கும் நடந்திருந்தால் எழுதுங்கள் ஏனையோருக்கு படிப்பினையாக இருக்கும்!)

### ✔ முதலையும் மூர்க்கனும் மட்டுமல்ல ...

ஆனையிறவில் 17,000 முதல் 20,000 வரை துருப்புக்கள் நிலைகொண்டிருப்பதாக அரசாங்க தகவல்கள் முன்பு கூறின.

ஆனையிறவை புலிகளால் ஒருபோதும் அசைக்க முடியாது என்று அனுருத்த ரத்வத்தை பாராளுமன்றத்தில் அண்மையில் சூளுரை செய்தார். ஆனால், ஆனையிறவை அசைக்க மட்டுமல்ல அழிக்கவும் முடியும் என்று புலிகள் காட்டிவிட்டதாக அண்மைய செய்திகள் தெரிவிக்கின்றன.

கேள்வி என்றவென்றால், படைத்தரப்பு மற்றும் புலிகள் தரப்பு செய்திகளை கேட்கையில் அங்கு 7000-8000 துருப்புக்களுக்கு மேல் இருந்திருப்பதாகத் தெரியவில்லை.

அப்படியானால் அரசாங்கம் இவ்வளவு பெருந்தொகையான இராணுவத்தினர் அங்கு இருந்ததாக கூறியது ஏன்?

சிலரை சில நாள் ஏமாற்றலாம். பலரை பலநாள் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லா நாளும் ஏமாற்ற முடியாது என்பதை அரசாங்கம் இப்போதாவது புரிந்து கொள்ளுமோ என்னவோ?

அரசியல் பிரச்சினைகளை இராணுவ ரீதியில் கையாள்வதும் இராணுவ சிக்கல்களை அரசியல் ரீதியில் கையாள்வதும் தான் இலங்கையின் அரசாங்கங்கள் காலம் காலமாக செய்து வந்த செயல்.

அதன் விளைவு என்ன என்பதை இன்னமும் இலங்கை அரசாங்கம் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

முதலையும் மூர்க்கனும் மட்டுமல்ல இலங்கை அரசும் கொண்டது விடா போலும்!

நன்றி - நூலகத்திட்டம்



# இன்று மக்களுக்குத் தேவை

தனியார் தொலைக்காட்சி, பண்பலை வானொலி நிறுவனம் ஒன்று திருகோணமலையில் சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப் போய் ஒன்பது



உயிர்களைக் காவு கொடுத்து நிற்கிறது. எண்பத்தொரு பேர் காயமடைந்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு காலை இழந்து போன நபர் ஒருவர் கலை நிகழ்ச்சியில் சங்கமிக்கப் போய் அடுத்த காலையும் இழந்து விட்டார்.

ஊடகத்துறை சார்ந்த நிகழ்வில் ஏற்பட்ட அனர்த்தம் என்பதாலோ என்னவோ செய்தித் துறையினர் வெகு அடக்கமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். பத்தோடு பதினொன்றாக அமுங்கிப்போய் விடக் கூடிய வகையில் செய்திகளைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள். அந்த நிறுவனம் கூட வெகு ஜாக்கிரதையாக சம்பவத்தைக் கழுவி நேர்த்தி பண்ணி சுருக்கமாக வெளியிட்டு யுத்தச் செய்திகளை வெளியிடும் அரச ஊடகங்கள் போல் நடந்திருக்கிறது.

சம்பவ ரீதியாக நோக்கும் போது இசை நிகழ்வில் யாரோ விஷமிகள் வீசிய குண்டு ஒன்பது உயிர்களைப் பலி கொண்டு எண்பத்தொருவரைக் காயப்படுத்தி மாறாத கறையை ஏற்படுத்தி விட்டது என்பது சரியாக இருக்கலாம். ஊடகத்துறையினரும் இப்படியான கருத்தைப் பரப்பியே திருப்தி கண்டிருக்கிறார்கள்.

ஆனால், குண்டுவீசிய விஷமிகள் மட்டுமல்ல, குண்டுவீசக் களம் அமைத்துக் கொடுத்தவர்களும் இந்தத் துயரத்துக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள் என்பது தான் உண்மை. திருகோணமலையில் உள்ள நிதான போக்குப் படைத்தவர்கள் மத்தியில் இந்தக் கருத்தே பலமாக வேரூன்றியுள்ளது.

விழாவை ஒழுங்கு செய்த நிறுவனம் வர்த்தக நோக்கில் மட்டுமே குறியாக இருந்து செயல்பட்டதால் இந்த விளைவு மக்களைப் பாதித்திருக்கிறது. மக்களைப் பாதித்த அளவுக்கு அந்த நிறுவனம் பாதிக்கப்படவில்லை என்பது மூன்று நாட்கள் கழித்து வேறொரு நகரத்தில் இசை நிகழ்வை நடத்தியதிலிருந்து தெரிகின்றது. இறந்தவர்கள் வீட்டில் போடப்பட்ட "டெண்ட்" கழற்றப்படும் முன்னரேயே அடுத்த இசை விழா நடந்து முடிந்திருக்கின்றதென்றால் இறந்தவர்கள் - காயமடைந்தவர்கள் மேல் அந்த நிறுவனம் செலுத்திய அக்கறையின் பெருமை புரியும்.

விழாவை நடத்தியவர்கள் வெறும் பாடகர்களல்லர். ஊடகவியலாளர்கள். அதுவும் மிகத் தீவிரமாக நாட்டு நடப்புகளை அறிந்து கொள்கிற - மக்களுக்கு அறிவிக்கின்ற - இலத்திரனியல் ஊடகவியலாளர்கள். நாட்டு நடப்புகளை அறிந்து கொள்பவர்கள் எப்போதும் எதிர் விளைவுகளை ஊகத்தின் அடிப்படையிலாவது அறிந்து கொண்டிருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தச் சூழ்நிலை, நாடெங்கும் காணப்படும் பதற்ற நிலைமை என்பவை குறித்து விழா அமைப்பாளர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. வடக்கு கிழக்கில் திருகோணமலை நகரம் தவிர்ந்த அனைத்து நகரமக்களும் ஏதோ ஒரு வகையான அழுத்தத்தை நாளாந்தம் உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். சூரியன் மறைந்ததும் தங்கள் அலுவல்களை முடக்கிக் கொண்டு வீட்டுக்குள் அடைந்து போய்விடுகிறார்கள். ஒவ்வொரு பயணத்தின் போதும் சோதனைச் சாவடிகளில் சிக்கிச் செயலிழந்து மீள்கிறார்கள்.

வடக்குக் கிழக்குக்கு வெளியே வாழ்கிற மக்கள் இந்த அளவு கெடுபிடிகளில் அன்றாடம் சிக்குவதில்லை. கொழும்பு போன்ற நகரங்களில் இடம்பெறும் சுற்றிவளைப்புகள் தேடுதல்கள் கூட வடக்குக் கிழக்குப் பகுதி அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்காகவே நடத்தப்படுகின்றன. ஏனையவர்களைப் பொறுத்தவரை அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் கூட இவையெல்லாம் சினிமா பார்ப்பது போல அநாயசமாக ரசித்துப்பார்க்கும் நிகழ்வுகளாகவே அமைகின்றன.

இந்த வகையில் தான் விழா ஏற்பாட்டாளர்களையும் நோக்க வேண்டியிருக்கிறது. ஊடகவியலாளர்களாக இருந்த போதிலும் கூட வடக்குக் கிழக்கு நிகழ்வுகள் இவர்களது மனதைத் தொட்ட சம்பவங்களாகக் கூட அமையவில்லை. அவ்வாறு அமைந்திருந்தால் இப்படியான ஒரு விழாவை வடக்குக் கிழக்கு நகரொன்றில் நடத்தத் துணிந்திருக்க மாட்டார்கள்.

வடபகுதியில் யுத்த நிலைமை தொடர்கிறது. விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையில் நடக்கும் மோதல்களில் சிக்கிக் கொண்டு மீளவரமுடியாமல் ஒரு பகுதி மக்கள் தவிக்கிறார்கள். வன்னியில் உணவுத் தட்டுப்பாடு, திருகோணமலையில் நகரம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் எந்த நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை. மட்டக்களப்பில் அன்றாடம் துயரம். வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலையில் தொண்டராசிரியர்கள் உண்ணாவிதரம், யாழ்ப்பாணத்தில் கடையடைப்பு, ஹர்த்தால்.

இந்த நிலையில் சினிமாக்காரர்கள் போல ஊடகவிலாளர்கள் "தாம் தூம்" விளம்பரத்துடன் விழாவை ஒழுங்கு செய்திருக்கிறார்கள். திருகோணமலையில் விழா நடக்கத் தீவிரமாக உழைத்த ஒரு பிரமுகர் "இவ்வளவு சனம் வரும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. ஆக மூவாயிரம் பேரைத் தான் எதிர்பார்த்தார்கள்" என்று தன்னிலை விளக்கமளித்தார்.

உண்மை அதுவாக இருந்தால் நுழைவுச் சீட்டுக்களை ஏற்கெனவே விற்பதற்கான ஒழுங்குகளைச் செய்திருக்கவேண்டும். அதன்மூலம் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆனால், நுழைவுச்சீட்டுக்கள் கூட ஏறத்தாழக் கடைசிவரை ரகசியமாகவே பேணப்பட்டிருக்கிறது. "எங்கள் முத்திரை இல்லாமல் நுழைவுச் சீட்டுக்களை விற்றால் சட்ட நடவடிக்கை எடுப்போம்" என நகரசபை அதிகாரிகள் பயமுறுத்தல் செய்த பின் தான் கடைசி நேரத்தில் மூவாயிரம் சீட்டுக்கள் நகரசபை முத்திரைக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

இவர்கள் இதைவிட அதிகமாகச் சீட்டுக்கள் வைத்திருப்பார்கள் என்ற அபிப்பிராயமே இங்கு பரவலாகக் காணப்படுகிறது. மக்கள் தொகை முப்பதாயிரத்துக்கு மேற்பட்டு விட்டதால் விழா அமைப்பாளர்களால் கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டதால் நுழைவுச்சீட்டுக்கள் சரியாக விற்க முடியாமற் போய் விட்டது. பொலிசாரும் தங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் சரிவரக் கவனிக்க முடியவில்லை. விளையாட்டரங்கில் இவ்வளவு பெருந்தொகையானோர் குழுமியிருப்பார்கள் என்பது உண்மையில் கற்பனை செய்ய முடியாத ஒன்று தான்.



குண்டு எவ்வாறு வந்தது, ஏன் வீசப்பட்டது போன்ற கேள்விகளுக்கு இன்று வரை தெளிவான விடையில்லை. விடுதலைப் புலிகள், வியாபாரப் போட்டியாளர்கள், விஷமிகள் எனப் பல்வேறு ஊகங்கள் அவரவர் மனப்போக்குக்கு ஏற்ப கூறப்படுகின்றன.

மட்டக்களப்பில் இசைவிழாவில் இடம்பெற்ற குண்டுவீச்சை எண்ணியாவது நிகழ்ச்சி அமைப்பாளர்கள் கவனமாக நடந்துகொண்டிருக்க வேண்டும். "நாங்கள் எதிர்பார்க்காத அளவு ஜனங்கள் திரண்டு விட்டார்கள். நாங்கள் ரசிகர்களை எப்படிக்கட்டுப் படுத்த முடியும்" என்று ஏற்பாட்டாளர்கள் கேட்பார்களானால் அவர்களுக்கும் கசிப்பு வியாபாரிகளுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும்.

சம்பந்தப்பட்ட நிறுவனத்தினரைப்

# எந்தச் சக்தி?

குண்டு இரவு 9.20அளவில் வெடித்திருக்கிறது. நிறுவனத்தினரின் நிகழ்ச்சி ஆரம்பிக்க இருந்த வேளையில் "சவுண்ட் பொக்ஸ்" வெடித்தது போல் இருந்திருக்கிறது. மக்கள் குண்டு வெடிப்பை உடனடியாக உணரவில்லை. "விடிய விடிய நிகழ்ச்சி நடத்த நாங்கள் தயார்: நீங்களும் தயாரென்றால்..." என்று வசனம் பேசியவர் உட்பட மேடையில் இருந்தவர்கள் பின்புறமாக இறங்கிக் கொண்ட போது தான் சனங்களுக்கு விபரீதம் நடந்தது புரிய ஆரம்பித்தது. முன்னணியில் இருந்த ரசிகர்கள் ரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

முன்பகுதியில் உள்ளவர்களுக்குக் குண்டுவெடிப்பு இடம்பெற்றமை தெரிய வந்த பிறகு கூட பிற்பகுதியில் உள்ள பெருவாரியானோர் நிகழ்ச்சிக்காகக் காத்திருக்கும் அளவுக்கு ஜனத்திரள் காணப்பட்டது.



பொறுத்தளவில் இச்சம்பவம் விரைவில் எல்லோராலும் மறக்கப்பட வேண்டியதொன்று. சில நாட்களின் பின் எவராவது நினைவுபடுத்தினாற் கூட அது கசப்பாக இருக்கலாம். இது வியாபார நியதி.

ஆனால், திருகோணமலையைப் பொறுத்த வரையில் இது கறைபடிந்த நினைவு. ஒவ்வொரு சித்திரைப் புத்தாண்டுக்கும் (ஏப்ரல் 12ம் திகதி) சோக நிகழ்வுகள் மனதில் நின்றாடும்.

இழப்பு மேல் இழப்புகளைக் கண்டு அவற்றைத் தாங்கும் சக்தியை தமிழ் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து கொண்டிருக்கிறார்கள். இது அவர்களுக்கு இன்னொரு முனைத் தாக்குதல்".

தொலைக்காட்சி நிறுவனத்தினரின் திறமைகளை யாரும் சந்தேகிக்கவில்லை. திறமைகளை வெளிப்படுத்தும் இடங்களைத் தீர்மானிக்கும் திறமைதான் இப்போது சந்தேகத்துக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. கூடவே இன்னொன்றையும் சொல்ல வேண்டும். வெறுமனே இந்தக் குறிப்பிட்ட பண்பலை வானொலி மட்டுமல்ல, இப்போது செயற்படும் ஏனை யவானொலிகளும் கூட இந்தக் "களியாட்டக் கலாசாரத்தை" மக்கள் மத்தியில் பரப்பி அவர்களைக் கனவுலகில் வாழ வைக்க முயன்று கொண்டு தானிருக்கின்றன.

தொடர்பு சாதனங்களின் பல்வேறு கடப்பாடுகளுடன் மக்களை மந்தைகளாக்குவதும் ஒன்றென்பது " வியாபாரிகளின் கொள்கை" போலும்!

- திரிபுரன்

## யாழ்ப்பாணத்தில் பெண் சிப்பாய்கள் மீதும் வல்லுறவு

யாழ். குடாநாட்டில் கடமையில் ஈடுபட்டு வந்த பெண்கள் படையணியைச் சேர்ந்த நான்கு பெண் சிப்பாய்கள், பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரிகளினால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இவ்வாறு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் கொழும்பு இராணுவ மருத்துவமனையின் 10ம் இலக்க அறையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இலங்கை இராணுவ வரலாற்றில் பல பெண் சிப்பாய்கள், பல அதிகாரிகளினால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டது இதுவே முதல் முறை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக லெப்டினட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியவுக்கு அதிகாரி ஒருவர் தகவல் வழங்கியுள்ளார் என்றும் எனினும், இதுவரை கிரமமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவரவில்லை என்றும் கூறப்படுகிறது.

இந்த பெண் படையினர் யாழ். பிரதேசத்தில் இரவில் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையிலேயே பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டுள்ளனர். இதுபோல் இரவில் கடமையில் ஈடுபடும் பெண் சிப்பாய்கள், 50க்கும் அதிகமானோர் சிப்பாய்களினாலும், அதிகாரிகளினாலும் துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பெண்கள் மீதான வன்முறை 6 மாதக் கணிப்பீடு

கடந்த வருடம் ஜனவரி தொடக்கம் ஜுன் வரையிலான ஆறுமாத காலத்தினுள் பல்வேறு விதமான பெண்களுக்கெதிரான வன்முறைகள் நிகழ்ந்துள்ளன. பத்திரிகைகளின் தகவல்களின்படி மத்திய மாகாண பெண்கள் ஒன்றியம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இதன்படி பெண்களுக்கெதிரான தாக்குதல் சம்பவங்கள் 75ம், கொலை முயற்சிகள் 15ம், படுகொலைகள் 131ம், வயது வந்தோரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை 63ம், குறைந்த வயதினரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியமை 87ம், பாலியல் வல்லுறவு முயற்சிகள் 57ம், பாலியல் வல்லுறவின் பின் கொலைகள் 24ம், இராணுவத்தினரால் புரியப்பட்ட வல்லுறவு சம்பவங்கள் 09ம், பாலியல் இம்சைகள் 25ம் நிகழ்ந்துள்ளதாக அவ்வறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

நாளுக்கு நாள் அதிகரிக்கும் பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைப்பதற்கு அரசு விசேட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 12 வருடங்கள் ... சிந்தப்பட்ட இரத்தமும் இழக்கப்பட்ட உயிர்களும்...

## 21 ஏப்ரல் 1988 – 21 ஏப்ரல் 2000

"தமிழீழ விடுதலைப் புலிகளால் 1990 இல் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் நிர்க்கதியான நிலை இன்னமும் தொடர்கிறது.
தமிழ் முஸ்லிம் மக்களிடையேயான ஐக்கியத்திற்கு அடிப்படையான தேவைகளை பல்வேறு தமிழ் முஸ்லிம் அமைப்புகளும், புத்திஜீவிகளும் முன்மொழிந்துள்ளார்கள். ஆயினும், இதுவரை புலிகள் தரப்பிலிருந்து எந்த குறிப்பிடத்தக்க சமிக்ஞையும் கிடைக்கவில்லை. இந்த நிலையில், 1988இல் புலிகளுடன் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி நடாத்திய பேச்சுவார்த்தையின் பின்னரான கூட்டறிக்கை - இப்படி ஒரு அறிக்கை வெளியானதே பலருக்கும் மறந்து போயிருக்கலாம் - முக்கியத்துவம் பெறுகிறது. முஸ்லிம் ஐக்கிய முன்னணி சார்பில் அறிக்கையில் கைச்சாத்திட்ட எம்.ஐ.எம். மொஹிதீன் அவர்களது குறிப்புடன் அவ்வறிக்கையியை காலப்பொருத்தம் கருதி அப்படியே பிரசுரிக்கிறோம். – ஆர்

வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தமிழ் மக்களின் வரலாற்றுடன் பல விடயங்களில் பின்னியும் பிணைந்துமே வாழ்கின்றனர். அடிப்படையான மத, இனத் தனித்துவங்களைத் தவிர்த்து அவர்களின் வாழ்வும் இருப்பும் அரசியல் பிரச்சினைகளும் தமிழர்களுடனேயே பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசின் மேலாதிக்கம் முஸ்லிம்களையும் விட்டு வைக்கவில்லை. தமிழ் மக்களுடைய பல்வேறுபட்ட போராட்ட நியாயங்கள் முஸ்லிம்களுக்கும் உரியதே! முஸ்லிம்களின் அரசியல் தலைமைகள் இந்த விடயத்தில் பலவிதமான மௌன நிலைப்பாட்டிலேயே காலத்தை ஓட்டி வருவது மிகவும் விசனிக்கத்தக்கதே!

ஆனாலும் கூட, பல தடவைகளில் தமிழ் அரசியல், ஆயுதத் தலைமைகளுடன் முஸ்லிம் சமூகம் - தனது பிரதிநிதிகளின் ஊடாக பல்வேறுபட்ட பேச்சுவார்த்தைகளையும், உடன்படிக்கைகளையும் மேற்கொண்டுள்ளன என்பதை சம்பந்தப்பட்ட அனைவரின் கவனத்திற்கும் கொண்டு வருவது இன்றைய அரசியல் சூழலில் மிகவும் முக்கியமானதாகும்.

இவ் உடன்படிக்கைகளில் மிகவும் பிரதானமானவை முஸ்லிம்கள் 17 செப்டம்பர் 1987ல் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் 21 ஏப்ரல் 1988ல் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையுமாகும். இந்த உடன்படிக்கைகள் ஏற்பட்டதன் பின் இவ் உடன்படிக்கைகளை ஆரம்ப வேலைத்திட்டமாகவேனும் நடைமுறைக்கு கொண்டு வரவில்லை என்பது வடக்கு கிழக்கில் வாழும் தமிழர், முஸ்லிம் வாழ்வில் மிகப் பெரும் துயரமும் இழப்புமாகும்.

விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுடைய போராட்டத்தை முன்னின்று நடத்துபவர்கள் என்ற உண்மையின் அடிப்படையில் 1988ல் விடுதலைப்புலிகள் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேசிய போது ஏற்றுக் கொண்டதன் அடிப்படையிலாவது விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பின்வந்த காலங்களில் அமையவில்லை என்பதுடன் அவர்கள் வடக்கில் இருந்து முஸ்லிம்களை இனச்சுத்திகரிப்புச் செய்தும், கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிராக இனப்படுகொலைகளையும் புரிந்தனர். இவை வரலாற்றில் கறைபடிந்த சம்பவங்கள் என்பதை நிகழ்காலம் நமக்கு உணர்த்தியிருக்கின்றது.

இன்றுள்ள அரசியல் சூழலில் தமிழர் பிரதிநிதிகளோடு குறிப்பாக விடுதலைப் புலிகளோடு முஸ்லிம் மக்கள் பேசியே ஆகவேண்டுமென்ற மறுக்கமுடியாத யதார்த்தத்தின் சூழல் இன்று முஸ்லிம் மக்கள் முன் நிற்கிறது. இவ் அடிப்படைக்கு ஒரு முன்னெட்டாகவே 1988 ஏப்ரல் 21ல் விடுதலைப் புலிகளோடு முஸ்லிம் பிரதிநிதிகள் செய்து கொண்ட உடன்படிக்கை இத்தால் மீள்பிரசுரம் செய்யப்படுகிறது என்பதை அனைவரும் கனவத்திற் கொள்வார்களாக!

**முஸ்லிம் மக்களில் அக்கறை கொண்டோர் சார்பாக....**

**எம்.ஐ.எம். மொகிதீன்**
*57, நொறிஸ் கனல் றோட்,*
*கொழும்பு 10.*
*தொலைபேசி : 697032*




### எமது நோக்கு

நாம் நிகழ்த்துகின்ற உரிமைப் போரானது இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும், சுபீட்சமான வாழ்வையும் பெற்றுத் தருவதற்கான போராட்டமாகும். எமது தேசிய விடுதலைப் போராட்டப் பாதையில் மத, பிரதேச வேறுபாடுகளற்ற சகல மக்களினதும் சுதந்திரத்தை உறுதிப்படுத்தியுள்ளோம்.

எமது போராட்ட இலக்கில் நாம் இழந்த நிலத்தை மீட்டெடுப்பதும், இருக்கும் நிலத்தைக் காப்பாற்றுவதும் முக்கிய அம்சமாகும். தமிழ் பேசும் மக்களது பாரம்பரிய மண்ணில் முஸ்லிம்களது நிலம்தான் அதிகமாகப் பறிபோயிருக்கிறது. எனவே இழந்த மண்ணில் ஒரு அங்குல நிலத்தைக் கூட விட்டுக் கொடுக்காது மீட்பது என்ற எமது போராட்ட இலக்கானது முஸ்லீம்களினது உரிமைக்குரலையே முதன்மைப் படுத்துகிறது.

எனவே அனைத்து முஸ்லிம் மக்களும் எமது இயக்கத்துடன் இணைந்து போராடுவதன் மூலம் தான் தமது தாய் மண்ணையும் மத தலங்களையும் கலாச்சாரத்தையும் காப்பாற்ற முடியும்.

தமிழ்த் தேசிய இனத்தில் தனித்துவமான கலை, கலாச்சாரம், பண்பாடுகளைக் கொண்ட இனக்குழுவினரான இலங்கை வாழ் முஸ்லீம்கள், அச்சம், ஐயப்பாடுகளின்றி தமது கலை, கலாச்சாரம், பண்பாடு, மதம் போன்றவற்றைப் போற்றி வளர்க்கவும் பாதுகாக்கவும், தமிழ்த் தேசிய இனத்தின் ஏனையவர்களுக்குள்ள அனைத்து உரிமைகளுக்கும் சுதந்திரத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளாகிய நாம் உத்தரவாதம் வழங்குகின்றோம்.

பின்தங்கிய நிலையிலிருக்கும் முஸ்லீம்களின் கல்வி, பொருளாதார, அரசியல் உரிமைகளை மேம்படையச் செய்ய எமது இயக்கம் எல்லா வகையிலும் முழு ஒத்துழைப்பு வழங்கும். தமிழ்த் தேசிய இனத்தில் சமத்துவமான நிலைமையை அவர்கள் அடையும் வரை அவர்களுக்கு அவர்கள் பின்தங்கிய துறைகளில் சிறப்புச் சலுகைகள், உதவிகள் ஆட்சி நிர்வாகத்தின் கீழ் எமது இயக்கம் ஆனவற்றைச் செய்யும்.

### இலங்கை-இந்திய ஒப்பந்தமும் முஸ்லீம்களின் உரிமைகளும்.

பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் என்னவென்று ஆராயப்படாது தமிழ் பேசும் மக்களின் ஆலோசனைகளையோ, சம்மதத்தையோ கருத்திலெடுக்காமல் இலங்கை-இந்திய அரசுகள் தங்கள் நலன்களை முன்நிறுத்தி செய்து கொண்ட ஒப்பந்தமே இலங்கை-இந்திய ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தம் மாகாண சபைகளின் மூலம் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்துவதாக விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் உண்மையில் அதிகாரக் குவிப்பையே இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த ஒப்பந்தம் முஸ்லீம்கள் உட்பட தமிழ் பேசும் மக்களுக்கு சட்ட ரீதியாகவோ, நடைமுறை ரீதியாகவோ எதுவித பாதுகாப்பையும் வழங்கவில்லை. ஏற்கனவே புறக்கணிக்கப்பட்ட கல்வி, தொழில் வாய்ப்பு போன்ற துறைகளின் அதிகாரம் தமிழ் பேசும் மக்களுக்கு மாகாண சபைகளிடம் வழங்கப்படவில்லை.

இந்த மாகாண சபையானது ஆளும் இனம், ஆளப்படும் இனமென்று கடந்த 40 ஆண்டுகளாக இலங்கை அரசியலில் இருந்த நிலையை நீக்கவில்லை. அதிகார மாற்றத்தை ஏற்படுத்தவில்லை.

தமது அடிப்படை, அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அதிகாரம் இல்லாத நிலையில் இந்த ஒப்பந்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் மாகாண சபைகளினால் தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை.

தமது பாரம்பரிய வசிப்பிடம், பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், மதம், மொழி, கலாச்சாரம் எதையுமே பாதுகாக்க வகையில்லாத இந்த ஒப்பந்தத்தை முஸ்லீம்கள் நிராகரிக்கவே செய்வர்.

தமது பாரம்பரிய நிலத்தில் பெரும்பகுதியை பேரினவாதிகளிடம் இழந்துவிட்ட முஸ்லீம்கள் அதை மீளப்பெற ஒரே வழி போராட்டம்தான் என்பதை உணர்ந்து விட்டார்கள்.

போராடத் திராணியற்ற பதவிகளையே குறிக்கோளாகக் கொண்ட குழுக்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான் இந்திய அரசுக்கு இந்த ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி இந்த ஒப்பந்தம் எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது என்று எடுத்துக் கூறியது.

ஒப்பந்தத்தை ஆதரிக்காத போதிலும் எமது இயக்கம் இந்தியப் பிரதமர் கொடுத்த வாக்குறுதிகளின் பேரில் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் ஒப்பந்தம் அமுல் படுத்த ஒத்துழைப்பதாக கூறியபோதிலும் பின்னர் இந்தியப் பிரதமரின் வாக்குறுதியை மீறி தமிழ் பேசும் மக்களுக்கு பல தீங்குகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து தமிழ் மக்களின் நிலத்தைக் காப்பாற்றும் வகையில் ஒப்பந்தத்தை நிராகரித்து பெரும் போராட்டத்தைத் தொடங்கி கடந்த 7 மாதங்களாக நடத்திக் கொண்டிருக்கிறது.

இனத்தின் தனித்துவம் காப்பாற்றப்பட நிரந்தர வாழ்விடம் எவ்வளவு அவசியம் என்பதை நன்கறிந்தவர்கள் முஸ்லீம்கள். பாரம்பரியமாக இருந்து வந்த நிலத்தை சியோனிஸ்டுகளான யூதர்களிடம் இழந்துவிட்டு இன்று பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் பல்வேறு நாடுகளில் அகதிகள் முகாம்களிலிருந்து தமது போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்களது நிலைமைகளைப் போலன்றி தம் நிலத்தைக் காப்பாற்ற தனித்துவமான தமது கலை, கலாச்சாரம், பண்பாடு. மதம் என்பவற்றைக் காப்பாற்ற எம்முடன் சேர்ந்து போராட முன்வந்திருக்கிறார்கள். அதன் ஒருபடிதான் முஸ்லீம் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்தி வெளியிட்டிருக்கும் கூட்டறிக்கை.

### தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணி கூட்டறிக்கை

டாக்டர் அல்ஹாஜ் பதியுதீன் மஹ்மூத் அவர்களது தலைமையில் இலங்கையிலிருந்து வருகை தந்த முஸ்லீம் ஐக்கிய விடுதலை முன்னணிப் பிரமுகர்களுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிற்குமிடையே சென்னையில் 1988ஏப்பிரல் 15ம், 16ம், 19ம் திகதிகளில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது, பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டதில் இருதரப்பாருக்குமிடையே கொள்கைகள் ஒத்ததாக இருந்ததென்பதை அறியக் கூடியதாக இருந்தது.

1. இலங்கை வாழ் முஸ்லீம்கள் தமிழ் மொழியை பேசுபவர்களாக இருப்பினும் அவர்கள் வேறுபட்ட தனித்துவத்தைக் கொண்ட, தமிழ்த்தேசியத்தினுள் உள்ளடங்கிய ஒரு இனக்குழு என்பதனையும், வடக்கு கிழக்கு மாகாணம் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகமாக உள்ளது போலவே, முஸ்லீம்களது பாரம்பரிய தாயகமாக உள்ளது என்பதனையும் ஏற்றுக்கொள்கிறோம்.

2. வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த தாயகத்தில் வாழும் தமிழர்களும் முஸ்லீம்களும் ஐக்கியத்துடனும், சமானதானத்துடனும் வாழ வேண்டும் என்பதனையும், முஸ்லீம்கள் இப்பிரதேசங்களில் சிற[illegible]ராக வாழ்கின்ற காரணத்தினால் அவர்கள் அச்சம், பயம், சந்தேகமற்று வாழ வேண்டியது முக்கியமாகையால் அவர்களது பாதுகாப்பையும், சமமான உரிமைகளையும், சுதந்திரத்தையும்


...தமிழ்ந்ததிற்குப்பின்னர் மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு திரும...
...றயான மாகாணசபைத்தேர்தல் நடக்கும் வரையும் இடைக்கால நிர்வாக...
...க ஒன்று அவசியமாகும். இந்த இடைக்கால அரசில் ஏற்கனவே இதுதொடர்பு
செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் அங்கத்துவம் அமைதல் வேண்டும்.

சதாசிவம் கிருஷ்ணகுமார்
மத்திய குழு உறுப்பினர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்
21/4/88

எம்.ஐ.எம். மொஹிதீன்
செயலாளர் நாயகம்
முஸ்லிம் ஐக்கிய விடுதலை
21/04/1988



⊃12

நன்றி - நூலகத்திட்டம்



## ஆனையிறவு வீழ்ச்சி:

# சமாதானத்தின் தேவையை உணர்த்தும் அவசரத் தந்தி!

ஆனையிறவு முகாம் வீழ்ச்சியுற்றதாகக் கடைசியாக அரசு தரப்பு ஒப்புக் கொண்டுவிட்டது. முல்லைத்தீவு இராணுவ முகாம் அழிப்பின்போது அறிவித்தது போல, இங்கேயும் எதுவும் நடக்கவில்லை என்று அறிவிக்க அரசாங்கம் முயன்ற போதும் உண்மை நிலைமை உலகம் பூராவும் சனியன்று பிற்பகல் அளவிலேயே வெளியாகத் தொடங்கி விட்டது. பிறகு வேறு வழியின்றி, இராணுவக் காரணங்களுக்காக ஆனையிறவிலிருந்து படையினர்



வெளியேறி விட்டனர் என்று அரசு தரப்பு அறிவித்தது.

ஆனையிறவு முகாம் தோல்வி என்பது புலிகளைப் பொறுத்தவரை அவர்களது கடந்த பத்தாண்டு கால இடைவிடா முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் இராணுவ வெற்றி மட்டுமல்ல, யாழ்ப்பாணக் குடாநாடு மீண்டும் அவர்கள் கைகளில் போய்ச் சேர்வதற்கான ஒரு ஆரம்ப வெற்றி என்றும் சொல்லலாம். இராணுவ முகாம் கிட்டத்தட்ட 17,000 துருப்புக்களைக் கொண்ட ஒரு பாரிய தளம் மட்டுமல்ல, மிகவும் பலம் வாய்ந்ததும், குடாநாட்டுக்கான பிரதான பாதையை அரச கட்டுப்பாட்டில், புலிகளுடனான யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் வைத்திருந்த முகாமும் ஆகும்.

இந்த அரசாங்கத்துடனான ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் யாழ். குடாநாட்டை அனுருத்தர் படைகளிடம் விட்டுப் பின்வாங்கிய புலிகள், அதே அரசாங்கத்தின் காலத்திற்குள்ளேயே [illegible] மீளக் கைப்பற்றிக்கொ[illegible] ஆரம்பித்த தமது படை நடப்பிக்கிருந்த மிகப் பிரமாண்டமான தடையை உடைத்துள்ளார்கள். ஆனையிறவின் வீழ்ச்சி வெறும் இராணுவ முகாம்களில் ஒன்றின் வீழ்ச்சியல்ல. அது யாழ். குடாநாட்டின் வீழ்ச்சிக்குரிய சகல வாய்ப்புகளையும் புலிகளுக்குத் திறந்து விட்டுள்ள ஒரு வீழ்ச்சியென்றால், மிகையாகாது.

இலங்கை அரசாங்கம் படையணியின் பெருக்கத்திலும், ஆயுத பலத்திலும் நம்பிக்கை வைத்துச் செயற்பட்டது மட்டுமல்லாமல், அவை மட்டுமே வெற்றியைத் தீர்மானிக்கப் போதுமானவையென்றும் கருதிச் செயற்பட்டு வந்தது, வருகிறது. இராணுவ நடவடிக்கைகளின் போது உருவாகும் போர் முனைகளில் ஏற்படும் ஒரு சில வெற்றிகளைப் படை பலமும், ஆட்பலமும் தீர்மானிப்பதுண்டு என்பது உண்மை தான். ஆனால், எல்லாக் காலங்களிலும் வெறும் படை பலமும், ஆயுத பலமும் மட்டும் வெற்றியைத் தீர்மானிப்பதில்லை. இராணுவ யுத்த தந்திரோபாயங்களும் கூட, எல்லாச் சந்தர்ப்பங்களிலும், வெற்றியை ஏற்படுத்தி விடுவதில்லை. இலங்கை அரசாங்கத்தின் ஆட் பலமும் சூரியக்கதிர் (ரிவிரச), எடிபல நடவடிக்கைகளின் போது கணிசமான வெற்றியைத் தந்தது என்பது உண்மை தான். ஆனால், அவர்களது இராணுவத் தந்திரோபாயங்கள் அவர்களிடமிருந்த ஆட்பலத்துடன் ஒப்பிடுகையில் அவ்வளவு சிறப்பானவையாக இருக்கவில்லை. இந்த நடவடிக்கைகள் ஏற்படுத்திய ஆரம்ப வெற்றிகளின் உற்சாகம் அவர்கள் இராணுவ தந்திரோபாயங்களைத் தீட்டுகையில் மெத்தனமாக இருக்கச் செய்து விட்டது. தவிரவும், புலிகள் பற்றிய அவர்களது மதிப்பீடு, புலிகள் பயந்து ஓடுகிறார்கள் என்ற பாமரத்தனமான அரசியல்வாதிகளது, அவதானிப்பு மட்டத்திற்கு மேல் இருக்கவில்லை.

புலிகள், அரச படைகளுடன் ஏறக்குறையச் சம சக்திவாய்ந்த ஆயுதங்களைப் பெற்றுக் கொண்ட பின், வெற்றியை ஆயுத பலமும், ஆட்பலமும், இராணுவத் தந்திரோபாயங்களும் மட்டும் தீர்மானிக்கின்றன என்ற அரச படைகளின் கணிப்பீட்டில் மண் விழத் தொடங்கியது. பாரிய பிரதேசத்தைக் கட்டுப்பாட்டுள் வைத்திருப்பது, இடையறாது தாக்கும் புலிகளுடன் சமர் புரிவது என்பவற்றுடன் சேர்த்துத் தமது இராணுவத் திட்டங்களைத் தீட்டுவது, அரச படையினர் தீவிரமாக இயங்கினாலும், அவர்களுக்குப் பெரும் தடையாக இருந்தது அவர்களால் அதற்குரிய போதிய தகவல்களைப் பெற முடியாமையே.

புலிகளைப் போல் அன்றி, இராணுவத்திற்குப் புலிகளின் நகர்வுகள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெற முடியாது. தவிரவும், புலிகள் தமிழ் மக்களால் பூரணமாக வெறுத்து ஒதுக்கப்பட்ட அல்லது அவர்களைப் படுமோசமாக நசுக்குகின்ற ஒரு பயங்கரவாதிகளின் கூட்டம் என்ற எண்ணம் இராணுவத் திட்டமிடலாளர்களிடையே ஆழமாக இருக்கின்றது. ஆனால், மிகவும் சுலபமாக இராணுவ நகர்வுகளை அறியும் வாய்ப்பு இருக்கின்றது. அத்துடன் இராணுவத்தின் எந்தச் சிறிய நகர்வையும் அவர்கள் அசட்டை செய்வதில்லை. ஒரு வகையில் அவர்கள் இவற்றைச் சற்று மிகைப்படுத்திக் கூடக் கணிப்பிடுவதுண்டு. இத்தகைய மிகைப்படுத்தல் ஊகங்கள் சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அரசியல் ரீதியிலான நெருக்கடிகளைத் தரக் கூடிய நடவடிக்கைகளை நோக்கி அவர்களைத் தள்ளியிருக்கின்றன. ஆனால், இராணுவ ரீதியில் அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பிடுகையில் பெற்ற தோல்விகள் மிகவும் குறைவே.

புலிகளது செம்பியன்பற்று முகாம் மீதான தாக்குதல் மிகக் கச்சிதமாகத் திட்டமிடப்பட்ட, வெற்றிலைக்கேணியை மீளப் பிடிக்கும் இராணுவத்தின் தாக்குதல் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருந்த நாளுக்கு ஒரு நாள் முன்பதாக நடாத்தப்பட்ட ஒரு தாக்குதல் ஆகும்.

புலிகளின் இந்த நடவடிக்கைகளின் வெற்றி என்பது வெறுமனே ஆயுத பலத்திலும், ஆட் பலத்திலும், இராணுவத் தந்திரோபாயங்களிலும் மட்டுமல்ல, வேறும் சில அம்சங்களிலும் கூட யுத்தத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது என்பதைத் தெளிவு படுத்துகின்றன.

இந்தியப் பாதுகாப்புப் படை, இலங்கை அரசாங்கத்தின் மொத்தப் படையை விட நான்கு அல்லது ஐந்து மடங்கு அதிக அளவான படை பலத்துடன் இங்கு வந்து இருந்தது. அதனிடம் இருந்த ஆயுத தளபாடங்களின் எண்ணிக்கைக்கு அளவு கணக்கு இல்லை. இவ்வளவு பலமும் அதற்குப் புலிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கத்தான் பயன்பட்டதே ஒழிய, அதனை முற்றாக அழித்துவிடப் போதுமானதாக இருக்க வில்லை.

இந்தியப் படையின் இராட்சத பலத்தின் முன்னும், புலிகளால் நின்று பிடித்துத் தொடர்ந்து, இன்று வரை போராட முடிகின்றது என்றால் அதற்குப் பலரும் நினைப்பது போலப் புலிகளின் திறமையும், ஆற்றலும் மட்டும் காரணம் அல்ல.

அதைவிடவும் முக்கியமான ஒரு காரணம் இருந்தது.

அதுதான் தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கான அரசியல் காரணம்.

ஆம், அந்த அரசியல் காரணம் ஒன்று மட்டும் தான் புலிகளை - இந்திய இராணுவத்தால் முடக்கப்பட்ட புலிகளை - முற்றாக அழிந்து விடாமல் பாதுகாத்தது, இன்று, மீள உயிர்ப்புற்று முன்னை விட அதிக பலத்துடன் இலங்கை அரசாங்கத்துடன் பொருதும் சக்தியை அதற்கு வழங்கியது.

இலங்கை அரசாங்கத்தில், இராணுவ வெற்றிகளில் இலக்குகள் புலிகளை முடக்கும் அளவுக்கு அப்பால் ஒரு போதும் போகப் போவதில்லை. புலிகளை முற்றாக அழித்து இல்லாமல் ஆக்குவது என்பது - இன்றைய அரசியல் பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கும் வரை சாத்தியம் இல்லை என்பது அரசியல் அரிச்சுவடி தெரிந்த அனைவராலும் புரிந்து கொள்ளப்படக் கூடிய மிகச் சாதாரண உண்மை. அப்படிப் புரிந்து கொள்ள முடியாதவர்களுக்குப் பிரத்தியட்ச உதாரணமாக இந்தியப் படை அனுபவம் இருக்கின்றது.

இதைத்தான் இன்று, ஆனையிறவு வீழ்ச்சி பற்றிக் கருத்துத் தெரிவித்த விமர்சகர் ஒருவர் "ஆனையிறவு" இலங்கை இராணுவத்தின் "டியன் பென் ஃபூ" என்று வர்ணித்துள்ளார்.



பிரெஞ்சுப் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்த வியட்னாமில், அந்தப் படைகள் முழுமையாக மண்கவ்வக் காரணமாக அமைந்த "டியன் பென் ஃபூ" யுத்தத்துடன் இந்தத் தாக்குதலை ஒப்பிட்டிருக்கிறார் அந்த விமர்சகர்.

ஆம், வியட்னாமிய மக்களின் அரசியல் உரிமைக்கும், ஏகாதிபத்திய வெறிக்கும் இடையில் நடந்த யுத்தத்தில் ஏகாதிபத்தியம் படுதோல்வி அடைந்ததற்குக் காரணமும் கூட வியட்னாமிய மக்களது ஆயுத பலமோ, அவர்களை வழி நடாத்திய வியட்னாமிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுத பலமோ அல்ல.

அந்த மக்களின் அரசியல் பலம் தான் அவர்களை வெற்றி வாகை சூட வைத்து ஆக்கிரமிப்பாளரை மண் கவ்வ வைத்தது.

இன்று, விடுதலைப் புலிகளின் வெற்றிக்கு அடிப்படையாக அமைந்திருப்பதும் கூட, இலங்கை அரசால் ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பலம் தான்.

இலங்கை அரசாங்கத்திற்கும், அதன் இராணுவத்திற்கும், அதன் ஆலோசகர்கட்கும் விளங்காத விடயம் அல்ல இது. ஆனாலும் அவர்கள் வெறும் தற்காலிக அரசியல் இலாபங்களுக்காக இதனை வசதியாக மறந்து விடுகின்றார்கள். தமிழ் மக்களது அரசியல் உரிமைப் பிரச்சினையை வெறும் புலிகளின் பயங்கரவாதப் பிரச்சினையாகப் பார்ப்பதும், சிங்கள மக்களுக்காகவே தாம் உயிரைக் கொடுத்துப் போராடுவதாகப் பீற்றுவதும் அவர்களுக்கு அவசியமான முதலீடாக - அவர்களது அரசியல் பிழைப்புக்கான முதலீடாக உள்ளது. இதுதான் இன்றைய யதார்த்தத்தின் சோகம்.

ஆனையிறவு முகாம் வெற்றி புலிகளுக்கு யாழ்ப்பாணத்திற்கு நுழைவதற்கான வாய்ப்பை மட்டுமல்ல, அரசியல் ரீதியான தீர்வுக்கு அரசாங்கத்தை நிர்ப்பந்திப்பதற்கான வாய்ப்பையும் வழங்கியிருக்கின்றது.

இலங்கை அரசாங்கத்திற்குத் தனது யுத்த வழி முறையை மீண்டும் ஒரு முறை மறு பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பையும் இது வழங்கியிருக்கின்றது.

அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு, யுத்தத்திலும், ஆயுதங்களிலும், படைகளின் எண்ணிக்கையிலும் தங்கியிருக்கவில்லை. அது விட்டுக் கொடுக்கத் தயாரான, நேர்மையான, தீர்வு காண்பதற்கான அர்ப்பணிப்புள்ள அரசியல் பேச்சுவார்த்தையில் தான் தங்கியுள்ளது என்பதை உணார்ந்து கொண்டு, பேச்சுவார்த்தை முயற்சியில் தீவிர கவனத்தைக் குவிப்பது அரசாங்கத்தின் இன்றைய முக்கிய கடமை ஆக வேண்டும்.

யுத்த அழிவுகட்குப் பின் சமாதானம் பிறக்கும் என்கின்ற முட்டாள்தனமான நம்பிக்கைகளைக் கைவிட அது தயாராக வேண்டும்.

சிங்கள இன வெறியர்களது தீவிரமான இயக்கமும், செயற்பாடுகளும் அதிகரித்து வரும் ஒரு சூழலில், ஒரு நல்ல எதிர்காலத்தை, எதிர்காலச் சந்ததிக்குப் பெற்றுக் கொடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

இல்லாவிட்டால் யுத்தம் முழு நாட்டையுமே விழுங்கி ஏப்பம் விட நீண்ட காலம் எடுக்காது !

நாசமறுப்பான்

நன்றி - நூலகத்திட்டம்



# சுழற்சி முறைக்கு முஸ்லிம் காங்கிரஸ் தயாரா?

சேகு இஸ்ஸத்தீன் ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதை அடுத்து, எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு மு. கா. கட்சிக்குள் இடம்பெறுகின்ற அதிரடி அரசியல் மாற்றங்கள் தேர்தலில் வெற்றியீட்டுவது ஒன்று தான் மு.கா. நினைக்கின்ற முஸ்லிம்களின் அரசியல் உரிமைப் போராட்டமா? என எண்ணத் தோன்றுகின்றது.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர், அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் அள்ளிக் கொடுத்த ஆயிரமாயிரம் வாக்குகளுக்குப் பிரதிபலனாக ஐ.தே.க. இப்போது அதுவும், மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் அவரின் இடத்திற்கு இஸ்ஸத்தீனை நியமித்திருப்பது, அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் மீது ஐ.தே.க. கொண்ட அக்கறையினால் அல்ல என்பது வெள்ளிடை மலை.

இலங்கை முஸ்லிம் சமூகத்தின்



அதிகம் வட - கிழக்கு வாழ் முஸ்லிம்களின் அரசியல் உத்தரவாதப் பிரதேசம் எனச் சொல்லத் தக்க அம்பாறை மாவட்டத்தை, முஸ்லிம்களிடமிருந்து கைப்பற்றிவிடச் சிங்களப் பேரினவாதம் திட்டமிட்ட குடியேற்றம், ஆக்கிரமிப்பு என ஒடுக்கு முறைகளை முடக்கி விட்டு, 1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பு மூலம் அம்பாறை மாவட்டத்தின் மூன்று முஸ்லிம் பிரதிநிதித்துவத்துக்கு வேட்டு வைத்தனர். பொத்துவில், கல்முனை, அம்பாறை தொகுதிகளில் இருந்து தெரிவாகும் மூன்று நிச்சயமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிகள் இவ் அரசியல் அமைப்பு மூலம் இல்லாமல் ஆக்கப்பட்டது. அதன் காரணமாக 1989ஆம் ஆண்டைய பொதுத் தேர்தல்களிலும், அதேபோன்று 1994ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களிலும் மு.கா. உச்ச வளர்ச்சி அடைந்திருந்த போதிலும், மூன்று முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை அம்பாறை மாவட்டத்திலிருந்து பெற முடியாமல் போனது.

மு.கா.வினால் 03 பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற முடியாமல் போனமைக்கு விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையின் மூலம், ஐ.தே.க. தமது முஸ்லிம் தரகர்கள் மூலம் வாக்குகளைத் தந்திரமாகத் திரட்டி எடுத்துத் தமது பாராளுமன்ற ஆசனங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மேற்கொண்ட தரகு வேலை அரசியல் வழிமுறைகளே பிரதான காரணம்.

ஐ.தே.க. தன்னுடைய ஏமாற்று அரசியல் சதியினைத் தொடர்வ-தற்கான நவீன ஆயுதமாக இஸ்ஸத்தீனைத் தேர்ந்தெடுத்துள்ளது. இன்னும், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்குச் சுமார் மூன்று, நான்கு மாதங்கள் உள்ள போது ஐ.தே.க. அம்பாறை மாவட்டப் பிரதிநிதியாக இஸ்ஸத்தீனை நியமித்திருப்பது எதிர்வரும் தேர்தலில், மீண்டும் 03 சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள அரசியல் நாடகம்.

ஐ.தே.கட்சியின் இவ் அரசியல் திருவிளையாடலுக்கான முழுக் குற்றச்சாட்டுக்களையும் பேரினவாத ஐ.தே.க. மீது மட்டும் சுமத்திவிட முடியாது. மு.காவும், அதன் தலைமைத்துவமும் பாராளுமன்ற அரசியல் வழிமுறைகளில் நின்று விட்டுவரும் தீர்க்க தரிசனமற்ற அரசியல் தவறுகளுமே இதற்கான மற்றொரு காரணம்.

சேகு இஸ்ஸத்தீன், மு.கா. ஸ்தாபிக்கப்படுவதில் முன்னோடியாக இருந்ததுடன், மு.கா. தவிசாளராகவும் பணியாற்றயவர். 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட அஷ்ரஃப் தயங்கிய போதும், அத் தேர்தலில் காங்கிரசைப் போட்டியிட வைத்தது, முஸ்லிம் மக்களுக்கு மு.காவின் விலாசத்தை அறிவித்தவர். அத் தேர்தலில் போட்டியிட்டதன் நிமித்தமே அதனை அடுத்து வந்த 1989ஆம் ஆண்டுப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் எதிர்பாராதவிதமாக 04 பாராளுமன்ற உறுப்பினர்களை மு.காவினால் பெற்று முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தைத் தோற்றுவிக்க முடிந்தது.

பிரேமதாச ஆட்சிக் காலத்தில் மு.கா. எதிர்க் கட்சி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு பிரேமதாசவின் படுகொலை ஆட்சிக்கு ஆதரவு வழங்கி வந்தது. மு.கா. பிரேமதாசவுடன் கைகோர்த்து நின்றபோதே, தெஹியத்தைக் கண்டிய போன்ற இதர மாவட்டச் சிங்கள எல்லைகள், அம்பாறையுடன் இரவோடு இரவாக இணைக்கப்பட்டுச் சிங்கள விகிதாசாரம் அம்பாறையில் அதிகரிக்கப்பட்டது.

பிரேமதாசவின் நண்பனாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்ட அஷ்ரஃப் அக்கால கட்டத்தில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் போது, அடுத்த ஜனாதிபதியும் பிரேமதாசவே, அவருக்கு எமது ஆதரவு எப்போதும் உண்டு" எனப் பகிரங்கமாக அறிவித்தார்.

இவ்வறிவித்தலானது, கட்சியின் தீர்மானமின்றி அஷ்ரஃப்பின் தனிப்பட்ட தீர்மானத்தின் முடிவு என்பதைச் சுட்டிக் காட்டி, மறுப்பறிக்கை விட்டமைக்காக, எத்தகைய நியாயமுமில்லாமல் ஒரு தலைப்பட்சமாக இஸ்ஸத்தீன் மு.கா.-விலிருந்து துாக்கி வீசப்பட்டார். பின்னர் இஸ்ஸத்தீன் தலைமையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சி என்ற அரசியல் கட்சி தாபிக்கப்பட்டது.

இஸ்ஸத்தீன் பேரினவாத முகாமுக்குள் புகுந்து கொள்வதற்கான பாதையை அமைத்துக் கொடுத்தவர் அஷ்ரஃபே. ஏனெனில், பிரேமதாசவுக்கு ஆசி வழங்குவது, அஷ்ரஃப்பினுடைய தனிப்பட்ட விருப்பமானால் அதற்குக் கட்சியினைப் பயன்படுத்தியிருக்கக் கூடாது. தனிப்பட்டவரின் முடிவைத் தட்டிக் கேட்டால், தன்னுடைய அதிகார மமதையைப் பயன்படுத்திக் கட்சியை விட்டு வெளியேற்றுவதற்குத் தலைவருக்கு முடியுமென்றால், கட்சிக்குள் ஜனநாயகமே இல்லை என்பதே யதார்த்தம்.

அதுபோல, 1994ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகளின் மூலம் கிடைக்கபெற்ற தேசியப் பட்டில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை முஸ்லிம் காங்கிரசின் வளர்ச்சியிலும், ஸ்தாபித்ததிலும் எவ்வித பங்கும் பெறாத, முஸ்லிம் அல்லாத அசித்த பெரேராவுக்கு வழங்கியதானது, எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். மு.கா. இப்பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை, அப்போது பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கப் பெறாத அல்லது கிடைக்கச் சாத்தியமற்ற பகுதி மக்களுக்கு வழங்க முன்வந்திருக்க வேண்டும்.

மு.காங்கிரஸ், பொ.ஐ.மு. ஆட்சியில் பங்காளியாய் அமர்ந்து மேற்கொண்டு வரும் அபிவிருத் திட்டங்களிலும், பதவிப் பகிர்ந்தளிப்புகளிலும் சில பிரதேசங்கள் புறக்கணிக்கப்படுவதாக எழும் குற்றச்சாட்டுக்களும் பூரணமாக நிராகரிக்க முடியாதவை என்பது மட்டுமல்லாமல், நமது ஆட்சி அதிகாரங்களைப் பயன்படுத்த அப்பிரதேசங்களில் நிலவும் குறைபாடுகளையும், தேவைப்பாடுகளையும் நிவர்த்தி செய்ய முன்வரவில்லை.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனைத் தொகுதியிலிருந்து மீண்டும் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுவதால், ஏனைய பிரதேச மக்கள் மத்தியில் ஒருவித சலிப்பும், பிரதேச வாதங்களும் தலைதுாக்கியது. இதனை நன்கு உணர்ந்தும், மு.கா. தலைமைத்துவம் சுழற்சி முறையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை வழங்க முன்வராமை.

இத்தகைய அரசியல் தவறுகளைக் கடந்த காலங்களில் விட்டு விட்டு, இஸ்ஸத்தீன் ஐ.தே.கவினால் பாராளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்று ஓரிரு வாரங்களுக்குள்ளேயே, அதே ஊரைச் சேர்ந்த அதா உல்லாவைப் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கும் எண்ணம் தலைவருக்கு எங்கிருந்து உதித்ததோ எனத் தெரியாது. மக்களின் கண்களில் மண் துாவும் விதமாக 04 மாதங்களுக்குப் பாராளுமன்றக் கதிரையினை வழங்குவதனால் தலைவரை யாரும் தலையில் துாக்கி வைக்கப்போவதில்லை.

இதே பாணியில், இன்னொரு தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரையும், தலைவர் பதவி விலகுமாறு பணித்து, மு.கா.வின் போக்கில் அதிருப்தி அடைந்து வெறுப்பைக் காட்டியிருக்கும் அம்பாறை மாவட்டத்தின் பிரதேசமொன்றுக்கு வழங்கப் போவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தன்னால் கண் துடைப்புக்காக வழங்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான அதா உல்லாவின் வரவேற்பு



வைபவம் அக்கரைப்பற்றில் நடைபெற்ற போது, மக்கள் கற்களை வீசி வெறுப்பினைத் தெரிவித்திருக்கின்றார்கள். இதே நிலையே ஏனைய பிரதேசங்களிலும் நிகழும் சூழ்நிலை காணப்படுகின்றது.

எனவே மு.கா. தலைமைத்துவம் இத்துடனேயே இப்பாராளுமன்றக் கதிரை விளையாட்டினை நிறுத்தி, எதிர்வரும் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்கப்பெறாத பிரதேசங்களுக்கும், சாத்தியமற்ற பிரதேசங்களுக்கும் சுழற்சி முறையின் அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு வழங்கி, அப்பிரதேசத்தில் நிலவும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான உறுதி மொழியினை இப்போதே வழங்க வேண்டும். அதுவே மு.காவின் அரசியல் போக்கில் நம்பிக்கை ஊட்டி, முஸ்லிம் வாக்குகள் சிதறடிக்கப்படாமல் பாதுகாப்பதற்கான பணியாக அமையும்.

**ஸிபான் ஷரா**

# மட்டு. கல்வித் திணைக்கள இடமாற்றங்கள்: கஷ்டப்பிரதேசத்தில் 9 வருடங்கள் பணியாற்றியவருக்கு மீண்டும் இடமாற்றம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த வருட ஆரம்பத்தில் கல்வித்திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றங்கள் பலத்த சர்ச்சைகளையும் எதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளன.

6 வருடங்களுக்கு அதிகமாக நகர்ப் புறங்களிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களை கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு (கஷ்டப் பிரதேசம் என்று இங்கு அனைவராலும் தெரிவிக்கப்படுவது பெரும்பாலும் இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசங்களைத் தான்.) இடம் மாற்றுவதாக தெரிவிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இடமாற்ற உத்தரவுகளில், பெருமளவு முறைகேடுகளும் அதிகார துஷ்பிரயோகங்களும், பழிவாங்கல்களும் இடம்பெற்றுள்ளதாக புகார் கூறப்படுகின்றது.

இவ்வாறு கஷ்டப் பிரதேசங்களுக்கு இடமாற்றம் கிடைக்கப் பெற்ற மூன்று ஆசிரியர்கள் பல்வேறு காரணங்களுக்காக கல்வித் திணைக்கள அதிகாரிகளினால் தாம் பழிவாங்கப்பட்டதாகத் தெரிவித்து அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்கள்.

வேறு சில ஆசிரியர்கள் தமது இடமாற்ற உத்தரவுகள் மனிதாபிமான வரையறைக்கு அப்பாற்பட்ட வகையில் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இடமாற்ற உத்தரவுகளை இடைநிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மற்றும் சிலர் தமக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைக்கு சமூகமளிக்காது மருத்துவச் சான்றிதழ் சமர்ப்பித்து வருகின்றார்கள்.

இந்த இடமாற்றங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த பலரும் இந்த இடமாற்றங்களில் சரியான பொதுவான நடைமுறை எதுவும் மட்டக்களப்பு வலயக்கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவில்லை என்றே தெரிவிக்கின்றார்கள்.

சாதாரணமாக 6 வருடங்களுக்கு அதிகமாக் நகரிலும், நகர்சார்ந்த பிரதேசங்களிலும் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு, கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்குவது என்ற அடிப்படையிலேயே இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இந்த அடிப்படை நடைமுறை சரியான முறையில் சில ஆசிரியர்கள் விடயத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டுக்கள் பரவலாகத் தெரிவிக்கப் படுகின்றது.

உதாரணமாக மட்டக்களப்பு மெதடிஸ்த கல்லுாரியில் கடமையாற்றிய ஸ்ரீதரன் என்ற ஆசிரியர் கஷ்டப்பிரதேசமான கொத்தியாவல என்ற இடத்திலுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். ஆனால் இந்த ஆசிரியர் ஏற்கெனவே 9 வருடங்கள் கஷ்டப்பிரதேசம் ஒன்றில் பணியாற்றியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று மட்டு. கல்லடி உப்போடை விவேகானந்தா பெண்கள் பாடசாலையில் கடமையாற்றிய திருமதி ராஜகோபால் என்ற ஆசிரியை கித்துள்வெவ என்ற எல்லைக் கிராம பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த ஆசிரியை ஏற்கெனவே கஷ்டப் பிரதேசமொன்றில் 3 வருடங்களும், வெளி மாவட்டம் ஒன்றில் 3 வருடங்களும் கடமையாற்றி உள்ளார்.

மட்டு.கோட்டைமுனை கனிஷ்ட வித்தியாலயத்தில் கடமையாற்றிய திருமதி அழகையா என்ற ஆசிரியை தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் வயதை அடைந்துள்ள காலத்தில் நகரில் இருந்து பல கி.மீ. தொலைவில் உள்ள இலுப்படிச்சேனை கிராமத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

தனது 8 வருட சேவைக்காலத்திற்குள் 4 தடவைகள் இடமாற்றம் பெற்றுள்ள சுரேஷ் ஆனந்தன் என்ற ஆசிரியர் மறுபடியும் ஒரு இடமாற்றத்தைப் பெற்றுள்ளார்.

இதேபோன்று மட்டு. வலயக் கல்வி அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களில் பல குற்றச்சாட்டுக்கள், ஆசிரியர்களால் சுமத்தப்படுகின்றன.

இந்த இடமாற்றங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஒரு ஆசிரியர், 'கல்வித் திணைக்கள அதிகாரிகளின் உறவினர்களுக்கும், அதிகாரிகளுக்கு நெருக்கமானவர்களுக்கும் இதுவரை எந்தவித இடமாற்ற நிர்பந்தங்களும் ஏற்படவில்லை என்றும், குறிப்பிட்ட ஒரு கல்வித்திணைக்கள அதிகாரியின் உறவினர் ஒருவர் தனது நியமன காலம் முதல் சுமார் 18 வருடங்கள் அவரது வீட்டிற்கு அருகில் உள்ள பாடசாலையில் பணியாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

மற்றுமொரு ஆசிரியர் கருத்துத் தெரிவிக்கையில் 'அண்மையில் இடம்பெற்ற இடமாற்றங்களில் பல தனிப்பட்ட காழ்ப்புணர்வு காரணமாக கல்வித்திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார்.

இந்த விடயம்பற்றி இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்தின் மாவட்டச் செயலாளரான தயானந்தன் கருத்து தெரிவிக்கையில் 'இந்த இடமாற்றங்கள் மூலம் தமது நியமன காலத்தில் இருந்து கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றி வரும் பல ஆசிரியர்களுக்கு நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு....

19

நன்றி - நூலகத்திட்டம்



# கப்டன் மொனாஸ் என்ற பீரிஸ் மார்ட்டினும் முஸ்லிம் விரோதத்துக்கான அரச சதியும்!

சரிநிகர் இதழின் கடந்த வெளியீட்டில் 'ஜிகாத் விடுதலைப் படை வழங்கிய தண்டனைகள்' என்ற தலைப்பில் இடம்பெற்ற செய்திக்கட்டுரை பற்றி பல்வேறு விமர்சனங்கள் எனக்குக் கிடைத்துள்ளன.

பாராட்டுக்களும், கண்டனங்களும், திருத்தங்களும், எச்சரிக்கைகளும், அவற்றுள் அடங்கும்.

ஆனால், விமர்சனங்களைத் தெரிவித்த அனைவரும் 'ஜிகாத் விடுதலைப் படை' என்று ஒரு தலைமறைவு முஸ்லிம் இயக்கம் கிழக்கு மாகாணத்தின் பல கிராமங்களிலும் இயங்கிவருவதை மறுக்கவில்லை.

இந்த 'ஜிகாத்' இயக்கம் பற்றியும், அதன் செயற்பாடுகள் பற்றியும், பொதுமக்களும், உள்ளூர் தலைவர்களும் தெரிவித்த கருத்துக்களைப் பார்க்கும் முன்பு, கிழக்கு வாழ் முஸ்லிம் இளைஞர்களிடையே 'ஜிகாத்' அமைப்பு போன்ற ஆயுத குழுக்கள் உருவாகிய சரித்திரத்தை சற்றுப் புரட்டிப் பார்க்கவேண்டியது அவசியமாகின்றது.

ஆரம்ப காலங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொண்டர்களாவும், பிரதான தேசிய கட்சிகளின் தொண்டர்களாகவும், இருந்து முஸ்லிம் இளைஞர்கள் இலங்கை அரசியலில் தமது பங்களிப்பைச் செலுத்திவந்தனர்.

தமிழர்களது விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக வடிவெடுக்க ஆரம்பித்த காலகட்டங்களில் சில முஸ்லிம் இளைஞர்களும் அதில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அந்தச் சந்தர்ப்பங்களில் தமிழ் இயக்கங்களும், முஸ்லிம் இளைஞர்களை தம்முடன் இணைத்துக் கொள்வதில் தயக்கம் காண்பிக்கவில்லை.

ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தைத் தொடர்ந்து இஸ்ரேலின் 'மொஸாட்' அமைப்பின் ஆலோசனையின் பெயரில், 'மொஸாட்' இடம் இராணுவப் பயிற்சிபெற்ற ஸ்ரீலங்கா பாதுகாப்பு படையினரின் தீவிரவாத எதிர்ப்பு செயற்திட்டங்கள், ஒரு இன அழிப்பு முறைக்கு ஒத்ததாக மாற்றமடைய ஆரம்பித்த போது தான், கிழக்கு மாகாணத்திலிருந்த ஒரு சில முஸ்லிம் பிரமுகர்களும், அரசியல் வியாபாரப் புள்ளிகளும் முதன் முதலாக தமிழ் அமைப்புக்கள் பற்றிய ஒரு மாற்றுப்போக்கை கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள்.

ஸ்ரீலங்கா அரச படைகள் தமிழ் இளைஞர்கள் விடயத்தில் கடும் போக்கை கடைபிடிக்க ஆரம்பித்த காலகட்டத்தில், தமிழ் பேசும் தரப்பு என்ற ரீதியில், அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் மீதும் அரச படைகளின் கொடிய அடக்கு முறைகள் பிரயோகிக்கப்பட்டுவிடுமோ என்று பயந்த அந்த முஸ்லிம் பிரமுகர்கள், தாங்கள் தமிழ் இளைஞர்களின் போராட்டத்திற்கு ஆதரவு இல்லை என்பதை அரச படைகளுக்குக் காண்பிக்க, தமிழர் போராட்டத்திற்கு எதிரான கருத்துக்களை வெளிப்படையாக தெரிவிக்க ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஒரு பகுதி முஸ்லிம்களின் அரசு சார்பு நிலை, காலத்தின் கட்டாயத்தால் இடைநடுவில் அவர்களை தீவிர தமிழ் எதிர்ப்புவாதிகளாக மாற்றியது.

ஒரு கட்டத்தில் ஜே.ஆர். அரசின் புத்திசாலித்தலைமை முஸ்லிம்களையும், தமிழர்களையும் கிழக்கில் நிரந்தரமாக பிரித்துவிடும் சூழ்ச்சியில் இப்படிப்பட்ட முஸ்லிம் தலைமைகளை நன்றாக பயன்படுத்த ஆரம்பித்தது.

ஊர்காவல் படை என்ற பெயரில் பெருமளவு முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுதப்பயிற்சி வழங்கி அவர்களை தமது இராணுவத்துடன் இணைத்து செயற்படவைத்தது. வேதனத்திற்காக வேலைக்குப்போன முஸ்லிம் இளைஞர்கள், தாம் தந்திரமாக ஒரு இன அழிப்பிற்கான குற்றச்சாட்டை தாங்கிநிற்க வைக்கப்படப்போகின்றோம் என்று அறியாமல், இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டனர்.

இந்தக் காலகட்டத்திலேயே தமது விடுதலைப் போருக்கு எதிராக செயற்பட்டவர்களையும், அரச படைகளுடன் இணைந்து செயற்பட்டவர்களையும், துரோகிகள் என்று பெயரிட்டு தமிழ் இயக்கங்கள் தண்டனை கொடுத்து வந்தன.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்று குற்றம்சுமத்தி தமது சொந்த தந்தைகளைக் கூட களையெடுத்த இயக்க உறுப்பினர்கள், இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட முஸ்லிம் இளைஞர்களையும் விட்டுவைக்கவில்லை.

முஸ்லிம் தரப்பினர் மீது தமிழ் இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்ட களையெடுப்புக்கள் நாளடைவில் முஸ்லிம்கள் மீதான தமிழர்களின் அத்துமீறல்களாகச் சித்திரிக்கப்பட்டு ஈற்றில் இரு இணங்களுக்கு இடையேயான கலவரமாக 1985ம் ஆண்டு வடிவெடுத்தது.

இந்த முஸ்லிம் தமிழ் கலவரத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் கைகள் இரண்டு தரப்பினரிடையேயும் ஊடுருவி, தூபமிட்டு பிரச்சினை முடிந்துவிடாது கவனமாகப் பார்த்துக்கொண்டன.

இராணுவத்திலும், பொலிசிலும் உயர்பதவி வகித்த சில முஸ்லிம் அதிகாரிகள் கிழக்கின் பல பகுதிகளிக்கும் அனுப்பப்பட்டு, அரச படைகளால் நடத்தப்பட்ட பல தாக்குதல்கள் அந்த முஸ்லிம் அதிகாரிகளாலேயே திட்டமிட்டு நடத்தப்பட்டன' என்று தமிழர்களை நினைக்கத் தூண்டும்படியான சம்பவங்களும், கச்சிதமாக திட்டமிட்டு நடாத்தப்பட்டன.

தமிழ், முஸ்லிம் எல்லைக் கிராமங்களில் முஸ்லிம் இளைஞர்களை திரட்டிய சில பாதுகாப்பு படை அதிகாரிகள் அவர்களுக்கு பெற்றோல் குண்டுகள், 303 துப்பாக்கிகள் போன்றவற்றை விநியோகித்து, தமிழ் கிராமங்கள் மீது தாக்குதல் நடாத்தும்படி கேட்டுக்கொண்டனர்.

தமிழ் இயக்கங்களின் உள்ளூர் பொறுப்பாளர்களும், முஸ்லிம் பகுதிகள் மீதான தமிழர்களின் தாக்குதல்களுக்கு மறைமுக ஒத்தாசை வழங்கினர். 1985ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற கலவரம்தான் முஸ்லிம் இளைஞர்களை முழு அளவிலான அமைப்பு ரீதியிலான ஒரு ஆயுத குழுவாக உருவாக்க காரணமாக அமைந்தது எனலாம்.

இந்த கலவரத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்களும் மத, அடிப்படைவாத கொள்கைகள் உள்ள மற்றும் அரசியல் ஈடுபாடுள்ள முஸ்லிம் இளைஞர்கள் பலரும் இணைந்து, கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் உருவாக்கிய இயக்கம்தான் இந்த 'ஜிகாத் விடுதலை அமைப்பு'.

தமிழ் முஸ்லிம் இனங்களுக்கிடையேயான ஒற்றுமை, கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அரசாங்கத்திற்கு எப்பொழுதுமே அச்சுறுத்தலாகவே இருந்து வந்துள்ளது.

முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்களுக்கு தமிழ் இயக்கங்களே பொறுப்பு என்று முஸ்லிம் மக்களை நம்பவைப்பதிலும் தமிழர் மீது இராணுவம் மேற்கொள்ளும் இன அழிப்பு வன்முறைக்கு, இராணுவத்தை வழிநடாத்தும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த அதிகாரிகளே காரணம் என்று தமிழர் தரப்பை நம்பவைப்பதிலும் அரசாங்கம் கவனமாகச் செயற்பட்டு வந்தது.

இதற்கு அண்மையில் வெளிச்சத்திற்கு வந்த ஒரு சம்பவத்தையும் இச்-சந்தர்ப்பத்தில் பார்த்துவிடுவது பொருத்தமாக இருக்கும். 1990ம் ஆண்டு 2ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானதைத் தொடர்ந்து மட்டக்களப்பை கைப்பற்றிய இராணுவம் தமிழ் இளைஞர்கள் பலரை கொலை செய்து 'டயரில்' போட்டு எரியூட்டியது. கிழக்கு பல்கலைக்கழகத்தில் அகதிகளாக இருந்த - 168 தமிழர்கள் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போனார்கள்.

இதேபோன்று தன்னாமுனை, சத்துருக்கொண்டான், குடியிருப்பு போன்ற கிராமங்களும் இராணுவத்தினால் சுற்றிவளைக்கப்பட்டு குழந்தைகள், பெண்கள் உட்பட பலர் அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் காணாமல் போயுள்ளார்கள்.

இப்படியான பல அப்பாவித் தமிழ் மக்கள் காணாமல்போன சம்பவங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு மட்டக்களப்பு, வாழ் மக்களிடம் பரவலாக பேசப்பட்ட ஒரு பெயர் 'கப்டன் மொனாஸ்' ஆகும்.

இலங்கை இராணுவத்தில் 1990ம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட இராணுவ புலனாய்வு பிரிவில் (Military Intelligence Corps) மட்டக்களப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்பட்ட கப்டன் மொனாஸ், மட்டக்களப்பில் இடம்பெற்ற சுற்றி வளைப்புகளில் கலந்து கொண்டு, இராணுவத்தினாரால் சுற்றிவளைத்து திரட்டிவரப்பட்ட மக்கள் முன்பு உரையாற்றும்போது, "நான் ஒரு முஸ்லிம்; அல்லாவைத்தவிர வேறு எவருக்கும் பயப்படமாட்டேன்" என்று தவறாமல் தெரிவிப்பார்.

'கப்டன் மொனாஸ்' என்ற பெயர் அக்காலங்களில் அதுவும் குறிப்பாக தமிழ், முஸ்லிம் உறவுகளில் என்றுமில்லாத அளவு விரிசல்கள் ஏற்பட்டிருந்த 1990ம் ஆண்டு காலப்பகுதிகளில், சாதாரண தமிழ் மக்களிடையே பயத்துடனும், வெறுப்புடனும் பிரசித்தி பெற்றிருந்தது.

ஆனால், இவ்வளவிற்கும், 'கப்டன் மொனாஸ்' என்பவர் ஒரு கிறிஸ்தவர். காலிப்பிரதேசத்தைச் சேர்ந்த இவரது



உண்மை பெயர் 'பீரிஸ் மார்ட்டின்' என்று பின்னர் தெரியவந்தது அனைவரையும் ஆச்சரியப்படவைத்தது.

அரச படைகள் மீது தமிழ் மக்களுக்கு இயல்பாகத் தோன்றக் கூடிய வெறுப்புணர்வுகளை, முஸ்லிம்கள் மீது திருப்பிவிடுவதில் அரசாங்கம் எவ்வளவு திட்டமிட்டு செயற்பட்டது என்பதற்கு ஒரு உதாரணம் தான் 'கப்டன் மொனாஸ்' - என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள்.

இனி ஜிகாத்' அமைப்பு பற்றிப் பார்ப்போம்.....

ஐ.தே.கட்சி அரசின் ஆசியுடன் உருவெடுத்து இயங்கிவந்த ஜிகாத் அமைப்பு இஸ்லாமிய மத கட்டுப்பாடுகளை முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் அமுல்படுத்தி, இஸ்லாமிய விழுமியங்களைப் பாதிக்கும்படியான சக்திகளை களைந்தெறிந்து செயலாற்றியவந்த அதேவேளை, இவ் அமைப்பின் ஒரு பிரிவினர் முஸ்லிம்களின் விடுதலை என்ற பெயரில் தமிழ் விரோத நிலைப்பாட்டிலும் செயற்பட்டு வந்தனர்.

முஸ்லிம் கிராமங்களுக்குள் செல்லும் தமிழர்களை கடத்துவது, எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழர் வீடுகளை சூறையாடுவது என்ற செயற்பாடுகளையும் இப்பிரிவினர் செய்து வந்தனர்.

கிழக்கில் சிறு சிறு குழுக்களாக இயங்கிவந்த தமிழ் இயக்கங்கள் அரச படைகளின் பின்பலத்துடன் செயற்பட்டு வந்த இந்த ஜிகாத் அமைப்பின் மீது பாரிய அளவில் விரோதம் காண்பித்தபோதும், அக்காலகட்டத்தில் அரச படைகளின் கைகள் முஸ்லிம் பிரதேசங்களில் ஓங்கிக் காணப்பட்டதன் காரணமாக எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருந்தனர்.

இந்தியப்படைகளின் வருகையின் பின்னர்தான். 'ஜிகாத்' அமைப்பின் மீது முழு அளவிலான நடவடிக்கையில் தமிழ் இயக்கங்கள் ஈடுபட முடிந்தது.

1987ம் ஆண்டு மட்டக்களப்பு காத்தான்குடிப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்த புலிகள் ஜிகாத் அமைப்பின் உறுப்பினர் மீதான பாரிய தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதேபோன்று ஒரு தேடுதல் நடவடிக்கை இதே காலகட்டத்தில் அம்பாறை மாவட்டத்திலும், ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டது.

இந்தியப்படை சிப்பாய்களுக்கு சாதாரணமாகக் காணப்பட்ட பாகிஸ்தான் விரோத உணர்வு, தமிழ் இயக்கங்களது இந்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும்படி அவர்களைத் தூண்டியது. இதன்பின்னர் இந்தியப்படைகளுக்கும், புலிகளுக்கும் இடையே யுத்தம் மூண்ட பின்பு, இந்தியப்படைகளின் முஸ்லிம் விரோத போக்கினால் கிளர்ந்தெழுந்த முஸ்லிம் இளைஞர்கள் பாரிய அளவில் புலிகளுடன் இணைந்து கொண்டனர். அதேவேளை 'ஜிகாத்' அமைப்பிலும் பல இளைஞர்கள் இணைந்து செயற்பட ஆரம்பித்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையை பாதுகாக்கவென்று அமைக்கப்பட்ட மக்கள் தொண்டர் படை (Civil Volunteer Force) இலும் பல முஸ்லிம் இளைஞர்கள் சேர்க்கப்பட்டு திருகோணமலையில் அவர்களுக்கான ஆயுதப் பயிற்சியை இந்தியப்படையினர் வழங்கினர்.

இவ்வாறு நவீன ஆயுதங்களை கையாள பயிற்சிபெற்றவர்களில் பல இளைஞர்கள் 'ஜிகாத்' விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் என்ற பின்னர் தெரியவந்தது. பயிற்சி முடித்துவந்த பல இளைஞர்கள் தலைமறைவாகிய பின்னர் தான் இந்த சந்தேகம் நிரூபணமானது.

பின்னர் இந்தியப்படை வெளியேறி, மற்றைய தமிழ் இயக்கங்கள் விரட்டியடிக்கப்பட்டு அதிகாரத்திற்கு வந்த புலிகள், ஜிகாத் முஸ்லிம் அமைப்பிற்கு எதிராக மற்றொரு நடவடிக்கையை ஆரம்பித்தனர்.

புலிகள் அமைப்பில் இணைந்திருந்த முஸ்லிம் உறுப்பினர்களே இந்த நடவடிக்கையில் முன்னின்று செயலாற்றியது குறிப்பிடத்தக்கது.

1989ம் ஆண்டு கல்முனை பகுதியில் புலிகள் மேற்கொண்டிருந்த தேடுதல் நடவடிக்கையில், இராணுவப் பயிற்சிபெற்ற பல ஜிகாத் உறுப்பினர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் பதுக்கிவைத்திருந்த பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

கொழும்பிலிருந்து மட்டக்களப்பிற்கு வரும் புகையிரதம் வாழைச்சேனை காகித ஆலையை அண்டிய புலிகளின் சோதனை நிலையத்தில் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்யும் ஜிகாத் பயிற்சி பெற்றவர்கள் என்று சந்தேகிக்கப்படும் உறுப்பினர்கள், புலிகளின் முஸ்லிம் உறுப்பினர்களால் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டார்கள்.

ஆனால், இந்தக் காலப்பகுதியில் புலிகளால் கைதுசெய்யப்பட்ட ஜிகாத் அமைப்பினர் எவரும், தண்டிக்கப்பட்டதாக தகவல்கள் இல்லை. அனைவரும் விசாரிக்கப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டு பின்னர் விடுக்கப்பட்டுள்ளார்கள்.

இதன்பின்னர் 1990ம் ஆண்டில் பிரேமதாசா அரசுடனான புலிகளின் தேனிலவு முடிவடைந்து மீண்டும் சண்டைகள் ஆரம்பமான பின்னர், தமிழ் முஸ்லிம்களிடையேயான இன முறுகள் நிலை மேலும் விரிசலடைந்து, காத்தான் குடியிலும் ஏறாவூரியிலும் பல முஸ்லிம் பொதுமக்கள் கொலை செய்யப்பட்ட சம்பவங்களைத் தொடர்ந்து பெருமளவில் முஸ்லிம் இளைஞர்கள் ஜிகாத்' இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர்.

இந்தக்காலகட்டங்களில் 'ஜிகாத்' அமைப்பு தமிழ் மக்கள் மீது முழு அளவிலான துன்புறுத்தல்களையும், ஆட்கடத்தல், கொலை என்பனவற்றையும் மேற்கொண்டது.

ஸ்ரீலங்கா அரச ஆயுதப்படைகளின் ஒரு பிரிவினரான ஊர்காவல் படையில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து, ஆயுதப்பயிற்சிபெற்று, தாம் பெற்ற பயிற்சியை முழுவதுமாக தமிழ் மக்களிடமே காண்பித்த சம்பவங்கள் இப்பொழுதும் நினைவு கூரப்படுகின்றது.

இந்தக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகளும், முஸ்லிம் இளைஞர்கள் மீது தமது ஆயுதங்களை திருப்பியிருந்தனர்.

காத்தான்குடி பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களை பலவந்தமாக வெளியேற்றிய சம்பவம், மற்றும் இதேகாலப்பகுதியில் இந்தியா வில் இடம்பெற்ற பாபர் மசூதி மீதான இந்துத்துவ தீவிரவாதிகளின் ஆக்கிரமிப்பு போன்றவை பற்றி வெளி உலகில் மேற்கொள்ளப்பட்ட கடுமையான பிரச்சாரத்தினால், ஆசியாவில் உள்ள முஸ்லிம் இளைஞர்களுக்கு இராணுவ பயிற்சிகளையும், ஆயுத உதவிகளைம் வழங்க ஈரான், லிபியா போன்ற நாடுகள் முன்வந்தன.

இச்சந்தர்பத்தை கிழக்கு மாகாணத்தில் இயங்கிவந்த ஜிகாத் உறுப்பினர்கள் பயன்படுத்த தயங்கவில்லை என்றே நம்பப்படுகின்றது. ஏறாவூரை அடுத்துள்ள குடியிருப்பில் தமிழர்கள், பிரயாணம் செய்த பஸ்வண்டி மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கித்தாக்குதல், ஏறாவூர் பகுதியில் காகித ஆலை பஸ் வண்டி மீதும், கிழக்கு பல்கலைக்கழக பஸ்வண்டி மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் உட்பட பல தாக்குதல் நடவடிக்கைகள் ஆயுதப்பயிற்சி பெற்று பெருமளவில் நவீன ஆயுதங்களை தம்மிடம் கொண்டுள்ள ஜிகாத் அமைப்பினராலேயே மேற்கொள்ளப்பட்டவை என்றும் கூறப்படுகின்றது.

- நிராஜ் டேவிட்

(ஜிகாத் அமைப்பு பற்றியும், அதன் முன்னைய தற்போதைய செயற்பாடுகள் பற்றியும், பொதுமக்களும், அரசியல் பிரமுகர்களும் தெரிவித்த கருத்துக்களை சரிநிகர் வாசகர்களுடன் அடுத்த இதழில் பகிர்ந்து கொள்கிறேன்.)

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள இனவாதத்தின் அச்சுறுத்தல்!

1998ம் ஆண்டு முழுவதும் வளர்ச்சிபெற்று வந்த சிங்கள வர்த்தகர்களின் இனவாத அமைப்பான சிங்கள வீரவிதானவுக்கு சமனான மிகவும் உத்வேகமான சிங்கள - பௌத்த இனவாத அமைப்பொன்று 1999 வருட ஆரம்பத்தில் தோற்றம் பெற்றது. 1998 மார்ச் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட இவ் அமைப்பு பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கமாகும். 1999 ஜனவரி 10ம் திகதி "புலிகளை தோற்கடிப்பதற்கான வழி" என்ற பெயரில் பயங்கரவாதத்தை தோற்கடிக்கும் தேசிய திட்டமொன்று அவ் அமைப்பினால் வெளியிடப்பட்டது. அதன்படி யுத்தத்திற்கு காரணம் மிலேச்சத்தனமான புலிப் பயங்கரவாதிகளே. இந்த யுத்தத்தில் சிங்களவர்கள் வெற்றி பெற, பொது மக்களின் ஒன்றுபட்ட யுத்த கட்டமைப்பு ஒன்றை கட்டியெழுப்புவது அவசியம் என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. அனைத்து மக்களும் யுத்தத்திற்கு தயாராகுதல் வேண்டும். சிங்கள தேசியவாத அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஒரு முன்னணிக்குள் ஒன்று சேர வேண்டும். கல்வி மற்றும் கலை கலாசார செயற்பாடுகள் யுத்த செயற்பாட்டிற்கு உதவும் வகையில் மீளமைக்கப்படல் வேண்டும். விடுதலைப் புலிகளுக்கெதிரான தடை அதிகரிக்கப்பட்டு புலிகளுக்கு ஆதரவளிப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அவர்கள் அனைவருக்கும் விசேட அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். புலிகள் அமைப்பில் பிள்ளைகள் சேர்ந்தால் பெற்றோர்கள் அதற்குப் பொறுப்புக் கூறும் வகையில் செயற்பட வேண்டும்.

பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின் யுத்த திட்டத்தின் படி அரசின் அனைத்து சமாதான செயற்திட்டங்களும் நிறுத்தப்படல் வேண்டும். அரசின் ஊடகங்கள் யுத்த பிரச்சார இயக்கமொன்றை மேற்கொள்ள வேண்டும். இந்நிலை ஒரே தரத்தில் பின்பற்றப்படாத போதிலும் அரசின் பிரதான சமாதான செயற் திட்டமான வெண்தாமரை இயக்கம் நிறுத்தப்பட்டதுடன், அரச ஊடகங்கள் கிரமமாக யுத்தத்தின் பங்காளிகளாகின. இந்த யுத்தத் திட்டம் தொடர்பான கருத்தரங்குகள் வருடம் முழுவதும் நாட்டின் பல பகுதிகளில் ஒழுங்கு செய்யப்பட்டது. சிங்கள வீரவிதான மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கத்துக்கு இடையில் நெருங்கிய இணக்கப்பாடு வளர்ச்சி பெற்றது. இந்த இணக்கப்பாட்டினால் துரிதமாக செயற்படக் கூடிய அமைப்பு வலைப் பின்னல் சிங்கள - பௌத்த தேசியவாத இயக்கத்திற்கு கிடைத்தது. சிங்கள வீரவிதானவின் தேசிய திட்டம் 1999 ஜூன் மாதத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன்படி சிங்கள இனம் இலங்கையின் தீர்மானம் எடுக்கக் கூடிய இனமாக மாறியது.

மற்ற அனைத்து பிரஜைகளும் சிங்களவர்களின் நாட்டில் வாழும் இனக் குழுக்களாகும். இலங்கையின் பெயர் சிங்கள மொழியில் அமைய வேண்டும். அரச மொழி சிங்களம் மட்டுமாக அமைய வேண்டும். பௌத்த மதம் அரச மதமாகும். நாட்டின் தலைமைத்துவம் பரம்பரை வழிவந்த சிங்கள உரிமையுடையவர்களுக்கே உரித்தாக வேண்டும்.

இதற்கு பதிலாக சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தை ஸ்தாபிக்கும் நோக்குடன் மேலும் பல அமைப்புகள் தோன்றின. 1999 ஏப்ரல் 22ம் திகதி ஸ்தாபிக்கப்பட்ட 'சிங்கள தேசிய முன்னணி' இவ்வாறான ஒரு அமைப்பாகும். சிங்கள - பௌத்த தேசியவாத இயக்க பிரதானிகளாக பௌத்த பிக்குகள் பலர் அதன் முக்கிய குழுவில் செயற்பட்டு வந்தனர். புதிய செயற்பாடுகளை முன்வைத்த தேசிய சங்க சபை இதில் இன்னொன்றாகும். இந்த அனைத்து அமைப்புகள் மற்றும் முயற்சிகளின் அடிப்படையில் அரசியல் மேலாதிக்கத்தை கைக்கொள்ள வீரவிதான மற்றும் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தினால் இயலுமாக இருந்தது.

சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களுடனும் அவரது தலைமைத்துவத்துடனான இலங்கை தொழிலாளர் காங்கிரசுடனும் வருடம் முழுவதும் இந்த அடிப்படைவாத குழுக்கள் மோதலில் ஈடுபட்டு வந்தன. உண்மையில் இந்த எதிர்ப்புணர்வுகள் மலையக மக்களுக்கெதிரானதாக அமைந்தது. 1999 பெப்ரவரி 12ம் திகதி ஹட்டன் திக்கொய வைத்தியசாலையில் மருத்துவர் ஒருவருக்கும் இ.தொ.க. தலைவர் ஒருவருக்கும் இடையிலான மோதல் காரணமாக, இந்த சக்திகள் மலையகம் முழுவதும் இனவாத சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தது. அரசியல் பலம் மிக்கவர் ஒருவரும் அரச ஊழியருக்கும் இடையிலான மோதல் சிங்கள, தமிழ் மோதலாக மாற்றப்பட அத்திவாரம் இடுவதே இந்த சுவரொட்டி இயக்கத்தின் குறிக்கோளாகியது. 1999 ஏப்ரல் 30ம் திகதி இ.தொ.காவுக்கும் வீரவிதானவுக்கும் இடையில் பகிரங்கமாக மோதல் ஒன்று இடம்பெற்றது. இதற்கு அடுத்த தினமான மே 1ம் திகதி நுவரெலியாவில் நடைபெறவிருந்த இ.தொ.காவின் மே தின கூட்டத்தின் சுவரொட்டியின் மேல் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின் புலி எதிர்ப்பு சுவரொட்டி ஒட்டப்பட்டது மோதலுக்கு காரணமாகியது. இந்த மோதல் இறுதியில் மே தின கூட்டத்திற்கு வருகைத் தந்த தமிழ் தோட்ட தொழிலாளர்களுக்கு கல்லெறியும் அளவுக்கு சென்றது. இதற்கு எதிராக இ.தொ.கா. தலைவர் எஸ். தொண்டமான் சூடான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டார். சிங்கள - தமிழ் மோதலை தவிர்க்க முடிந்தாலும், மிகவும் சூடான நிலை உருவானது. பின்னர் இந்த பிரச்சினை தொண்டமான் அவர்களினால் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதுடன், சிங்கள அடிப்படைவாதிகள் அவருக்கெதிரான இயக்கமொன்றை நாடு முழுவதும் பிரச்சாரப்படுத்தினர். தொண்டமான் எதிர்ப்பு இயக்கம் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது. அத்துடன் மே மாதத்தில் தலைநகர் கொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கெதிராக பிரபல பிரச்சார இயக்கம் ஒன்று இச்சக்திகளினால் மேற்கொள்ளப்பட்டது. தமிழ் விஸ்தரிப்பு வாதம் இருப்பதாகவும், கொழும்பு தமிழர்கள் லட்சக்கணக்கில் காணிகளைக் கொள்வனவு செய்து வசித்து வருவதாகவும் சுவரொட்டி இயக்கத்தினால் சுட்டிக் காட்டப்பட்டது.

"கொழும்பு தமிழ் விஸ்தரிப்பு வாதத்தை நிறுத்து" என்பது பிரதான தொனிப் பொருளாகியது. இந்த இயக்கம், கொழும்பு இ.தொ.கா. அலுவலக பாதுகாப்பு அதிகாரிகளை விரட்டி, அவ் அலுவலக வளவுக்குள் நுழைந்து இ.தொ.கா. கொடியை கீழ் இறக்கி எரித்து அதற்குப் பதிலாக வீரவிதான கொடி ஏற்றப்பட்டதுடன் உச்சநிலையை அடைந்தது. இந்த வன்முறைக்கு எதிராக தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் இ.தொ.க. ஜூன் 10ம் திகதி கொழும்பில் ஒழுங்கு செய்த எதிர்ப்பியக்கம் பொலிசாரினால் தடை செய்யப்பட்டது. 1999 ஜூலை மாதத்தில் நுவரெலியாவில் மற்றும் சில இடங்களில் இந்த அடிப்படைவாத குழுக்கள் நாடு முழுவதும் சமாதான கீதம் இயற்றிய குழுவுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தினர். சமாதான முயற்சிகளுக்கு எதிராக பலத்த வார்த்தைப் பிரயோகங்களில் ஈடுபடுதலை வழமையாகக் கொண்ட இந்த சமாதான விரோத சக்திகள், புலிகளுடன் பேச்சுவார்த்தை தீர்வை ஏற்படுத்த யோசனை தெரிவித்த வர்த்தக பிரஜைகளின் முயற்சிகளையும் இழிவுபடுத்தினர். 1999 செப்டெம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையின் மூலம் இந்த வர்த்தகப் பிரஜைகள் இனத்துரோகிகள் எனச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தனர். வர்த்தக பிரஜைகளின் சமாதான முயற்சியில் முக்கியமானவரான செலிங்கோ நிறுவன தலைவர் லலித் கொத்தலாவலவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த அவர்கள், சிலிங்கோ நிறுவனத்துக்கு எதிராக அந்நிறுவனத்தின் பொருட்கள் சேவைகளை பகிஸ்கரிக்கப் போவதாக பயமுறுத்தல் விடுத்தனர். 1999 செப்டெம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமவாயப்பு சட்ட மசோதாவுக்கு எதிராக இன அடிப்படையில் ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்து இந்தச் சக்திகள் பிரதான இடத்தைப் பெற்றன. அம்மசோதாவுக்கு எதிராக பாடசாலை மாணவர்கள் முஸ்லிம் இன விரோத கோஷங்களுடன் வீதிக்குக் கொண்டு வரப்பட்டனர். அம்மாதத்தில் புலிகளினால் அம்பாறை மாவட்டத்தில் சிங்கள மக்கள் படுகொலைக்குள்ளானது இந்த அனைத்து சக்திகளுக்கும் பலத்த ஊக்கத்தை நல்கின. செப்டம்பர் 22ம் திகதி கொழும்பு பொரளையில் சிங்கள வீரவிதான, பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம், தேசிய மகா சங்கத்தினர் சபை, தேசிய இணக்கப்பாட்டு முன்னணி மற்றும் பௌத்த இளைஞர் சங்கம் ஒன்றிணைந்து எதிர்ப்பு கருத்தரங்கு நடாத்தியது இதன்படியேயாகும். அடிக்கடி சுவரொட்டி இயக்கத்தில் ஈடுபட்ட இந்த சக்திகள் பிரபாகரன், தொண்டமான் மற்றும் அஷ்ரஃப் ஆகிய தலைவர்கள் மூவரை தமது இலக்காகக் கொண்டனர். இதற்குப் பதிலாக இராணுவத்தில் இணையுமாறு கோரியும் சமாதான இயக்கங்களை குறை கூறியும் அவர்கள் தமது பிரச்சார இயக்கத்தை நடத்திச் சென்றனர்.

சிங்கள வீரவிதான தமக்கென இணையப் பக்கம் ஒன்று உருவாக்கி தமது கட்டமைப்பை முழு உலகமும் பரவச் செய்தனர். சிங்கள மக்கள் பரந்தளவில் வாழும் அனைத்து நாடுகளிலும் சிங்கள - பௌத்த இனவாத குழுக்களை தமது அமைப்புக்குள் ஈடுபடுத்திக் கொள்ள அது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

1999 இறுதிப் பாகத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் "கொட்டி வினிவிதீம (புலி ஊடுருவல்)" என்ற வெளியீடொன்றை வெளியிட்டது.

இதன்மூலம் இயக்கத்தின் கருத்தியல் தளங்கள் பிரபலமாக்கப்பட்டதுடன் தமிழர் விரோத கருத்துக்கள், தர்க்கங்கள் பிரபலமான வகையில் விபரிக்கப்பட்டன. யுத்தத்தை யுத்தத்தினால் வெல்லும் யோசனைகள் இங்கு சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த பிரதான அரசியல் இயக்கங்கள் இரண்டைத் தவிர கங்கொடவில சோம தேரரினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட மத இயக்கம் இந்நாட்டு முஸ்லிம் மக்களை இழிவுபடுத்தும் அண்மைக்கால பிரபல இயக்கமாக மாறியது. இலங்கையில் இலத்திரனியல் தொடர்பூடகங்களினால் அதிக பிரபலத்தைப் பெற்றவராக சோம தேரர் தமது பிரச்சாரங்களை அடிக்கடி கொண்டு சென்றார். நாடு முழுவதும் முஸ்லிம் மக்களை திகைக்க வைக்கும் அளவுக்கு இவ் உரைகள் காணப்பட்டன. முஸ்லிம் மக்களின் மத கலாசார வாழ்க்கையும், அரசியல் பொருளாதார செயற்பாடுகளும் சிங்களவர்களை இரண்டாமிடத்திற்கு தள்ளும் இயக்கம் எனக் கூறிக் கொள்ளும் அரசியல் கருத்தியல்வாத பிரச்சாரத்தின் அடிப்படை இதனால் ஏற்பட்டது. வருடத்தின் முதல் பாகத்தில் அத்தேரருக்கு அரச ஆதரவு அதிகம் கிடைத்தது.



1999 மே மாதத்தில் பௌத்தர்களின் பிரதான மத அனுட்டானமான வெசக் தினமன்று யாழ்ப்பாணத்தில் சிங்கள - பௌத்த படையினருக்கு இரு மணித்தியால உரை வழங்க தேரருக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. வடக்கு - கிழக்கு யுத்தக் களத்தில் மேலும் பல நகரங்களில் படையினருக்கு தேரர் உரை நிகழ்த்தினார். சிங்கள - பௌத்தரின் உரிமையை பாதுகாக்கும் முகமாக யுத்தம் செய்வது மதத்துக்கு சார்பானதென அத்தேரர் உரை நிகழ்த்தினார்.

சிங்கள ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை 1999 ஜூன் 20ம் திகதி வெளியிடப்பட்டதுடன் பரந்தளவிலான அதிகார பரவலாக்கலுக்கு எதிரான கருத்துக்கள் அதில் முன்வைக்கப்பட்டிருந்தன. எழுச்சி பெற்று வந்த சிங்கள - பௌத்த தேசியவாத இயக்கங்கள் சிங்கள ஆணைக்குழுவை கடந்து தேசியவாத வழியில் சென்றபடியால் ஆணைக்குழு அறிக்கை தற்காலிகமாக வரலாற்றின் குப்பைத் தொட்டியை அடைந்தது.

இந்த வளர்ச்சிக்கு ஏற்ப மேலும் முக்கியமானதொரு செயற்பாடு தோன்றியது. அதாவது சிங்கள - பௌத்த இனவாத இயக்கத்தின் தலைமைத்துவம் மட்டுமன்றி அரசியல் கருத்தில்யவாத தலைமைத்துவமும் கூட இளைஞர்களிடமும் சம்பிரதாயவாதிகளிடமும் மாறியது. 1980களில் இந்த சிந்தனை முறையின் வழியில் பயணித்த பேராசிரியர் நளின் த சில்வா, மற்றும் கலாநிதி குணதாச அமரசேகர ஆகியோருக்கு பதிலாக பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின் தலைவராக சம்பிக்க ரணவக்க தோன்றினார். மாதுளுவாவே சோபித தேரரை கடந்து கங்கொடவில சோம தேரர் முன்னணிக்கு வந்தார். 1999 ஆண்டு முழுவதும் இந்த இரு சாராருக்கும் இடையில் மோதல் கருத்தியல் தளத்தில் இருந்ததை காணலாம். பயங்கரவாத எதிர்ப்பு இயக்கம், பயங்கரவாத இயக்கமாகவும், அதன் உத்திகள் பாசிசவாதத்திற்கு சமீபமானது எனவும் பேராசிரியர் நளின் த சில்வா குறிப்பிட்டார். வருட இறுதியில் நடைபெற்ற ஜனாதிபத் தேர்தலில் பழைய பரம்பரை தேசியவாதிகள் சந்திரிகாவுக்கு பகிரங்க ஆதரவை வழங்கினர். பிரதான அரசியல் கட்சிகளினூடு தமது கருத்தியல்களை பரப்புதல் தற்போது அவர்களின் தந்திரமாக உள்ளது. இதற்கு எதிராக அதிகாரத்திற்காக போட்டியிடும் சிங்கள பௌத்த அரசியல் இயக்கமொன்றை கட்டியெழுப்ப சிங்கள வீரவிதானவும், பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கமும் நடவடிக்கை எடுத்து வருகின்றன.

**(இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கையின் இன மோதல்கள் 1999 - 2000 வளர்ச்சியும் போக்கும் நூலில் இருந்து எடுக்கப்பட்டது.)**



நோர்வேயின் தேசியக் கொடி எரிக்கப்பட்ட போது

நன்றி - நூலகத்திட்டம்



# அரசு சாரா நிறுவனங்களும் சமூக இயக்கங்களும்

### பகுதி3

### பொலிவியா

1985இல் பொலிவிய அரசாங்கம் தனது புதிய பொருளாதாரக் கொள்கையை (NEP) ஆணையாகப் பிறப்பித்தது. பணவீக்கம் ஆண்டுக்கு 15,000 சதவீதமாக உயர்ந்து கொண்டிருந்த காலத்தில் 4 மாத ஊதியத்தை நிறுத்தி வைத்தது. எல்லா விலைக்கட்டுப்பாடுகளையும் நிறுத்தி விட்டு உணவு, எரிபொருள் மானியங்களைக் குறைத்தது அல்லது நீக்கி விட்டது. பெரும்பாலான அரசு நிறுவனங்களை தனியார் மயமாக்குவதற்கான அஸ்திவாரத்தை ஏற்படுத்தி பொதுத்துறை ஊழியர்களை வேலை நீக்கம் செய்தது. சுகாதாரம் மற்றும் கல்வித் திட்டங்கள் பெருமளவு குறைக்கப்பட்டதும் பொதுச் சேவைகள் அறவே நீக்கப்பட்டுவிட்டன. இந்த அமைப்பியல் சீரமைப்புக் கொள்கைகள் (SAP) உலக வங்கி, சர்வதேச நிறுவனம் ஆகியவற்றினால் வடிவமைக்கப்பட்டு கட்டாயமாகப் புகுத்தப்பட்டவை. அமெரிக்க, ஐரோப்பிய அரசுகளாலும், வங்கிகளாலும் அங்கீகரிக்கப்பட்டவை. வறுமைக்கு இலக்கான பொலிவியர்களின் எண்ணிக்கை வடிவியல் ரீதியில் (Gemometrically) பெருகியது. நீண்ட நெடிய பொது வேலை நிறுத்தங்களும், வன்முறையான சண்டைகளும் தொடர்ந்தன. இதற்குப் பதிலாக உலக ஐரோப்பிய அமெரிக்க அரசுகளும் "வறுமை ஒழிப்புத் திட்டம்" ஒன்றிற்காக பெரிய அளவில் நிதி வழங்கின. பெரும்பான்மை நிதி "அவசரகால சமூக நிதி" (ESF) என்ற பொலிவிய அரசு நிறுவனம் ஒன்றிற்கு அனுப்பப்பட்டு பின்னர் அரசு சாரா நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்டது. இந்த நிதி எவ்வளவு தெரியுமா, 1990இல் இது 738 மில்லியன் டொலாராக இருந்தது.

வெளிநாட்டு நிதி குவியத் தொடங்கியதும், பொலிவியாவில் அரசு சாரா நிறுவனங்களின் எண்ணிக்கை பெருகியது. 1980க்கு முன்பு 100ஆக இருந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் 1992ல் 530 ஆகிவிட்டன. மேலும் வளர்ந்து கொண்டு வருகின்றன. கிட்டத்தட்ட எல்லா அரசு சாரா நிறுவனங்களுமே உலக வங்கியாலும் பொலிவிய அரசின் தாராளச்சந்தைக் கொள்கையாலும் ஏற்படுத்தப்பட்ட சமூகப்பிரச்சினைகளை, நிர்மூலமாக்கப்பட்டுவிட்ட உள்நாட்டு நிறுவனங்களால் கைவிடப்பட்டுவிட்ட பிரச்சினைகளை எதிர்கொள்வதையே வேலையாகக் கொண்டிருக்கின்றன. இப்படி அரசு சாரா நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கோடிக் கணக்கான நிதியில் 15 - 20 சதவீதம் மட்டுமே ஏழைகளைச் சென்று அடைந்தது. மீதமுள்ள தொகை நிர்வாகச் செலவுகளுக்கும், நிபுணர்களின் சம்பளத்துக்கும் சரியாகப் போயிற்று. அரசு சாரா நிறுவனங்கள் பொலிவிய அரசின் சார்பு நிறுவனங்களாகவே இருந்து அதன் அதிகாரத்தை கட்டமைக்கவே உதவின. முற்றுமுழுதான வறுமை அதை நீட்டித்து, நீண்டகால அமைப்பியல் காரணிகளுக்கு அதாவது நவதாராள கொள்கைகளுக்கு அரசு சாரா நிறுவனங்கள் ஆதரவாக இருக்கும்படி செய்தன. அரசு சாரா நிறுவனங்கள் நிர்வாகத்தில் வரும் வறுமை ஒழிப்புத் திட்டங்கள் வறுமைப் பிரச்சினையைத் தீர்க்காதது மட்டுமின்றி அரசை வலுப்படுத்தி அமைப்பியல் சீரமைப்புக் கொள்கைகளுக்கு எதிரான நடவடிக்கைகளையும் ஒடுக்கியது. அரசு சாரா நிறுவனங்களின் பெரும் நிதி இருப்பானது எளிதில் ஏமாறக்கூடிய குழுக்களைச் சுரண்டியதோடு அரசோடு ஒத்துழைப்பதால் பயன்பெற முடியும் என்று எதிர்ப்புத் தெரிவிக்கும் தலைவர்களில் சிலரை நம்பவும் வைத்தன. "அரசு சாரா நிறுவனங்களின் திட்டங்கள் நேரடியாக அரசுக்கும் அதன் திட்டங்களுக்கும் ஆதரவு ஏற்படுத்தாவிட்டாலும் குறைந்த பட்சம் அவற்றின் மீதான வீரிய மான எதிர்ப்பைக் குறைத்து விடுகின்றன" இது அரசின் வறுமை ஒழிப்புத் திட்டம் பற்றிய ஒரு கருத்து.

லா பாஸின் பொதுப்பள்ளி ஆசிரியர்கள் 50 டொலர் மாதச் சம்பளத்தையும் அதிக மாணவர்கள் திணிக்கப்பட்ட வகுப்பறைகளையும் எதிர்த்து வேலைநிறுத்தம் செய்த போது அரசு சாரா நிறுவனங்கள் அதைக் கண்டு கொள்ளவில்லை. காலராவும், மஞ்சள் சுரமும் நாட்டுப்புறப் பகுதிகளில் கொள்ளையாகப் பரவியபோது அரசு சாரா நிறுவனங்களின் சுய - உதவித்திட்டங்கள் உதவிக்கு வரவில்லை. ஆனால், ஒரு அடிப்படைப் புரிதலுள்ள பொது சுகாதாரத் திட்டம் சுலபமாக நோயைக் கட்டுப்படுத்தியிருக்கும். அரசு சாரா நிறுவனங்கள் பொலிவியாவின் முன்னாள் இடதுசாரி அறிவுஜீவிகளைத் தன்பால் ஈர்த்து நவதாராள அமைப்பிற்கு கைகட்டி சேவகம் செய்பவர்களாக அவர்களை மாற்றியிருந்தன. "சிவில் சமூகம்", "உலக மயமாக்கல்" ஆகியவற்றின் மீதான இந்த அறிவுஜீவிகளின் கருத்தரங்குகள் மிக மோசமான சுரண்டல்காரர்கள் (தனியார் சுரங்க முதலாளிகள், புதிய பணக்கார விவசாய ஏற்றுமதியாளர்கள், பெரும் சம்பளம் வாங்கும் ஆலோசகர்கள் ) "சிவில் சமூகத்தின் உறுப்பினர்களே என்பதையும், அமைப்பியல் சீரமைப்புத்திட்டம் நாட்டின் கனிம வளங்களை வரைமுறை யற்று கொள்ளை யடிக்கும் ஏகாதிபத்திய திட்டத்தின் அம்சமே என்ற உண்மையையும் மறைந்து விடுகின்றன.



### சிலே

1973 - 1989 வரையான பினோசேத் சர்வாதிகாரத்தின் போது, மனித உரிமைகளை மீறுவதை கண்டிப்பதிலும் நவதாராளவாத மாதிரியை எதிர்க்கும் கருத்துக்களை தயார் செய்வதிலும் இலவச சமையல் முகாம்கள் இன்ன பிற வறுமை ஒழிப்புத் திட்டங்களை விமர்சிப்பதிலும் அரசு சாரா நிறுவனங்கள் முக்கிய பங்காற்றின.

1982 - 1986க்கு இடைப்பட்ட காலத்தில் உண்டான பரவலான போராட்டங்கள் பெருமளவில் தோன்றி சர்வாதிகாரத்தை வீழ்த்தி விடுவதாக அச்சுறுத்திய போது அரசு சாரா நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாகியது. அவர்களால் விளக்கப்பட்ட கொள்கை "ஜனநாயகத்துக்கும், "நடுநிலையான வளர்ச்சிக்கும் சார்புடையதாக இருந்தது. மொத்தமுள்ள 200 அரசு சாரா நிறுவனங்களில் ஐந்துக்கும் குறைவானவை தான் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் சர்வாதிகாரர்களுக்குமுள்ள தொடர்புகளைப் பற்றியும், உலக வங்கியின் உதவியில் ஏற்பட்ட தாராளச் சந்தைக் கொள்கைக்கும் 47 சதவீத வறுமை நிலைக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றியும் தெளிவான விமர்சன நோக்கிலான அலசலையும் வெளிப்பாட்டையும் முன்வைத்தன.

ஜூலை 1986இல் ஒரு வெற்றிகரமான கெரில்லாத் தாக்குதல் நடைபெற்று கிட்டத்தட்ட பினோசேத் கொல்லப்பட்டிருப்பார். அப்போது அமெரிக்கா ஒரு பிரதிநிதியை அனுப்பி (கெல்பாடு) பினோசேத்துக்கும் எதிர்ப்பாளர்களில் பழைமைவாத குழுவினருக்கும் இடையே ஒரு தேர்தல் வழி அதிகார மாற்றுக்கு ஏற்பாடு செய்தது. தேர்தல் தேதிகள் குறிக்கப்பட்டு, நேரடி மக்கள் வாக்களிப்பு நிர்வகிக்கப்பட்டு - தேர்தலில் போட்டியிட கட்சிகள் மறுபடி தோன்றின. கிறிஸ்தவ ஜனநயாகவாதிகளுக்கும், சோசலிஸ்டுகளுக்கும் இடையே ஒரு கூட்டணி உருவாகி தேர்தலையும் வென்று பினோசேத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தன. (ஆனால், அவர் இராணுவத்துக்கும் ரகசிய பொலிசுக்கும் தலைமையில் இருப்பது தொடர்ந்தது) இந்தக் கூட்டணிக்கு இறுதியில் ஜனாதிபதியாகும் வாய்ப்பும் கிடைத்தது.

சர்வாதிகாரத்தை முடிவுகட்ட முக்கிய பங்காற்றிய சமூக இயக்கங்கள் விளிம்பிற்குத் தள்ளப்பட்டன. அரசு சாரா நிறுவனங்கள் இயக்கங்களை ஆதரிக்கமால் அரசுடன் கூட்டுச்சேர்ந்தன. சோஷலிச மற்றும் கிறிஸ்தவ ஜனநாயகவாதிகளான அரசு சாரா நிறுவன நிபுணர்கள் அரசாங்க மந்திரிகளானார்கள். பினோசோத்தின் தாராளச்சந்தைக் கொள்கைகளுக்கு விமர்சகர்களாக இருந்தவர்கள், அதைக் கொண்டாடுபவர்களாக ஆனார்கள். CIE PLAN என்ற முக்கிய ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னாள் தலைவர் அலிஜாண்ட்ரோ ஃஷபாக்ஸ்லே வெளிபடையாகவே பினோசேத்தின் அமைச்சராக இருந்த போது அகண்ட - பொருளாதார அடையாளங்களைத் தொடர்ந்து அதேபோல பராமரிப்பதாக வாக்க ளித்தார். அரசு சாரா நிறுவனங்களின் வெளிநாட்டுப் புரவலர்கள், சுதந்திரமான அடிமட்ட நிலை இயக்கங்களுக்கு ஆதரவு தருவதை நிறுத்திவிட்டு புதிய சிவில் நவதாராள அரசுக்கு ஒத்துழைப்பு தரும்படி அவற்றுக்கு ஆணையிட்டனர். "சுர் ப்ரொ ஃ பெஷனல்ஸ்" என்ற பெயர் பெற்ற ஆராய்ச்சி நோக்கிலான அரசு சாரா நிறுவனம் 'வன்முறைக்கான மனப்பாங்கு' என்ற பொருளில் குடிசைப் பகுதிகளில் மேற்கொண்ட ஆராய்ச்சி, சுதந்திரமான சமூக இயக்கங்களை ஒடுக்க பொலிசுக்கும் புதிய அரசுக்கும் பேருதவியாக அமைந்தது. இதன் இரண்டு முக்கிய ஆய்வாளர்கள் (சிறப்பு தகுதி சமூக இயக்கங்கள்) சிலேயின் வரலாற்றில் அதிகபட்சமான ஏற்றத்தாழ்வுகளை உண்டாக்கிய சமநிலையற்ற பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்தும் அரசாங்க மந்திரிகளாக ஆனார்கள்.

முளைத்தெழும் பரவலான மக்கள் இயக்கங்களை சிதைப்பதில் அரசு சாரா நிறுவனங்களின் வெளிநாட்டு தொடர்புகளும் அவற்றின் தலைவர்களின் தொழில் ரீதியான இலட்சியங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தத் தலைவர்களில் பலர் உள்ளூர் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்க நிர்வாகிகளாகி, பதவி - அதிகார முறை சமூக கூட்டமைப்புகளை முறியடித்தனர். லோ ஹெர்மிடா என்ற குடிசைப் பகுதியில் இயக்கத்தில் ஈடுபட்ட பெண்களின் பேட்டிகள், தேர்தலுக்குப் பிந்தைய காலத்தில் மாற்றம் ஏற்பட்டிருப்பதை வெளிப்படுத்தியது. "ஜனநாயகம் வந்துவிட்டதால் இனி (இலவச உணவு முகாம்கள்) திட்டங்களை தொடர வேண்டியதில்லை. அரசு சாரா நிறுவனங்கள் உங்களுக்குத் தேவையில்லை" என்று அவை சொல்லின. ஜனநாயக" தாராளச்சந்தை அரசை ஆதரிப்பதில் அரசுசாரா நிறுவனங்கள் தங்கள் நடவடிக்கைகளை நிலைப்படுத்திக் கொண்டன. அரசு சாரா நிறுவனங்கள் செயல் வீரர்கள் தங்கள் பங்கேற்புப் பற்றிய வாய்ச்சாலாக்கினை அரசியல் கட்சிகளுக்கு வோட்டு சேர்க்கவும், அரசு காண்ட்ராக்குகளை பெறுவதிற்கும் பயன்படுத்திக் கொண்டன.

> "முளைத்தெழும் பரவலான மக்கள் இயக்கங்களை சிதைப்பதில் அரசு சாரா நிறுவனங்களின் வெளிநாட்டு தொடர்புகளும் அவற்றின் தலைவர்களின் தொழில் ரீதியான இலட்சியங்களும் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தத் தலைவர்களில் பலர் உள்ளூர் தலைவர்களுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்க நிர்வாகிகளாகி, பதவி - அதிகார முறை சமூக கூட்டமைப்புகளை முறியடித்தனர்."

சிலேயில் உள்ள அரசு சாரா நிறுவனங்களின் குறிப்பிடத்தக்க தாக்கம் "பெண்கள் இயக்கங்களுடன்" அவற்றுக்கிருந்த உறவு தான். நம்பிக்கையூட்டும் செயல்திறனுள்ளவர்களின் குழுவாக 1980களின் நடுவில் கொஞ்சங் கொஞ்சமாக தொடங்கியது. நன்றாக அலங்கரிக்கப்பட்ட அலுவலகங்களிலிருந்து, அதிக செலவு பிடிக்கும் செய்தியறிக்கைகளைப் பதிப்பிக்கும் அரசு சாரா நிறுவனங்களாக மாறின. கவர்ச்சிகரமான குடியிருப்புகளில் வாழ்ந்த "தலைவர்கள்" குறைந்து வரும் பெண்களின் எண்ணிக்கையை பிரதிபலித்தனர். 1997இல் சிலேயில் நடந்த லத்தீன் அமெரிக்க பெண்ணிய மாநாட்டில் சாதாரண படைவீரர் நிலையிலுள்ள தீவிரவாத சிலே பெண்ணிய அமைப்பு ("தி அடானமிஸ்ட்ஸ்") அரசு சாரா நிறுவனங்கள் பெண்ணிலைவாதிகளை 'அரசு மான்யங்களுக்கு விலை போனார்கள்' என்ற முற்போக்கான விமர்சனத்தை வைத்தது.

### பகுதி4

### பிரேசில்

பிரேசிலின் அதிகபட்ச ஆற்றல்மிக்க சமூக இயக்கம் நிலமற்ற கிராமப்புற தொழிலாளர் இயக்கம் (MST) தான். ஐந்தாயிரம் நிர்வாகிகளையும், பல்லாயிரக்கணக்கான அபிமானிகளையும், செயல்வீரர்களையும் கொண்ட இந்த இயக்கம் கடந்த சில ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான சில ஆக்கிரமிப்புக்களில் சம்பந்தப்பட்டிருந்தது. மே 1996இல் நடைபெற்ற கிராமப்புற தொழிலாளர் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த மாநாடு ஒன்றில் நான் பேசச் சென்றிருந்த போது, அரசு சாரா நிறுவனங்களின் பங்கு பற்றியும் விவாதிக்கப்பட்டது. டச்சு அரசு சாரா நிறுவனங்கள் ஒன்றின் பிரதிநிதி அங்கு வந்து தானும் பங்குகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மாநாடு குறிப்பிட்டவர்களை மட்டுமே அனுமதிக்கும் என்று சொன்ன போது, தன்னிடம் 'சமூக வளர்ச்சிக்கான' திட்டம்,(3லட்சம் டாலர்) ஒன்றுக்கான "புதிய திட்டம்" இருப்பதால் தன்னை அனுமதிக்க வேண்டுமென விடாப்பிடியாக வேண்டினார். கிராமப்புற தொழிலாளர் இயக்கத் தலைவர்கள் அவரிடம் மிகத்தெளிவான வார்த்தைகளில், தாங்கள் - அதாவது கிராமப்புற தொழிலாளர் இயக்கம் விற்பனைக்கு அல்ல என்றும், அது தனக்கான "திட்டங்களை" தேவைகளின் அடிப்படையில் தானே ஏற்படுத்திக் கொள்கின்றது என்றும், அரசு சாரா நிறுவனங்களும், போதகர்களும் தமக்குத் தேவையில்லை என்றும் சொல்லி விட்டார்கள்.

பிற்பாடு கிராமப்புற தொழிலாளர் இயக்கத்தின் பெண்களின் அரசியல் குழு கிராமப்புறத்தில் அமைந்த பெண்ணியவாத அரசு சாரா நிறுவனங்களுடன் நடந்த சமீபத்திய சந்திப்பைப் பற்றி விவாதித்தன. நேரடி நடவடிக்கையும் (நிலங்களை ஆக்கிரமித்தல்) பாலியல் சமநிலையுடன் விவசாய சீர்திருத்தமும், இணைந்த வர்க்கப் போராட்ட நோக்கம் வேண்டுமென கிராமப்புற தொழிலாளர் இயக்கம பெண்கள் நெருக்கினர். ஆனால், அரசசார்பற்ற நிறுவன நிபுணர்களோ கிராமப்புற தொழிலாளர் இயக்கப் பெண்கள் தங்கள் நிறுவனத்துடன் உறவை முறித்துக் கொண்டு, பெண்ணிய சீர்திருத்தங்கள் மட்டுமே கொண்ட குறைந்தபட்ச திட்டத்தை ஆதரிக்க வேண்டுமென வற்புறுத்தின. பெரும்பாலும் நிலமற்ற விவசாயிகளின் மகள்களான கிராமப்புற தொழிலாளர் இயக்கப் பெண்கள் தங்களைப் பிரித்துவிட்டு தொழிலில் முன்னேறுகிற, அரசியல் - பொருளாதாரத்தில் மேம்பட்ட நிலையிலிருந்து கொண்டு எல்லா விவசாயிகளையும் ஒடுக்குகிறவர்களை எதிர்க்க விருப்பப்படாதவர்கள் என்ற நோக்கிலேயே அரசு சாரா நிறுவனங்களின் நிபுணர்களைப் பார்த்தார்கள். தங்களது ஆண் தோழர்களின் மேல் விமர்சனங்களை வைத்தாலும், வர்க்க அடிப்படையில் கூட்டுச் சேரும் "பெண்ணிலைவாத" அரசு சாரா நிறுவனங்களைவிட இயக்கத்துடன் தமக்கு அதிக நெருக்கமிருப்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தது.

எங்களது விவாதத்தில் கிராமப்புற தொழிலாளர் இயக்கத்தினால் இயக்கத்துக்குப் பங்களிப்புச் செய்து வர்க்கப் போராட்டத்துக்கு உதவும் (பணம், மற்றும் ஆதாரங்கள் மூலம்) அரசு சாரா நிறுவனங்கள் எவை, தேவாலயத்தின் கிளைகளாக இருந்து விவசாயிகளை துண்டாடி தனிமைப்படுத்தும் அரசு சாரா நிறுவனங்கள் எவை என்ற வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட்டது. பல பெந்தகோஸ்தே உதவி, அமெரிக்க உதவி, உலகவங்கி நிதி பெற்ற அரசு சாரா நிறுவனங்கள் திட்டங்கள் யாவும் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவை தான்.

(அடுத்த இதழில் முடியும்)

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்கள இனவாதிகள் கூட்டு! தமிழ் மக்களுக்கு அபாய சமிக்ஞை?

**- சரவணன்**

மே மாதம் 26ஆம் திகதி "சிங்கள உருமய" (சிங்கள உரிமை) கட்சி ஆரம்பிக்கப்படுவதையொட்டி தென்னிலங்கையில் பல்வேறு கருத்துக்களும், விவாதங்களும் நடந்து வரும் நிலையில் அதன் முக்கிய பரிமாணங்களை விளங்கிக் கொள்வது அவசியமாகிறது.

இதுவரை காலம் இருந்த பேரினவாத வடிவங்கள், அதன் பண்புகள் உள்ளிட்ட அதன் தந்திரோபாயங்கள் அனைத்தும் வரலாற்றுத் திருப்பு முனைக்கு இட்டுச் செல்லுகின்ற ஆபத்துமிக்க மாற்றங்களை அடைந்து வருகின்றது என்பது மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது.

## பழையதும் புதியதும்: வேறுபாடு

தென்னிலங்கையில் இயங்கும் இனவாத அமைப்புகளான "சிங்களயே மகா சம்மத்த பூமி புத்திர பக்ஷய", "மகா சங்கத்தினர்", "ஹெல உருமய", "ஜாதிக்க சிந்தனய", "எக்சத் பிக்கு பெரமுன", "தேசப்பிரேமி பிக்கு பெரமுன", "மக்கள் ஐக்கிய முன்னணி" மற்றும் பிரதான கட்சிகளைச் சேர்ந்தவர்கள் உட்பட 40க்கும் மேற்பட்ட அமைப்புகளைச் சேர்த்து இக்கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட சிங்கள வீர விதான இயக்கத்தின் முன்னணி அமைப்பாக பயங்கரவாத தேசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது அதன் வெகுஜன இயக்கமாக மக்கள் மத்தியில் ஊன்றப்பட்டது. அது போலவே இப்போது அது அரசியல் கட்சியாக வடிவமெடுக்கிறது. ஆனால் இக்கட்சிக்கு கட்டுப்பட்டதல்ல எந்த ஒரு அமைப்பும். தற்போது கட்டப்படும் கட்சி கூட சிங்கள வீரவிதானவின் முன்னணி தான்.

இத்தகைய பேரினவாதக் கட்சிகள், அமைப்புகள் வரலாற்றில் பல தடவைகள் வந்துபோயுள்ளன. ஆனால் அவை போலல்ல கடந்த நான்கு வருடங்களாக சிங்களப் பேரினவாதம் தன்னை பாசிச வடிவத்துக்கு தயாராக்கிக் கொண்டு வந்துள்ளது.

1. கடந்த காலங்களில் வெறும் உதிரிகளாக இருந்த பல்வேறு அமைப்புகளும் ஒரே அணியில் செயற்பட தொடங்கியுள்ளன.
2. அவை தமக்கென ஒரு உறுதியானதும் ஒருங்கிணைந்ததுமான கோட்பாட்டை உருவாக்கிக் கொண்டுள்ளன.
3. பலமும், உறுதியும் மிக்க அமைப்பு வடிவத்தை ஏற்படுத்தியுள்ளன.
4. அதற்கென ஒரு திடமான அரசியலையும் கொண்டிருந்தது. இந்த அரசியலுக்கு ஒரு நிறுவன வடிவம் கொடுப்பதற்கான ஏற்பாடுகளை அது இரகசியமாக செய்து வந்தது. மூன்று வருட கடின பிரயத்தனத்தின் பின் இன்று கட்சியும் வெளிவந்தாகி விட்டது.

### பாசிச வடிவத்தின் பிரகடனம்

இது குறித்து இதற்கு முன்னரும் சரிநிகரில் எச்சரிக்கப்பட்டிருந்தது. அது நடந்து விட்டது. இனி அது எடுக்கப் போகும் வடிவம் ஆயுதச் செயற்பாட்டு வடிவம் தான் என்பதையும் குறிப்பிட்டிருந்தோம். இன்று தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் கொலைகள் மிரட்டல்கள், வன்முறைகள் என சாதாரண தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டு வருவதும், அதே வேளை படையிலிருந்து தப்பியோடிய பலர் இதில் இணைந்து ஆயதப் பயிற்சி வழங்கி வருவது குறித்தும் செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இங்கு முக்கியமாக நோக்கத்தக்க விடயமென்னவென்றால் வரலாற்றில் திடீரென தோன்றி, வளர்ந்து, மறைந்த அமைப்புகளைப் போல இது இல்லை என்பது தான். இது நிதானமாகவும், பலமாகவும், பெருமளவு மக்களை ஈர்த்தெடுத்ததும், அம்மக்களை சிதற விடாது ஓரணியில் அரவணைத்துச் செல்லும் அமைப்பாகவும் இது இருக்கிறது. ஆக கடந்த காலங்களில் அரச கட்டமைப்போடு அதிகளவு தொடர்புபடுத்திப் பார்த்த சிங்களப் பேரினவாதம் என்பது இன்று சிவில் சமூகத்தில் மிகவும் ஆழமாக ஊன்றி, பரந்து, விரிந்து பாசிச வடிவமெடுக்கிறது. அரசியல் கட்சி என ஆரம்பித்ததற்கு என்ன இது தற்போதுள்ள முதலாளித்துவ ஜனநாயக அரசியலுக்குள் கூட இருக்கப்போவதில்லை. எதிர்வரும் பொதுத்தேர்தல் தமது செல்வாக்கு குறித்து நாடிபிடித்தறியும் தேர்தலாகவே இருக்கப் போகிறது. அதுமட்டுமன்றி பிரதான கட்சிகளுக்கும் இது வயிற்றைக் கலக்கும் ஒன்றாக இருக்கப் போகிறது. வேகமாக சிங்கள சிவில் சமூகத்தை பாசிசமயப்படுத்தி வரும் நிலையில் பிரதான தேசியக் கட்சிகளுக்கு ஒன்றில் இந்த பாசிச சக்திகளை விட மோசமாக பேரினவாதத்தைக் கடைபிடிக்க வேண்டும். அல்லது பேரினவாதத்திலிருந்து மக்களை மீட்டெடுக்கக்கூடிய வகையில் நேரெதிரான பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். தேர்தல் அரசியலை இலக்காகக் கொண்ட இக்கட்சிகளுக்கு இரண்டாவது தெரிவானது அவ்வளவு இலகுவாக



சம்பிக்க ரணவக

சாத்தியப்படாது. மேலும் அது தான் இவ்வளவு காலமும் பிரதான கட்சிகளின் அரசியல் வழிமுறையாகவும் இருந்து வந்திருக்கிறது. ஒன்றில் முதலாவதைத் தெரிவு செய்ய வேண்டும் அல்லது ஜே.வி.பி.யின் மீதான அழித்தொழிப்பைப் போல ஒன்றைச் செய்வதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த வேண்டி வரலாம். ஆனால் அதுவும் லேசுப்பட்டதுதல்ல. ஏறாளமான பௌத்த பிக்குகளையும், பௌத்த தலைமைப்பீடத்தையும் கொண்டுள்ள இந்தச் சக்தியிடம் இனி பிரதான கட்சிகளும் சரணடைய வேண்டிய காலமே இது என்றே கூறலாம். இனி வெறும் அரசாங்கங்களின் கைகளை மட்டுமல்ல அரசினது கையையும் மீறிவிட்ட நிலைமைக்கு முகம் கொடுக்கப் போகிறோம்.

### இதன் தோற்றமும் பின்னணியில் நிற்பவர்களும்

சிங்கள வீரவிதான அமைப்பு 1995 யூலை 07ஆம் திகதி பகிரங்கமாக தன்னை பிரகடனப்படுத்தியது. அதன் முன்னணி அமைப்பான பயங்கரவாத எதிர்ப்பியக்கம் (National Movement Against Terrorism) 1997 இல் பிரகனடப்படுத்தப்பட்ட போதும் அதனை சிங்கள வீரவிதானவின் முன்னணி அமைப்பாக அது கூறிக்கொள்ளவில்லை. இந்த NMAT அமைப்பின் தேசிய செயற்திட்டம் (National Plan Of Action Against Terrorism) எனும் பிரகடனத்தை இவ்வமைப்பு 1998 ஜனவரி 14ஆம் திகதி முன் வைத்தது. ஸ்ரீ லங்காவில் எந்தவொரு இயக்கமும் இந்த இயக்கத்தின் செயல்வேகத்தின் முன்னால் ஈடுகொடுக்க முடியாத அளவுக்கு இயங்கி வருகிறது.

தலைமறைவு இரகசிய வேலைமுறைகளைக்கொண்டியங்கும் இந்த அமைப்பின் தேசிய அமைப்பாளராக இருப்பவர் இன்று சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு தலைமைதாங்குபவராக இருக்கும் முன்னாள் ஜே.வி.பி உறுப்பினரும், அதன் பின் ஜனத்தா மித்துரோ அமைப்பின் ஆரம்பகர்த்தாவும், முக்கிய பேரினவாத கருத்துருவாக்கத்தில் இன்று பிரதான நபராக இருப்பவருமான சம்பிக்க ரணவக்க. இவர் தான் இன்று உருவாக்கப்பட்டுள்ள சிங்கள உருமய கட்சியின் தேசிய அமைப்பாளரும்.

கட்சியின் தலைவர் எஸ்.எல்.குணசேகர. பிரசித்தி பெற்ற வழக்கறிஞரான எஸ்.எல்.குணசேகர திம்பு பேச்சுவார்த்தையில் (ஐக்கிய (தேசியக் கட்சி) அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டவர். இந்திய இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து அதற்கெதிராக பகிரங்கமாக பிரச்சாரம் செய்து கொண்டு ஐ.தே.க.விலிருந்தும், ஏனைய அரச பதவிகளிலிருந்தும் விலகியவர். தீர்வுப் பொதிக்கு எதிராக "தீர்வுப்பொதியும், எமனின் பொதியும்" எனும் நூலொன்றையும் (சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில்) இன்னும் பல நூல்களையும் எழுதியிருப்பவர்.

தற்போது இராணுவத்தில் உள்ள மேஜர் ஜெனரல் திலக் பரணகம கட்சியின் உப தலைவர்.

கட்சியின் பொதுச்செயலாளராக இருப்பவர் திலக் கருணாரத்ன. இந்தக் கட்சியின் தோற்றத்திற்கு இரகசியமாக நீண்டகாலமாக உழைத்து வந்திருப்பவர். இவர் முன்னாள் ஹெல உருமய கட்சியின் தலைவர். இந்த ஹெல உருமய கட்சி 80களில் இறுதியில் தொண்டமான் வடக்கு கிழக்கை 10 வருடங்களுக்கு தமிழரின் நிர்வாகத்திற்கு வழங்கிப் பார்க்கும்படி கூறிய கூற்றைத் தொடர்ந்து எழுந்த கொந்தளிப்போடு உருவாக்கப்பட்டது. சந்திரிகாவின் தம்பியும் இன்று ஐ.தே.க.வின் முக்கிய தலைவருமான அனுர பண்டாரநாயக்கா ஹெலஉருமயவின் இன்னுமொரு தலைவராக இருந்தவர். இருவருமே ஸ்ரீ.ல.சு.க.விலிருந்து ஒன்றுசேர விலகி வந்து ஐ.தே.க.வில் இணைந்து கொண்டவர்கள். ஐ.தே.க.வின் களுத்துறை மாவட்ட அமைப்பாளர் பதவி, பாராளுமன்ற உறுப்பினர் பதவி உட்பட கட்சியின் சகல பொறுப்பிலும் இருந்து விலகி இந்த அமைப்புடன் தன்னை முழுமையாக இணைத்துள்ள திலக் கருணாரத்ன கடந்த 16ஆம் திகதி லங்காதீப பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"...இந்த சம்பிரதாயபூர்வமான நாட்டுக்கு என்ன நேரிட்டலும் பராயில்லை கட்சிகள் எந்த பித்தலாட்டம் பண்ணியாவது பதவியை கைப்பற்றுவதில் தான் குறியா இருக்கின்றன. எதிர்க்கட்சியும் எந்த காட்டிக் கொடுப்பையாவது பண்ணி ஆளுங்கட்சியை பிரட்டத் தான் பார்க்கின்றது. இந்த நிலையில் நாடு அங்கவீனமுற்று விட்டது தான் மிச்சம். நீண்ட கால இலக்கைக் கொண்டு ஒன்றும் தீர்மானிக்கப்படுவதில்லை... அரசாங்கம் பதவியிலிருக்கும். எதிர்க்கட்சி அதனை கவிழ்க்கச் சதி செய்யும். எதிர்க்கட்சி பதவியிலமர முயற்சிக்கும். ஆளுங்கட்சி என்ன அக்கிரமத்தைப் பண்ணியாவது அதனைத் தடுக்க முயலும். இந்த நிலைமையில் சிங்ளவர்கள் துண்டாடப்பட்டுள்ளனர். 1951இல் ஸ்ரீ.ல.சு.க. வை பண்டாரநாயக்கா ஆரம்பித்ததன் மூலம் சிங்கள மக்களிடையே முதலாவது தடவை பெரும் பிளவை ஏற்படுத்தினார். டீ.எஸ்.சேனநாயக்கவோ முக்கிய தொழிற்சாலைகளை பரந்தனிலும், வாழைச்சேனையிலும் கொண்டு போய் நிறுவினார். அதுவும் சிங்களவர்களைத் தான் பாதித்தது. 58ஆம் ஆண்டு மக்கள் மயப்படுத்துவது என்கிற பேரில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியை பழி



திலக் கருணாரத்ன

வாங்கியது. பஸ் உரிமையாளர்களாக அன்று பலர் ஐ.தே.க.வினரே இருந்தனர். இது போல பொருளாதாரத்தில் ஏற்படுத்தப்பட்ட சகல மாற்றங்களின் போதும் சிங்களவர்களின் வயிற்றில் தான் அடிக்கப்பட்டது...

மலையக மக்களைப் பாருங்கள் அவர்களுக்கு பிரஜாவுரிமையை பறித்து அனுப்பியிருக்க வேண்டியதில்லை. அவர்களைச் சிங்களவர்களாக மாற்றுவதன் மூலம் பல பிரச்சினைகளை தீர்த்திருக்கலாம். இன்று சுத்தமான ஒரு சிங்களவனும் நாட்டிலில்லை. தற்போதைய ஜனாதிபதி முறையின்படி சிறுபான்மையினங்களிடம் தங்கியிருப்பதன் விளைவாக அஷ்ரஃப்களதும், தொண்டமான்களதும் வாக்குகளுக்கு அடிமையாக வேண்டியிருக்கிறது. சிங்களவர்களை ஒன்று திரட்டி நீண்டகால இலக்கைக் கொண்ட வேலைத்திட்டத்தைக் கொண்டு செல்வதே எமது நோக்கம்..."



எஸ்.எல்.குணசேகர

### சிங்கள பிரதான கட்சிகள் சரண்

அது போல சமீபத்தில் சிங்கள வீரவிதானவின் இணைத்தள விலாசம் மாற்றப்பட்டு (http://www.sinhale.org) அதிலேயே "சிங்கள உருமய" கட்சியின் இணையப்பக்கமும் இணைக்கப்பட்டுள்ளது. இதற்கான தனியான இணையத்தளம் கூடிய விரைவில் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிங்கள வீரவிதானவின் புதிய சர்வதேசக் கிளைகள் ஜேர்மனியிலும் (ஜேர்மனியில் பேர்லின் மற்றும் மியூனிச் இரண்டு இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், ஜெர்மன் கிளைக்கென தனியான இணையத்தளமும் உள்ளது. http://www.sinhala.de), லண்டனிலும் அமெரிக்காவிலும், இத்தாலியிலும் இவை அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் போக்கில் பிரதான கட்சியைச் சேர்ந்த பலர் இதில் இணைந்துள்ளதைப் போலவே அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பேரினவாதத்திடம் சரணடையும் போக்கையும், சமரசம் செய்துகொள்ளும் சந்தர்ப்பங்களையும் பல்வேறு இடங்களில் காண முடிகிறது. சம்பிக்க ரணவக்க ஏற்கெனவே "தீர்வுப்பொதியை வலிமையற்றதாக ஆக்கியது நாங்களே" என்று கூட்டங்களில் பேசியது ஞாபகமிருக்கும்.

சில சமீபத்திய நிலைமைகளைக் கவனிப்போம்.

- "சிங்களவர்களே ஒன்றுபடுங்கள்!" (ஐ.தே.க. எம்.பி. ஜயலத் ஜயவர்தனவின் திவய்ன ஏப்ரல் 9 பேட்டி)

- மகா சங்கத்தினர் ஏற்றுக் கொள்ளும் தீர்வொன்றே வழங்கப்படும். (அதே பத்திரிகையில் புத்த சாசன பிரதி அமைச்சரும், ராமக்ஞ நிகாயவின் பாதுகாப்புச் சபையின் செயலாளருமான எதிரிவீர பிரேமரத்ன.)

- பதில் ஜனாதிபதியாக ஓரிரு நாட்கள் செயற்பட்ட ரத்னசிறி விக்கிரமநாயக்க, பிரதி சபாநாயகருமான அனில் முனசிங்க இருவரும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். ரத்னசிறி விக்கிரமநாயக்க லண்டனிலுள்ள சிங்கள இனவாத இயக்கங்களை சந்தித்து உரையாடிவிட்டு ஆறுதல் கூறி வந்திருக்கிறார்.

1997இல் மே 26ம் திகதி அன்று குருநாகல் மாவட்ட ஆளுங் கட்சி பா.உ. ஜயசேன ராஜகருண சிங்கள ஆணைக்குழுவில் தமிழர்களை கண்டித்து சாட்சியம் அளித்திருந்தார்.

ஐ.தே.கவின் எம்.பியான டாக்டர் ராஜித சேனரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழகியுள்ளது. சேனரத்ன நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்துக் கொண்டு கடற்படை, விமானப்படை, ஆகியவற்றுடன் வியாபார ஒப்பந்தங்களைச் செய்து இருந்தார் என்று குற்றஞ்சாட்டி நீதி அரசமைப்பு விவகார பிரதி அமைச்சர் டிலான் பெரேரா மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார். திலக் கருணாரத்னவும் ஸ்ரீ.ல.சு.க. காலத்தில் வட கொரியாவுடனான ஆயுதக் கொள்வனவில் இடைத் தரகராக செயற்பட்டிருந்த விடயம் தெரிந்ததே.

அனகாரிக்க தர்மபாலவின் வாரிசும் இவ்வளவு காலம் ஐ.தே.க.வில் இருந்து தற்போது அரசாங்கத்துடன் இணைந்தவருமான சுசில்

⊃19

நன்றி - நூலகத்திட்டம்



# ஆனையிறவு வீழ்ச்சி: எப்பவோ முடிந்த கதை!

ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுத்தளம் இலங்கையின் வரலாற்றில் அமைக்கப்பட்ட மிகப்பெரும் படையரணாகும். இது தென்னாசியத் துணைக் கண்டத்தின் பெருந்தளங்களுள் ஒன்று எனக் கூறினும் மிகையாகாது.

1993இல் பூநகரியிலும், 96இல் பரந்தன், முல்லைத்தீவு என்பவற்றிலும், 98இல் கிளிநொச்சியில் இருமுறையும் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் இலங்கைப் படையினர் ஆனையிறவுத் தளத்தின் பாதுகாப்பு நிலைகளையும் உட்கட்டுமானங்களையும் மிகவும் நுணுக்கமாக அமைத்திருந்தனர்.

இத்துடன் 1999 நவம்பர் மாதம் வன்னியில் பெற்ற வெற்றியின் பின்னர் புலிகள் ஆனையிறவுப் பெருந்தளத்தில் அடுத்ததாகக் கைவைப்பர் என உறுதியாக நம்பிய இலங்கைப் படைத்தலைமை அங்கு 53வது படையணியை மேலதிகமாக அனுப்பி வைத்தது. இதனால் இயக்கச்சி-ஆனையிறவு இலங்கையின் முதலாவது இரு அணிப் (Division) படைத்தளமாயிற்று.

இத்தளத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏலவே நிலைகொண்டிருந்த 54வது படையணிக்கு மேலும் பலமும் பாதுகாப்பும் தரும் வகையில் 53வது படையணி தனது நிலைகளை அமைத்துக் கொண்டது.

வெற்றிலைக்கேணியிலும், இயக்கச்சியின் கிழக்காகவும் வட கிழக்காகவும் உள்ள சில பகுதிகளிலும் உட்புகுந்து அதிரடிப்படை நகர்வுகள் மூலம் புலிகளை இவ்விடங்களில் பலவீனப்படுத்தி ஆனையிறவுத் தளத்தின் வெளிப்பாதுகாப்பினை மீண்டும் உறுதி செய்யும் நோக்கிலேயே மணலாற்றிலிருந்து இந்த 53வது படையணி யாழ்ப்பாணத்தின் வாயிற்கதவு அரண் நிலைக்கு கொண்டுவரப்பட்டது.

இவ்விடத்தில் நாம் சுருக்கமாக 53வது படையணியைப் பற்றிப் பார்க்க வேண்டும்.

இது இரண்டாம் ஈழப்போர் காலத்தில் (1990-94) 'தனிப் படையணி' (Independent Brigade) என்ற பெயரில் மணலாற்றுப் பகுதியில் நிலை கொண்டிருந்தது. இலங்கை இராணுவத்தின் விசேட போர்ப்படையாக இது அக்காலத்தில் செயல்பட்டது. இலங்கைப் படையின் அதிரடி வீரர்களுக்கான (Special forces Commandos) அணியாக இந்த இன்டிபெண்டன்ற் பிறிகேட் செயல்பட்டு வந்தது. (இது கமாண்டோ றெஜிமென்ற் எனவும் முன்னர் அழைக்கப்பட்டது) தற்போது யாழ்ப்பாணத்தின் திடீர்த் தளபதியாக அனுப்பப்பட்டுள்ள மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இந்த இன்டிபெண்டன்ற் பிரிகேட்டின் வேலைகளுடன் மிக நெருங்கிய ஈடுபாடு கொண்டவராக இருந்தார். இரண்டாம் ஈழப்போர் காலத்தில் மணலாற்றிலிருந்து பல்வேறு களமுனைகளுக்கும் சென்று அதிரடிச் சண்டைகளில் ஈடுபட்டு வந்த Independent Brigade 1995ல் சூரியக்கதிர் நடவடிக்கைக்காக ஒரு Task Force ஆக விரிவாக்கமடைந்தது. பின்னர் 96ல் 53ஆவது படையணியாக தரமுயர்ந்தது. அதாவது எட்டாயிரம் விசேட படையினரையும் துணைப் பீரங்கி மற்றும் கவச அணிகளையும் கொண்ட ஒரு முழுப் படையணியாக இது மாறிற்று. 1997ம் ஆண்டிலிருந்து அமெரிக்கப் படைத்துறையின் நேரடி உதவியுடனும் விசேட பயிற்சிகளுடனும் 53வது படையணி மேலும் வளர்ச்சி பெறலாயிற்று.

53வது படையணியின் உயர்ச்சியைக் கருத்திற் கொண்டு அமெரிக்கப் படைத்துறை கொழும்பில் ஒரு உயர் இராணுவ அதிகாரியை நியமித்தது. நேரடியாக 53இன் பயிற்சிகளையும் சிறப்புத் தேவைகளையும் ஒருங்கிணைப்பவராக இவர் கடமையாற்றி வருகிறார். 53வது படையணி வெளிநாட்டு வீரர்களைக் கொண்ட ஒரு விசேட அமெரிக்கப் படையணி என அழைப்பினும் பொருந்தும்.

ஒரு இலட்சத்து 20ஆயிரம் பேரைக் கொண்ட இலங்கைப் படையின் போரிடு கூர்முனை இந்த 53வது படையணி. இன்னொரு வகையில் சொல்வதெனில் இலங்கை இராணுவத்தின் ஒரு இலட்சத்து 20ஆயிரம் வீரரில் 53வது படையணியின் எட்டாயிரம் பேரே நேரடிக் கள மோதற் திறன் கொண்டவர்கள் என அறுதியிட்டுக் கூறலாம். ஏனைய படையினர் தத்தமது நிலைகளை அரண்களின் பின்னின்று பாதுகாக்கும் வேலைகளில் ஈடுபடக் கூடியவர்களேயன்றி களமுனையில் உக்கிரமான நேரடி மோதல்களில் இறங்கக் கூடியவர்கள் அல்ல. எனவே தான் புலிகள் தொடர்ச்சியாக இந்த 53வது படையணியின் அமெரிக்கத் தேர்ச்சி பெற்ற விசேட படைகளைத் தொடர்ந்து குறிவைத்துத் தாக்கி வந்தனர். ஜெயசிக்குறுவின் போது புளியங்குளத்துக்கான நீண்ட சண்டைகளில் அடிவாங்கியது இந்த 53வது படையணி. பின்னர் புதூர்ச் சந்தி மோதலில் இழப்புக்களைச் சந்தித்ததும் இப்படையணியே. மன்னகுளத்தில் புலிகளிடம் சிக்குண்டு சின்னாபின்னமாகிப் போனது 53வது படையணியின் ஒரு பிரிவே. மாங்குளச் சண்டை, கரிப்பட்ட முறிப்பு மோதல், கிளிநொச்சியில் 98 பெப்ரவரியில் இழந்த பகுதிகளை மீட்கப் போய் நடந்த சண்டை என இடைவிடாது இந்த டிவிசனை புலிகள் அழித்து வந்தனர். 53வது படையணியின் ஒரு படையாளை உருவாக்க 4 இலட்சம் ரூபா வரை செலவாகிறது. இத்துடன் இப்படையினருக்கு அதிவிசேட அமெரிக்க இராணுவப் பயிற்சி உள்ளூரிலும் அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பிராந்தியத்தின் பல தளங்களிலும் வழங்கப்படுகிறது. இடையறாது நேரடியாக மோதி மோதி அதனை ஓரளவு பலவீனப்படுத்தியிருந்த நிலையிலேயே புலிகள் ஆனையிறவில் கைவைக்க முற்பட்டனர்.

அதாவது இலங்கை இராணுவம் எனும் வேலின் கூர்முனையை - அதன் கொல்முனையை - மழுங்கடித்த பின்னரே யாழ்ப்பாணத்தின் வாயிற்கதவினைத் தகர்க்கும் தந்திரோபாய நகர்வுகளில் புலிகள் இறங்கலாயினர்.

அடுத்ததாக ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தின் மிகப்பெரும் பலவீனங்கள் இரண்டினை இனங்கண்டு அவற்றையும் (படிப்படியாக) குறி வைத்துச் சண்டைகளை நகர்த்தினர்.

இந்த இரண்டு பலவீனங்கள் எவை?

முதலாவது - ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தில் ஏறத்தாழ 17 ஆயிரம் படையினரைக் கொண்டு போய்க் குவித்த இலங்கை அரசு இவர்கள் அனைவருக்கும் எங்கிருந்து குடிநீர் வழங்க முடியும் என்பதைப் பற்றிச் சிந்திக்கவில்லை.

ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தினுள் குடிநீர் நிலைகள் இல்லை. இதற்கான நந்நீர் ஊற்றுக்கள் பரந்தனிலும் இயக்கச்சிச் சந்திக்கு சற்றுக் கிழக்காக அமைந்த பகுதியிலுமே அமைந்திருந்தன. பரந்தன் நந்நீர் ஊற்றுக்கள் பெரியவை. இயக்கச்சி நீர்நிலைகள் சிறியவை. பரந்தன் அடியோடு ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்திற்கான பிரதான குடிநீர் வழங்கல் இல்லாமற் போயிற்று. இதற்கான மாற்றுத் தயாரிப்புக்களை படைத்தலைமை செய்யு முன்னர் புலிகள் இயக்கச்சிக்குக் கிழக்காக வந்து அரண் அமைத்து மோதல்களில் ஈடுபடலாயினர்.

இரண்டாவது - வவுனியா - யாழ் நெடுஞ்சாலை இலங்கை அரசின் கையில் இல்லாத நிலையில் ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தின் உயிர்நாளம் வெற்றிலைக்கேணி - கட்டைக்காடு தளமே. கடல்வழி நேரடி வழங்கலே ஆனையிறவுத் தளத்தின் இருப்பிற்கு இன்றியமையாதது என்பது எந்த நுண்மாண் நுழைபுலனுள்ள போரியல் அறிஞருக்கும் வெள்ளிடைமலை போற் தெரிந்த விடயமாகும்.

வான்வழி வழங்கலுக்கு ஆனையிறவில் சரியான ஒரு தளம் கிடையாது. அமைத்தலும் முடியாது. யாழ். பலாலியிலிருந்து வழங்கலைத் தொடர்வது என்பது தலையைச் சுற்றி மூக்கைத் தொட்ட கதையாகும்.

எனவே அடிப்படையில் வெற்றிலைக் கேணி கட்டைக்காடு கரையோரத் தளம் ஆனையிறவின் இருப்பிற்குத் தவிர்க்க முடியாத ஒன்றாயிருந்து வந்தது. ஆனால், இத்தளத்தை புலிகள் கைப்பற்றிய பின்னரும் ஆனையிறவில் 17 ஆயிரம் படைகளை வைத்துக் கொண்டு அவர்களுக்கான வழங்கல் பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் இலங்கை அரசு மேலும் அணிகளை அங்கு அனுப்பிக் கொண்டிருந்தது. எனினும், புலிகளின் படை நகர்த்தற்போக்கின் கூர்மையை ஓரளவு புரிந்து கொண்ட இலங்கைப் படைத்தளதுறைத் திட்டமிடலாளர்கள் வெற்றிலைக்கேணி மீது ஒரு பெரும் தாக்குதலை நடத்தி அதனைக் கைப்பற்ற நாட்குறித்திருந்தனர். பூநகரி கடற்பரப்பூடாகவும், வெற்றிலைக்கேணியூடாகவும், ஊடுருவி யாழ் - ஆனையிறவுச் சாலையை புலிகள் தாக்க முற்பட்டால் 17 ஆயிரம் படைகளுக்கும் வழங்கலை மேற்கொள்வது கடுஞ்சிக்கலாகும் என்பதை புரிந்து கொண்டு வெற்றிலைக்கேணி மீதான தாக்குதலுக்கு 53இன் ஒரு பிரிகேட் தாழையடித் தளத்தில் தயாராய் இருந்தது. எனவே தான் தாழையடிக்கு அடிவிழுந்த கையோடு ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தின் தலைவிதி தீர்மானிக்கப்பட்டு விட்டது எனின், மிகையாகாது. சாவகச்சேரி - ஆனையிறவு நெடுஞ்சாலையை புலிகள் ஊடறுத்த கையோடு நிலைமை மேலும் மிக மோசமாயிற்று. இந்தக் கட்டத்திலும் ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தை மூடிவிட்டுப் பின்வாங்க இலங்கை அரசு தீர்மானிக்கவில்லை.

53வது படையணியின் அமெரிக்க ஆலோசகர்கள் ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்திலிருந்து பின்வாங்குவதே தப்புவதற்கு ஒரே வழி என அந்நேரத்தில் தெரிவித்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு ஆனையிறவு-இயக்கச்சிக் கூட்டுப் படைத்தளத்தில் ஒரு அரசியல் - இராணுவப் பொறியில் சிக்கித் தடுமாறும் எனவும் இவ்வாறு தடுமாறும் காலத்தினுள் ஆனையிறவை நோக்கிய இறுதிப் பாய்ச்சலை பாய்ந்து விடலாமெனவும் புலிகள் மிகச் சரியாகவே கணக்கிட்டிருந்தனர்.

இதில் குறிப்பிடக்கூடிய விடயம் என்னவெனில், ஆனையிறவின் கழுத்துச் சுருக்கு இறுகி வருவதை தடுக்கும் வழிகள் இல்லையென்பது மிகத் தெளிவாகிவிட்ட நிலையிலும் இலங்கை படைத்தலைமை மீண்டும் மீண்டும் 53இன் அணிகளை முன்னனுப்பி முகமாலை - பளைக்கிடையிலான சாலையை கைப்பற்ற முயன்ற வண்ணம் இருந்தது.

இச்சந்தர்ப்பத்தில் தனது படைவீரர் இங்ஙனம் வீணாக அழிக்கப்படுவதை தான் தொடர்ந்து அனுமதிக்க முடியாதெனக் கூறிய 53இன் கட்டளையதிகாரி பிரிகேடியர் காமினி ஹெட்டியராச்சி உடன் திருமலைக்கு மாற்றப்பட்டார்.

இதனால் தாழையடியிலும் முகமாலையிலும் கடும் இழப்புகளை சந்தித்திருந்த 53 வது படையணி மேலும் சலிப்படையலாயிற்று.

இவற்றையெல்லாம் உணராத பலர் ஆனையிறவில் 17 ஆயிரம் படைகள் பெரும் படைக் கலன்களோடு சண்டை பிடிக்கத் தயாராக இருக்கின்றனர். எனவே ஆட்பலம் மிகக் குறைந்த புலிகளால் அத்தளத்தை இலகுவில் அசைக்க முடியாது எனக் கூறித்திரிந்தனர்.

ஆனால், போரியல் விஞ்ஞான நோக்கில் 53வது படையணியின் மழுங்கடிப்பும், குடிநீர் நிலைகளின் அழிவும், வெற்றிலைக்கேணியின் வீழ்ச்சியும் ஆனையிறவின் தலைவிதியை ஏலவே தீர்மானித்து விட்டிருந்தன!

-டி.சிவராம்

## புலிகளால் கைப்பற்றப்பட்டதாகச் சொல்லப்படும் ஆயுதங்கள் இந்த ரகங்கள் தான்!







**155 mm ஆட்லறி**
ஷெல் வேகம்: 897 மீ/ செ.
சுடுவீச்செல்லை: 39 கி.மீ
சுடுவீதம்: நிமிடத்திற்கு 2 சுற்றுக்கள் ஆகக்கூடுதல் 4அல்லது 5
கைப்பற்றப்பட்ட ஆட்லறிகள் : 3




**122 mm ஆட்லறி**
ஷெல் வேகம்: 515 மீ/ செ.
சுடுவீச்செல்லை: 18 கி.மீ
சுடுவீதம்: நிமிடத்திற்கு 6–8 சுற்றுக்கள்
கைப்பற்றப்பட்ட ஆட்லறிகள் : 2




**120 mm மோட்டார்**
ஷெல் வேகம்: 897 மீ/ செ.
சுடுவீச்செல்லை: 7.5 கி.மீ
கைப்பற்றப்பட்ட மோட்டார்கள் : 12

நன்றி - நூலகத்திட்டம்



# சிங்களக் கட்சிகள் எந்தப் பக்கம்?

சிங்கள கட்சி ஒன்றுக்கான அனைத்து தயாரிப்புகளும் முடிவடைந்து விட்டன எனக் கூறப்படுகின்றது. பரந்த ஒரு முன்னணியாகவே அது தோற்றம் பெறக்கூடும். கடந்த 10 வருட காலப்பகுதி முழுவதும் இந்த சக்திகள் அரசியல் வடிவத்தை பெற்று வந்தன. எவ்வாறாயினும், சுயமான அரசியல் நிகழ்ச்சி நிரல் மற்றும் அடையாளம் என்பவற்றுடன் அரச அதிகாரத்திற்கான போட்டித்தன்மையை அவை வெளிப்படுத்தவில்லை. சிங்கள தேசியவாத இயக்கத்தின் நவீன ஆலோசகராக கருதப்படக் கூடிய பேராசிரியர் நளின் டி சில்வாவுக்கு இவ்வாறான அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று இருக்கவில்லை. அவரது துறையாக தத்துவவியல் கருத்தியல் துறை விளங்கியது. ஒருபுறம் நவீன சிங்கள தேசியவாத சக்திகளின் தத்துவ அடிப்படையை உருவாக்கிய நபராக பேராசிரியர் நளின் டி சில்வா வரலாற்றில் இடம்பெறுவார். அவர் ஒரு தசாப்தத்திற்கும் அதிகமான காலம் முழுவதும் தனியே கருத்தியல் தளத்திற்கு சிங்கள தேசியவாதத்தை கட்டியெழுப்ப போராடினார். அவருக்கு உதவும் முகமாக பல-தரப்பட்ட பேராசிரியர்கள் முன்வந்த போதிலும் தனது போராட்டத்தை கைவிடாது முன்னெடுத்துச் சென்றவர் நளின் டி சில்வா மட்டுமே. பேராசிரியர் நளின் டி சில்வாவிடம் காணப்பட்ட அம் மேலாதிக்கத்திற்கு தத்துவவியல் கருத்தியல் தளத்தில் இருந்து சவால்கள் எதுவும் விடுக்கப்படவில்லை. மாறாக பிரயோக ரீதியிலான அமைப்பு துறைகளினாலேயே சவால்கள் விடுக்கப்பட்டன. முன்பு மக்கள் தோழர்கள் அமைப்பின் தலைவராக இருந்த சம்பிக்க ரணவக்க சிங்கள தேசியவாத இயக்கத்திற்கு தலைமை தாங்கி விரைவில் முன்னணி நிலையை அடைந்தார். அவரிடம் அரசியல் கருத்தியல்வாத திறமை காணப்பட்டது. தேசியவாத இயக்கமொன்றை கட்டியெழுப்ப தேவைப்படும், பிறர் மீது பீதியையும், குரோதத்தையும் வளர்த்தெடுக்கும் சரளமான அரசியலை அவர் உருவாக்கினார். ஒருபுறம் சம்பிக்க ரணவக்க ரோஹண விஜேவீரவின் பண்புகளைப் பெற்றி-ருந்தார். 1987-90 காலப்பகுதியில் ஜே.வி.பியுடன் இருந்த தொடர்பினை அவ்விதமே வளர்த்திருந்தா-ராயின் சிலவேளைகளில் ஜே.வி.பியின் போராட்ட குணமுள்ள பிரபல தலைவராக மாறும் வாய்ப்பை அவர் கொண்டிருந்திருக்கலாம். ரோகண விஜேவீரவும் சிங்கள தேசியவாதத்தை தனது அரசியல் கருத்தியல் அடிப்படையாக ஓரளவு கருதிக் கொண்டார். எனினும் அவரது பிரதான சிந்தனையாக சோசலிசம் காணப்-பட்டது. சோசலிசத்தை ஏற்படுத்தும் முகமாக பயன்படுத்தக்கூடிய கருத்தியல் ஆயுதமாக விஜேவீர சிங்கள தேசியவாதத்தை கருதினார். அவர் சிங்கள தேசியவாதி அல்ல. சம்பிக்க ரணவக்க அவ்வாறில்லை. அவரது ஒரே சிந்தனை சிங்கள தேசியவாதமாகும். அவரது நோக்கம், சிங்கள தேசியவாத மேலாதிக்கம் கொண்ட முதலாளித்துவ இலங்கை தேசமாகும். ஏகாதிபத்தியம் போன்ற எண்ணக்கருக்கள் அவரது கருத்தியலில் உறுதியான நிலைப்பாட்டை கொண்ட-வையல்ல. உண்மையாக அவர், உலகமயமாக்கலில் ஐக்கிய அமெரிக்காவுடனான சகவாசம் ஒரு யதார்த்தம் என்றே ஏற்றுக் கொள்கின்றார்.

**-சுனந்த தேசப்பிரிய**

பேராசிரியர் நளின் டி சில்வாவுக்கு நீண்ட துாரம் பயணிக்கும் திட்டம் எதுவுமில்லை. அவர் சோச-லிசத்தை போன்று முதலாளித்துவத்தையும் நிராகரிக்கின்றார். சிங்கள தேசியவாத இயக்கத்தின் தலைமைத்துவத்தை, இவரை மீறிக் கைப்பற்றிக் கொள்ள சம்பிக்க ரணவக்கவுக்கு கிடைத்த சந்தர்ப்பம் அல்லது வாய்ப்பு இவ்விடயமாகும். அதாவது சிங்கள முதலாளித்துவ வர்க்கத்துடன் தந்திரமான கூட்டுறவை பேணிக் கொள்வதாகும். சிங்கள வீரவிதான என்ற பெயரில் கூறப்படும் சிங்கள வர்த்தகர்களின் அமைப்பு தற்போது நாடு முழுவதும் பிரபலமாக உள்ளது.

தமிழ், முஸ்லிம் வர்த்தகர்களை விட வணிகத்-துறையில் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது வீரவிதானவின் நோக்கமாகும். சிங்கள வீரவிதானவும் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கமும் நவீன சிங்கள தேசியவாத இயக்கத்தின் இரட்டைக் குழந்தைகள் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் சம்பிக்க ரணவக்க சிங்கள வீரவிதானவுக்கு அவ்வாறான தலைவர் ஒருவர் இல்லை. சிங்கள வீரவிதான தேசிய கூட்டத்தின் பிரதம விருந்தினர் உரையை ஆற்றுவதும் சம்பிக ரணவக்க, அவர்களே. சிங்கள கட்சியின் ஒரு தலைவராக தற்போது பிரசித்தி பெற்றுள்ள ஜனாதிபதி சட்டத்தரணி எஸ்.எல்.குணசேகர அவர்களும் சம்பிக்க ரணவக்கவுடன் ஒரே மேடையில் தோன்றி நிற்பவர்.

உத்தேச சிங்கள கட்சியின் நோக்கம் மற்றும் அதனால் இந்நாட்டிற்கு ஏற்படக் கூடிய அழுத்தங்கள் என்பனவற்றை விளங்கிக் கொள்ளும் முகமாக கலந்துரையாடப்பட வேண்டிய பிரதான தொனிப்-பொருள் நவீன சிங்கள தேசியவாத இயக்கத்தில் காணப்படும் பலதரப்பட்ட போக்குகளும் மற்றும் இவற்றின் மேலாதிக்க போக்கு எவ்வாறு காணப்படும் என்பதுமாகும்.

பேராசிரியர் நளின் டி சில்வாவின் அரசியல் கட்சி மக்கள் ஐக்கிய முன்னணி. 1999 டிசம்பர் ஜனாதிபதி தேர்தலில் இக்கட்சி பகிரங்கமாக சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்கியது. இவ்வாறு ஆதரவு வழங்கியதன் மூலம் சந்திரிகாவை யுத்த பாதையில் தரித்து வைத்திருத்தல் அவர்களின் நோக்கமாக இருந்தது. ஸ்ரீ.ல.சு.க மற்றும் ஐ.தே.க ஆகிய கட்சிகளில் உள்ள சிங்கள தேசியவாத சக்திகள் இதுநாள்வரை, அக்கட்சிக்குள் தரித்து இருந்து யுத்த வழியில் அரசாங்கத்தை முன்னெடுத்துச் செல்லலாம் என எண்ணியிருந்தன.

ஸ்ரீ.ல.சு.க மற்றும் ஐ.தே.கட்சிகள் இரண்டி-னாலும் வெளிப்படுத்தப்படாத நிலையில் சிங்கள தேசியவாத இயக்கமொன்று கட்டியெழுப்பப்பட்டுக் கொண்டிருப்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இதற்கு சிங்கள வர்த்தக வகுப்பினரின் ஆதரவும், அனுசரணையும் கிடைக்கின்றது. முன்ன-ணியின் சக்திவாய்ந்த அணியாக செயற்படும், இளம் செயற்பாட்டாளர்களைக் கொண்ட பலம் வாய்ந்த ஒரு தொகுதி பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம் என்ற பெயரில் ஒன்றுபட்டுள்ளது. நளின் டி சில்வா, சூரிய குணசேகர, மங்கள இலங்கசிங்க ஆகி-யோரினால் பரந்தளவில் தீர்மானிக்கப்படும் தத்துவ கருத்தியல்கள் இவற்றுக்குரியது. இராணுவத்தில் இருந்த, இருக்கின்ற தலைவர்கள் கூட்டமும் இவற்றில் அடங்கும். நாட்டில் பிரதான பௌத்த பிக்-குகளினால் வழங்கப்-படும் அனுசரணை மற்றும் ஆசீர்வாதம் இந்த நவீன சிங்கள தேசியவாத இயக்கத்திற்கு பரிசுத்தத்தை தோற்றுவிகின்றது. அனைத்தையும் விட நவீன சிங்கள தேசியவாத இயக்கத்தின் இன்னொரு விடயமாக தமிழ் தேசியவாத இயக்கமும் இதன் பலமான வெளிப்பாடான புலிகள் இயக்கமும் காணப்படுகின்றது. புலிகள் இயக்கத்தின் இருப்பு மற்றும் செயற்பாட்டின் காரணமாக நவீன சிங்கள தேசியவாத இயக்கத்தின் அரசியல் பிரச்சார செயற்பாடுகளுக்கு தேவைக்கு அதிகமான வளங்கள் வழங்கப்படுகின்றன.

கருத்தியல் ரீதியான அரசியலாக அரச அதிகாரத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு ஒழுங்கமைப்பாக இதற்கு முன் சிங்கள தேசியவாத இயக்கமொன்று இலங்கையில் தோன்றியிருக்க-வில்லை. இச் சந்தர்ப்பத்தில் கூட அது எவ்வளவு துாரம் வெற்றிகரமாக முன்நோக்கிச் செல்லும் என்று கூற முடியாது. எனினும், இவ்வாறான இயக்கத்துக்கு அடிகோலும் விடய மூலங்கள் பல உண்டு.

1976ல் வட்டுக்கோட்டையில் நடைபெற்ற தமிழ் கட்சிகளின் கூட்டத்தில் தமிழர் விடுதலை கூட்டணி தோன்றியது போன்ற ஒத்த நிகழ்வு நோக்கி சில வேளைகளில் சிங்கள தேசிய இயக்கமும் பயணிக்கக் கூடும். எனினும் அதற்கு இன்னும் அமிர்தலிங்கம் போன்ற தலைவர் ஒருவர் இல்லை. அந்த பாத்திரத்-திற்கு ஓரளவு பொருத்தமான ஒருவராக அரசியல்-வாதி சுசில் முனசிங்கவைக் கருதலாம். எனினும் அவரது அதிகார வெறி இதற்கு தடையாக விளங்-கியது. அவர் தற்போது சந்திரிகாவுக்கு ஆதரவு அளிக்கின்றார். திலக் கருணாரத்னவை விடுத்து எஸ்.எல்.குணசேகரவினால் அப்பாத்திரத்தை வகிக்க முடியாது. திணேஷ் குணவர்தனவுக்கு தேசிய தலைமை பிரதிமை உண்டு. எனினும் அவர் சந்திரிகாவுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கிறார்.

புலிகள் இயக்கம் தமிழ் அரசியலின் மேலாதிக்-கத்தைக் கைப்பற்றிய அளவுக்கு இலகுவில் இந்த சிங்கள தேசியவாத இயக்கத்துக்கு தெற்கின் அரசியல் மேலாதிக்கத்தை பெறுதல் இலகுவானது அல்ல. எனினும் நீண்ட துாரம் செல்ல வேண்டிய பயணம் அது. இன்று அவர்களின் வெற்றியானது அரசாங்கத்தை யுத்தப் பாதையில் பயணிக்கச் செய்வதிலேயே தங்கியுள்ளது. ஏனெனில், தமிழ் சிங்கள மக்களுக்கிடையில் சமாதானமான அரசியல்

→19

# 12 வருடங்கள் .....

உத்தரவாதப்படுத்த வேண்டியது அவசியம் என்பது உணரப்படுவது மாத்திரமன்றி, கொள்கையும் என்ப-தனால், முஸ்லீம்கள் அச்சம், சந்தேகம், பயமற்று வாழ்வதற்கான சூழ்நிலைகள் உடனடியாக ஏற்படுத்தப்படுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குவர் என்ப-தையும், முஸ்லீம்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கு எதிர்பார்க்கப்படும் முழு உத்தரவாதமும் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

3. தாயகத்தில் முஸ்லீம் மக்களின் நலன்கள் பாதுகாக்கப்படும் எனவும், தாயகத்தில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக முஸ்லீம் மக்கள் ஏனைய தமிழ் பேசும் மக்களுடன் பெருமளவில் இணைவதன் மூலமாகத்-தான் தமது மண்ணையும், கலாச்சா-ரத்தையும் காப்பாற்றமுடியுமென்ப-தையும், முஸ்லீம் மக்களின் நலனுக்-காக, தமிழீழ விடுதலை புலிகள் தொடர்ச்சியாகப் பாடுபட்டு வரு-வார்கள் என்பதும் உறுதியாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

4. முஸ்லீம்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அபிலா-சைகள் பாதிக்கப்படாத வகையில் இந்திய இலங்கை ஒப்பந்தம் முழுமை-யாக அமுலாக்கப்படுவதற்கு தமிழீழ விடுதலை புலிகளும் முஸ்லீம் ஐக்கிய முன்னணியும் ஒத்துழைப்பு வழங்குவர்.

5. மாகாண சபைக்கான 13வது அரசியல் சட்டத்திருத்தம் முஸ்லீம் மக்களினதும், ஏனைய தமிழ் பேசும் மக்களினதும் அடிப்படை அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்ய-வில்லை. இச்சட்டத்திருத்தம் இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு முரணான வகையில் சட்டமாக்கப்பட்டுள்ளது. மேலும் 13வது சட்டத்திருத்தத்தினுள் உள்ளடங்கிய சில சரத்துக்களும், இந்திய இலங்கை உடன்பாட்டிற்கு முரணானதாகவுள்ளது. இந்நிலையில் 13வது அரசியல்திருத்த சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது.

6. முஸ்லீம் மக்களது உரிமை-களைப் பாதுகாக்கவும், ஆட்சியதிகா-ரங்களை நியாயமான முறையில் பகிர்ந்து கொள்ளவும் கூடிய ஏற்பாடுகளைச் செய்யும் போது, அத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களின் தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு பாரதுாரமான குந்தகமெதுவும் ஏற்படுத்தக் கூடாது.

7. மேற்கூறியதனடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணசபையில் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்குள்ள இனஉரிமைகளையும், சலுகைகளை-யும், வாய்ப்பினையும், சுதந்திரத்-தினையும் அனுபவிப்பதற்கு, வடக்கு கிழக்கு மாகாணத்தை தமது தாயக-மாகக் கொண்ட முஸ்லீம்கள் உரித்துடையவர்கள்.

8. கிழக்கு மாகாணத்தில் முஸ்லீம்கள் 33% தொகையினர். வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகா-ணத்தில் முஸ்லீம்கள் 18% தொகை-யினர். முஸ்லீம்கள் அதிகூடிய பாதுகாப்பை பெற்று, ஆட்சியதி-காரங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினையும் பெறக்கூடிய வகையில், ஒன்றிணைந்த தாயகத்தி-னுள் 30% குறைவில்லாத வகையில் மாகாணசபையில் பிரதிநிதித்துவும் பெறுவதற்கும், அமைச்சரவையில் இடம் பெறுவதற்கும் உரித்துடைய-வர்கள் என்பதை ஏற்றுக் கொள்வ-துடன், இவ்விகிதப்படியான உரித்துக-ளைப்பெறுவதற்கு தேவையான அரசியல் சட்ட ஏற்பாடுகளைச் செய்வதற்கு இருதரப்பினரும் முழு முயற்சிகளையும் மேற்கொள்வர்.

9. வருங்கால அரச காணிப்-பங்கீடு முஸ்லீம்களுக்கு கிழக்கு மாகாணத்தில் 35% குறைவில்லா வகையிலும், மன்னார் மாவட்டத்தில் 30% குறைவில்லாத வகையிலும், வடமாகாணத்தின் ஏனைய பகுதிகளில் 5% குறைவில்லாத வகையிலும் இருக்க வேண்டும்.

10. வடக்கு கிழக்கு தாயகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வாழும் முஸ்லீம்களின் விகிதாசாரத்தின்படி, பொதுத்துறை வேலை வாய்ப்பிற்கான உரிமையை முஸ்லீம்கள் கொண்டி-ருப்பர்.

11. கல்வித்துறையில் எல்லா இடங்களிலும் சமவாய்ப்புகள் பேணப்-படும் வரை பல்கலைக்கழக அனுமதி-யின் போது, கல்வித்துறையில் பின்-தங்கியுள்ள பிரதேசங்களில் விசேட கவனிப்பு செலுத்தப்படும். பல்கலைக்-கழகமட்டம் வரையிலான பிரத்தியேக கல்வி வசதிகள் [illegible]லீம்களுக்காக ஏற்படுத்தப்ப[illegible]ல்லீம் மக்க-ளுக்காக இஸ[illegible] பல்கலைக்கழகம் நிறுவப்படும்.

12. முஸ்லீம் மக்களது தனித்து-வத்தின் உரிமைகள், அக்கறைகள் என்பவற்றை பாதிக்கக்கூடிய எதுவித சட்டவாக்கங்களும், அவற்றிற்கு முஸ்லீம் பிரதிநிதிகள் ¾ பெரும்பான்-மையினர், சார்பாக வாக்களித்-தாலன்றி, வடக்கு கிழக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்படலாகாது.

13. வடக்குகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக ஒரு முஸ்லீம் முறையாக நியமிக்கப்-பட்டிருந்தாலன்றி அம்மாகாண சபையின் பிரதி முதலமைச்சராக ஒரு முஸ்லீம் நியமிக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் சட்ட ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும்.

14. வடக்கு கிழக்கு மாகா-ணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்-மையாக வாழும் பகுதிகளில் அவர்கள் அரசியல், நிர்வாக, அபிவிருத்தி விடையங்களில் உரிய பங்கினைப் பெறுவதற்கு தேவையான அரசியல், நிர்வாக, அபிவிருத்தி அலகுகள் பல்வேறு மட்டங்களில் உருவாக்கப்-படுதல் வேண்டும். இதுபற்றி விடுத-லைப் புலிகள் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளனர். இவற்றுள் உள்ளடக்கப்பட வேண்டிய பாரம்பரிய எல்லைகள், மூலவளங்கள் என்பன பற்றி மேலும் இருபகுதியினரும் ஆய்வு நடத்தி இறுதி முடிவு மேற்-கொள்ளப்படும்.

15. தமிழ் பேசும் மக்களின் தாய-கத்தை அபகரிக்கும் நோக்குடனும், அங்குள்ள இனப்பரம்பலை மாற்றி அமைக்கும் வகையிலும், அவர்களது பொருளாதார, அரசியல், நிர்வாக பலத்தினை முறியடிக்கும் கொள்-கையுடனும் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட அரச குடியேற்றங்களால் ஏற்பட்ட பாதிப்புகளை களையும் வகையில் ஒரு குடியகல்வுக் கொள்கை உருவாக்கப்படுதல் வேண்டும்.

16. தமிழ் பேசும் மாகாண சபைக்காக நடக்க இருக்கும் எதிர்வரும் தேர்தல் நியாயமான அடிப்படையில் தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை கொண்டிருத்தல் வேண்டும். இவ்-வாக்காளர் பட்டியல் எந்த ஆண்டினை அடிப்படையாக கொண்டிருத்தல் வேண்டும் என்பதுபற்றி விரிவாக ஆராயப்பட்டது.

17. வடக்கு கிழக்கில் நடை-பெறும் போர் நடவடிக்கைகளினால் உண்மையில் அப்பாவி மக்களே சொல்லொணா பெருந்தொல்லைக்-குள்ளாகின்றனர். மக்கள் சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப போர் நிறுத்தம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

18. யுத்த நிறுத்தத்திற்குப் பின்னர் மக்கள் இயல்பான வாழ்க்கைக்கு திரும்பி முறையான மாகாண சபைத் தேர்தல் நடக்கும் வரையும் இடைக்கால நிர்வாக அரசு ஒன்று அவசியமாகும். இந்த இடைக்கால அரசியல் ஏற்கனவே இது தொடர்பில் செய்யப்பட்ட முடிவின் பிரகாரம் அங்கத்துவம் அமைதல் வேண்டும்.

ஒப்பம்

சதாசிவம் கிருஷ்ணகுமார்,
மத்திய குழு உறுப்பினர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
21.04.1988

எம்.ஐ.எம். மொகிதீத்
செயலாளர் நாயகம்
முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி.
21.04.1988

நன்றி - நூலகத்திட்டம்



# சித்திரவதை

# கவிதா சாட்சியம்

## யமுனா ராஜேந்திரன்

தனது
போர்வையால்
சுருக்கு மாட்டிக் கொண்டு
தற்கொலை செய்து கொண்ட
ஒரு சகோதரன் பற்றி எனக்குச்
சொல்லு

அவன் கலக்கல் சாராயம்
குடித்திருந்தானா என்ன?

ஒன்பதாவது மாடியிலிருந்து
குதித்துத் தற்கொலை செய்து
கொண்ட
ஒரு சகோதரன் பற்றி எனக்குச் சொல்லு

தனிமையிலிருந்த போது பிடிப்புத்
தடுமாறித்தான்
அவன் கீழே விழுந்தானா என்ன?

முகமூடியணிந்தபடி
தனது இரத்தச் சொந்தங்களை
அணி வகுப்பிலிருந்து காட்டிக் கொடுத்தானே

அவனைப் பற்றிச் சொல்லு எனக்கு

அவன் தனியனாயிருப்பதால்
மட்டும்
அவன் சருமம்
வேறாகி விடுகிறதா என்ன?

சரி சரி எனக்குச் சொல்லு

சிறைச்சாலையிலிருந்து திரும்பி வரும் போது
கர்ப்பமாக வந்த ஒரு சகோதரியைப் பற்றி
எனக்குச் சொல்லு

அவள் மீது விபச்சாரிகளுக்கு எதிரான
சட்டத்தின் கீழ்
வழக்குத் தொடுக்கப்படுமா என்ன?

தனது கிழிந்த
ஜீன்ஸ்பேண்ட் துணியைக் கொண்டு
சுருக்கு மாட்டித் தற்கொலை செய்து கொண்ட
ஒரு சகோதரன் பற்றி எனக்குச் சொல்லு

சிறை அறைக்குள் அவன்
கத்திரிக்கோலை ஒளித்து வைத்திருந்தானா
என்ன?

சொல்லுங்கள் சார்
சொல்லுங்கள் எனக்கு

சின்னாபின்னமாக உருக்குலைந்த
ஒரு பிணத்தின் கோரமான உருவம்

உங்கள் மனச்சாட்சியின் மீது
உட்காரத் தொடங்கவில்லையா இன்னும்?

என்ன செய்தியென்று சொல்

***ஸிட்னி சியோ ஸெபானியா***

சமூக மாற்றத்திற்கும் வன்முறைக்கும் உள்ள உறவு தொடர்பாக மார்க்ஸ், லெனின், டிராட்ஸ்க்கி போன்ற மார்க்ஸியர்களும் மார்க்ஸியர் அல்லாதவர்களான காந்தி, மாட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா போன்ற கோட்பாட்டாளர்களும் நிறைய விவாதித்திருக்கிறார்கள். இதற்குப் பிற்பாடு வன்முறையைக் கோட்பாட்டு ரீதியில் விளக்கிய கருத்தியலாளர்கள் என அனா அரன்ட் பெனான் குவேரா என்பவர்களை நாம் காண முடியும். இத்தகைய விவாதங்கள் வழி-முறையும் இறுதி தாஸ்த்தயேவ்ஸ்க்கி போன்ற கலைஞர்களும் ஏற்கும் நிலைப்பாடு ஒன்றா-கவே இருக்கிறது. வழிமுறை மனித உளவியல் சார்ந்து குற்றப்பண்பு கொண்டிருக்குமானால் சமூக மாற்றம் என்று சொல்கிற சமூக உருவாக்கத்தின் பின் குற்றவாளியாக இருப்பதனின்றும் குற்ற மனப்பான்மையின்றும் சம்பந்தப்பட்ட மனிதன் தப்ப முடியாது என்பது தான் அது. குறிப்பாக மனிதக் கொலை மற்றும் சித்திரவதை இலக்கை அடைவதற்கான பாதையில் அனைத்தும் அனுமதிக்கப்பட்டது எனும் போக்கு என்பனவே மனிதனை நிரந்தமான மனிதனாக மாற்றுவதற்கான காரணியாகிறது எனும் நோக்கு இவர்களால் அழுத்தமாக முன் வைக்கப்படுகிறது. இரண்டாம் உலகப் போர் பாசிசம், நாசிசம் முதலாளித்துவச் சிறைகள் பின் சோவியத் பின் தேச விடுதலைச் சமூக அனுபவங்கள் நிச்சயமாகவே மனித உரிமை தொடர்பான கேள்விகளை எழுப்பியிருப்பது போலவே தாஸ்த்தயேவ்ஸ்க்கி போன்ற கலைஞர்கள் எழுப்பிய சந்தேகங்களையும் அர்த்தமுள்ள-தாக்கியிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை போன்ற சர்வதேச அமைப்புக்கள் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகள் மட்டுமல்ல, இடதுசாரி அமைப்புக்களும், புரட்சிகர அமைப்புக்களும் கூட இன்று மனித உரிமை சார்ந்த கேள்விகளை எதிர்கொள்வது மட்டுமல்ல அனுசரிக்க வேண்டியும் இருக்கிறது. கடந்த காலத்தை மீளப்பார்க்கும் வால்ட்டர் பெஞ்ஜமின் இது குறித்து நமக்கு எச்சரிக்கை விடுக்க-வும் செய்கிறார்:

வெற்றி கொண்டு விட்டானானால் அந்த எதிரியினிடமிருந்து (அந்த ஆளும் வர்க்கத்திடமிருந்து) மரணமுற்றவர்கள் கூடப் பாதுகாப்பாக இருக்க முடியாது என்று எவர் உறுதியாக நிச்சயப்படுத்துகிறாரோ, அத்தகைய வரலாற்றாசிரியன் மட்டுமே கடந்த காலத்திலிருந்து நம்பிக்கைப் பொறியை ஊதிப் பெருக்குகிற வெகுமதி-யைக் கொண்டிருப்பான். அந்த எதிரி எக்காரணம் கொண்டும் வெற்றி பெறக் கூடாது.. வரலாற்றின் எந்த ஆவணமும் சமவேளையில் காட்டுமிராண்டித்தனத்தின் ஆவணமாகவே இருக்கிறது. அந்த ஆவணம் காட்டுமிராண்டித்தனத்தினின்று விடுபட்டிருக்-காதது போலவே காட்டு மிராண்டித்-தனமானது. எவ்வாறாக ஒருவரிடமிருந்து பிறிதொருவருக்குக் கையளிக்கப்படுகிறது என்பதையும் சொல்லாமலில்லை. ஆகவே ஒரு வரலாற்றுப் பொருள்முதல்வாதி தன்னால் முடியுமான வரையிலும் இதனின்று தன்னை விலக்கிக் கொள்ள வேண்டும். அவனது இலட்சியம் வரலாற்றுக்கு எதிராக, அதைத் துடைத்தெறிகிறவனாக அவன் இருக்க வேண்டும் என்பது தான்.

மனித உரிமைகள், உலகளாவிய ரீதியில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதன் முக்கியத்துவம் தமிழ்ச் சூழலில் இன்று அதிகளவு பேசப்பட்டு வரு-கிறது. வரலாறு வர்க்கப் போராட்-டத்தினது என்பது போலவே, இன்று வரலாறு வன்-முறையினதும் எனும் நோக்கு வலுத்து வாழும் என்னும் சமூக டார்வினியத்தோடு தன்னை இணைத்-துக் காண்கிறது. தார்மீகத் தன்மை கொண்ட புரட்சிகர வன்முறை தொடர்பான கருத்துக்களை நாம் மார்க்ஸிய மரபில் கார்ல் மார்க்-ஸிலிருந்து, ஸார்-த்தர், பெனான், மார்லோ, பான்'டி, சேகுவாரா எனத் தமிழ்ச் சூழலில் கவிஞர் இன்குலாப் வரை பார்க்க முடியும். புரட்சியில் வன்முறையின் பாத்திரம் குறித்த விமர்-சனங்களை இன்று ஹனா அரன்ட், ரோஸா லக்ஸம்பர்க் எனத் துவங்கி அப்துல்லா ஒச்சலான் தமிழ்ச் சூழலில் மனுஷ்யபுத்திரன், செல்வி, சிவரமணி வரை நாம் அவதானிக்க முடியும். நீதியான யுத்தம் எனும் கருத்தில் நீதியான வன்முறையைச் செலுத்துவது என்பதும் அடங்கியிருக்கிறது. இதை மனிதாபிமானத்தின் பொருட்டான யுத்தம் என அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் வரையறுக்கிறது. குவைத் பொஸ்னியா, கொசோவா, கிழக்குத் திமோர் போன்ற நாடுகளிலான தலையீட்டை நேட்டோ நாடுகள் அவ்வாறு தான் வரையறுத்தன. இனக் கொலைக்கு எதிரான யுத்தம் எனவும் இந்த யுத்தங்களைக் கூறியது. இந்த யுத்தம் தொடர்பான விமர்சனங்களில் பொது மக்கள், குழந்-தைகள் மீதான நேட்டோ தாக்குதல்களின் பயங்கரத்தை நோம் சாம்ஸ்க்கி, ஹெரால்ட் பின்ட்டர் மற்றும் மேற்கத்திய தகவல் தொழில்நுட்ப ஊடகம் சார்ந்தவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.



அரசியல் ஆதிக்கத்திற்கான உலகில், உரிமைகளுக்குப் போராட வேண்டியிருப்-பதான சூழலில் நடைமுறையில் முற்றிலும் வன்முறை தவிர்க்கப்படக் கூடியதாகவா இருக்கிறது? வன்முறை தவிர்க்கப்பட முடியாதது. அணு ஆயுதங்களும், தேசிய அரசுகளிடம் குவிந்திருக்கும் ஆயுதங்களும், நிறுவனமயப்படுத்தப்பட்ட நிறவாதமும், ஜாதியமும் நிலவுகிற சூழலில் இவ்வமைப்பு-களைப் பாதுகாக்க ஆயுதப்படைகளும், போலீசும் இருக்கும் வரை திட்டமிட்ட-படியிலான வன்முறை முரண்கள் இருந்தே தீரும். ஒடுக்குகிற அமைப்புகளிடம் பயங்-கரமும், பீதியும், அழிவும் தரத்தக்க ஆயுதங்கள் இருக்கும் வரை எதிர் வன்முறை இருந்தே தீரும். வன்முறையில் தற்பாதுகாப்பிற்கான வன்முறை, தனது அதிகார வெளியை ஸ்தாபிப்பதற்கான வன்முறை என இரண்டு அம்சங்கள் இடம் பெறுகிறது. அனேகமாகத் தற்பாதுகாப்பிற்கான வன்முறை இங்கு இரண்டாம் பட்சமாகி, அதிகார வெளியைப் பெறுவதற்கான வன்முறையே அரச வன்முறைகளிலும் சரி, விடுதலைப் போராட்-டம் சார்ந்த வன்முறைகளிலும் நிலவுகிறது. சகலவிதமான வன்முறைக்கும் எதிராக நிற்பது என்பது, நிச்சயமாக நடைமுறை சார்ந்த அரசியல் நிலைப்பாடாக இருக்க முடியாது. ஆகவே தான் அரசியல் ரீதியான விடுத-லைக்குச் சார்பானவர்கள் வன்முறையின் தார்மீக அடிப்படையை முன்வைக்கிறார்கள்.

ஆனால், வன்முறை மனித இயல்புக்கு எதிரானது எனும் நோக்கில் சகல விதமான வன்முறைக்கும் எதிராக நிற்பது எனும் அறிவியல் நிலைப்பாடு நிச்சயமாக மனித குலத்தை நேசிப்பவர் தேர்கிற நிலைப்பாடு. ஆகவே தான் கலைஞர் இந்த நிலைப்பாட்டை நிபந்தனை இன்றி மேற்கொள்கின்றனர்.

வன்முறையை அரசியல் ரீதியிலும் அறிவியல் ரீதியிலும் நிராகரிக்கிற கலைஞன் ஏன் விடுதலைப் போராட்டங்களை நிபந்தனை இன்றி ஆதரிக்கிறான்? அதிகாரம் கொண்ட வன்முறை அமைப்புகள், ஆட்சிகள் நிராதர-வான மக்களின் மீது வன்முறையைத் திணிக்கிறது. அது மட்டுமின்றி மனித விழுமியங்களின் வளர்ச்சி நோக்கிய பயணத்-தில் அம்மக்களின் அடிப்படை மனித உரிமைகளை நிராகரிகக்கப்படுகின்றது. இதன் பொருட்டே அம்மக்களோடு கலைஞன் நிற்கிறான். இந்த தவிர்க்கவியலா முரண்களி-லும் கூட அடிப்படையில் மனித உடலுக்கும், உயிருக்கும் நிராதரவானவர்க்கும் தரவேண்டிய மரியாதையைத் தான் அவன் கோருகிறான். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பிரகடனம் அதன் விளைவு தான் எண்ணற்ற மனித உரிமைக் கருத்தாக்கங்களும், நிறுவனங்களும் அதன் விளைவு தான். சித்திரவதைக்கு எதிரான இயக்கமும், படைப்பியக்கமும் இந்த வெளி-யில் தான் மையம் கொள்கிறது. தவிர்க்க-வியலாத யுத்தத்திலும், தார்மீக நெறிமுறை-களைக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். நிராதர-வானவருக்கும், குழந்தைகளுக்கும் ஆயுத மோதலில் சம்பந்தப்-பட்டவர்கள் மரியாதை தர வேண்டும். குழந்-தைகள் நடந்து வரும் அவலத்தின் தார்மீகப் பக்கத்தையும் அறிந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறார் தென் அமெரிக்க நாடான சிலியில் கொடுங்கோலன் பினோசேயின் ஆட்சியின் கீழ் சித்திரவதைக் காட்பட்ட ஒரு தந்தை,

இரவு நான் வீட்டுக்கு வராமல்
வரும் வழி தவறி
மீள வீடு வந்து சேர முடியாது போய்விட்டால்

அதன் பின்னிருக்கும் காரணத்தை
நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென
நான் விரும்புகிறேன்

நான் கற்றுக் கொண்டதும்
நான் கற்றுக் கொடுத்ததும்
மனிதன் சுதந்திரமானவன் என்பதைத்தான்

இப்போது நான் இரும்புக் கழிகளின்
திருகாணிகளின் சத்தத்தில் தான்
கண்விழிக்கிறேன்

ஏனெனில் நான் கலாசாரத்தை நேசித்தேன்
மனிதகுல மாண்பை நேசித்தேன்
எனது புத்தகங்களின்
தீச்சுவாலைகள் இதைத்தான் எனக்கு
ஊட்டின.

வெறுப்பினால் எனது ஆன்மாவை நான்
கறைப்படுத்திக் கொள்ள மாட்டேன்

ஆனால் ஒரு நிர்வாண மனிதன்
மின்சாரம் பாய்ச்சிக் கொல்லப்படும் போது
அவன் வேதனையையும், வலிப்பின்
பயங்கரத்தையும்

நான் பார்த்தேன்

(அடுத்த இதழில் மீதி)

நன்றி - நூலகத்திட்டம்



# அவனும்... அதுவும்...

-சஞ்சுதன்

என்ன இது.. என்றுமேயில்லாதவாறு கருமை பூத்துக் கிடக்கிறது இரவு.

எழும் எந்த ஒரு சிறு ஒலியும் எனக்கு அகோரமானதாய்க் கேட்கும்... அதுவே ஒரு பயப்பீதியையும் என்னுள் உருவாக்கும் என்று இந்தத் தேசத்தின் எல்லையில் காலடி வைத்தேனோ அன்றிலிருந்து மரித்துப்போன நாட்களின் மணித்தியாலங்களில் எல்லாம் நான் மனிதன் என்பதை மறந்து போனேன். நண்பன் ஒருவனை இழப்பதும்,... இரத்தத்திற் குளிப்பதும்... எதிர்படும் அப்பாவிகளைச் சுட்டு வீழ்த்துவதும்.. நகக் கண்ணில் இரத்தக்கறையுடன் உணவுண்பதும்.. சீருடைகள் உடற்றோலானதும்.....

இப்படி ஒவ்வொன்றும் நான் மனிதன் என்பதை என்னில் வலியுறுத்திற்று.

வியட்நாமின் அடர்ந்த இருள் சூழ்ந்த இக்காடுகளுள்.. நானும் ஐந்தறிவும் .... ஆயுதமும் கொண்டு...

அதுவும் என்னை உணர்ந்து கொண்ட ஒரு நல்ல நண்பனாய்... சோகத்தில் தலைகவிழும்போது எனது சப்பாத்து முனையில் பொருத்திக் கொள்ளும். நான் சண்டையிடும்போது அதுவும் சடசடத்து ஆக்ரோசமாய்.... தூங்கும்போது என் உடலின் மீது சரிந்து... எப்போதும் ஒரு நல்ல நண்பனாய்....

அதை உற்று நான் உணரும் போதெல்லாம் என்னுள் ஒரு வினா எழும்.

"நீயும் காதலித்துள்ளாயா?" என.....

அதன் முகத்தை நான் உற்றுப்பார்த்துக் கொண்டேயிருப்பேன்..

எப்போதுமே அது பதில் சொல்லியதில்லை... ஆனால் நான் சொல்லியிருக்கின்றேன். என் காதலைப் பற்றி...

நீட்டா இப்போதெல்லாம் நான் அடிக்கடி நினைப்பதுண்டு... அவளைக் காதலித்தது தவறோ என்று...

அவள்.. அவள்....



அமெரிக்காவின் இயந்திரத்தனத்திலிருந்து இளமையின் இனிமையை எனக்காய் பிரசவித்தவள்... அவள்..

"ஏய் ஜேம்ஸ் இந்தச் சட்டை வடிவா?"

"உனக்கு எந்தச் சட்டையும் வடிவு."

"போடா முட்டாள் எல்லா லவ்வர்சும் இப்பிடித்தான் ஒரே பொய் சொல்லுவாங்கள்"

"உனக்கு என்னெண்டு தெரியும் நீட்டா? எல்லா லவ்வசும் இப்படித்தான் எண்டு? நீ எத்தனை பேரை லவ் பண்ணினாய்?"

நான் சீண்டும் போது அவள் கோபத்தால் சிவப்பதை.. நான் தீண்டும்போது அவள் மோகத்தில் சிலிர்ப்பதை...

ஒரு சிவந்த ரோஜாவின் இதழ்களை வருடியபடி...

"ஜேம்ஸ் எனக்கு போட்டிங் போறது நல்ல விரும்பம்டா"

"எனக்கும் தான்!"

"என்னது?"

"டேட்டிங் போறது."

"ஏனிப்பிடி அலையிறாய் இன்டைக்கு நாங்கள் போட்டிங் போவம்"... "ஓகே"

மெதுவாய்.. மிக மெதுவாய் என் இதழை.. அவள் இதழுடன் அழுத்திச் சேர்ப்பேன். என் கழுத்தை அவள் கரங்களால் வளைத்தபடி...

"என்ன போட்டிங்கில்.. டேட்டிங்கா"

என்ற அவள் ஜோக்குகளை...

ஆடம்பரங்கள் எதுவுமின்றி.. அவள் நானானதை.. நான் அவளானதை... தன்னுள் என்னைச் சுமக்கத் தொடங்கிய அந்த இரண்டு மாதச் செழுமையை...

எல்லாம் எல்லாவற்றையும்.. நான் சொல்ல அது கேட்டுக்கொண்டேயிருக்கும்...

அந்த நினைவுகள் என் இதயத்தில் கனத்துக் கொண்டேயிருந்தது. பிரித்து வாசிக்க முடியாமல் சீருடைப் பொக்கற்றுள் கிடக்கும் கடந்த வாரம் வந்த அவள் கடிதத்தைப் போல்...

"சரக்", "சரசரக்".... சத்தம் வந்த திசையை நோக்கி என்னுடலின் ஒவ்வொரு செல்லும் ஆயிரம் கண்கொண்டு நோக்கும்... அது என் கைகளில் ஆக்ரோசமாய்....

"ஜேம்ஸ்"..... "ஜேம்ஸ்...."

அது மார்டினின் குரல்....

"ஓம்"

"நீ போய் ஓய்வெடு இனி எனக்கு டியூட்டி விடிய இன்னும் கொஞ்ச நேரம் தான் கிடக்கு"

கர்ண கடூரமாய் பெயரறியா ஒரு பறவையின் ஒலியாய்.. எமக்கு மட்டுமே புரியக்கூடிய கட்டளையாய்.. பிளட்டூன் கமாண்டரின் விசில்...

"அட்டேன்சன்"

விரிந்து கிடந்த வரைபடமும் விசிலும் என்னுள் எதையோ உணர்த்திற்று....

"க்கும்", "எல்லோரும் சொல்வதைக் கேளுங்கள்... அருகிலுள்ள வியட்நாமியக் கிராமமொன்றை முற்றுகையிடப் போகின்றோம்.... அங்கு எதிரி யாரெனப் பிரித்தறிய முடியாதுவிடில்... அனைவரையும் கொல்வதே சாலச் சிறந்தது..."

மார்டினின் தலைமையில் நாம் சிலர் மிக மிகக் கவனமாய் முன்னேறிக் கொண்டிருந்தோம். மார்டினிடமிருந்து சடுதியான உத்தரவு "நிலையெடுங்கள்"

கிராமம் தெட்டத் தெளிவாய்த் தெரிந்தது... ஆயுதம் தாங்கிய ஓரிருவரின் அசைவும் மெல்லிய அழுகுரல்களும்.

இனி யுத்தமின்றி முன்னேறிச் செல்ல முடியாது.... சடுதியான தாக்குதலே சரியென மனஞ் சொல்லிற்று.

....அதுவே மார்டினிடமிருந்து உத்தரவாயும்....

அக்கணப்பொழுதிலிருந்து.. நான் அதுவாய்.. அது நானாய்.... அது என்னின் இதயத் துடிப்பாய்...

லப்...டப்....லப்..டப்...லப்...டப்.. லப்... டப்...லப்...டப்....

டட்... டட்... டட்.... டட்... டட்... டட்... டட்.... டப்....

விடுதி ஒன்றின் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே புகுந்தது அது...

குவிந்த கிடந்த வைக்கோற் போரினுள் உக்கிப்போன உடலும் உடையும் கொண்டு வியட்நாமிய சிறுமி.... .... ....

".... ..... ...... .... ....."

அவள் தாய் மொழியில் ஏதோ ஏதோ எல்லாம் உளறியபடி.... அவள் மொழி புரியவில்லை. எனினும் உயிர் வாழும் நம்பிக்கையின் ஒலியென அது புரிந்து கொண்டது.....

அது அவளை உற்று நோக்கிற்று... மிகச் சாந்தமான ஒரு நட்புடன் .... பூச்சி அருகில் வரும்வரை நட்புடனிருக்கும் விச



நாக்குக் கொண்ட பல்லியாய்....

சிறுமி கைகளிரண்டையும் உயர்த்தியபடி எழ...

அது கிலி கொண்டது...

அவளது ஒவ்வொரு அசைவும் தனக்கான பொறியென தப்பார்ப்பிதம் செய்தது...

ஏனோ தாய் நாட்டையும் தன் அழகிய மனைவியையும் நினைத்துக் கொண்டது.

சிறுமியின் கனவுகள்.. ஆசைகள்... உயிர் வாழும் நம்பிக்கைகள்... எல்லாம்.. எல்லாம் அவள் விழிகளினூடே தெறித்துவிழ.... அவளைச் சுட்டுக் கொன்றது.

"நல்ல வேலை... நல்ல வேலை... பிளட்டூன் கமாண்டர் பாராட்டிக் கொண்டேயிருந்தார். இன்றைய ஒப்பரேசனில் பங்குபற்றிய எல்லோருக்கும் நான்கு மணிநேர ஓய்வு...போங்கள்... போய்ச்சந்தோசமா இருங்கள்"

ஓட்டமும் நடையுமாக என் ஓய்விடத்துக்குச் சென்று அதை என் தோள்களிலிருந்து நீக்கினேன். மெல்லிய புன்னகையுடன் ஒரு முத்தம் கொடுத்து சுவரில் சாத்தினேன்.

தட்டிலிருந்த ஒரு இறைச்சித்துண்டை வாயில்போட்டு சுவைத்துக்கொண்டு பொக்கற்றுக்குள் கையைவிட்டு கசங்கிக்கிடந்த அவள் கடிதத்தை எடுத்தேன்....

"அன்பே நலமா மிக நீண்ட தூரத்திலிருப்பினும் உங்களுடன் என் நினைவுகளுமிருக்கும் என்றே நினைக்கின்றேன். உங்கள் இருப்பை உறுதி செய்ய என்றும் கர்த்தரை வேண்டுவேன். அன்பே, உங்கள் வரவிற்காய் நான் மட்டும் காத்திருப்பதாய் எண்ணல் வேண்டாம். போன வாரம் பிறந்த உங்கள் மகளும்..."

என்னுள் ஏதோ ஒன்று உடைந்தது... "எனக்கு மகளா கடவுளே... இல்லை"

மெல்லிய நூலாடையில் அவளைப் பார்க்கும் போதெல்லாம் ஒரு ஏழைச் சிறுமிபோல....

"இல்லை ......நீட்டா..... இல்லை"

அவளது மொழியும் எனக்குப் புரிவதில்லை... அன்பே எனினும் அவள் உயிர் வாழும் நம்பிக்கையுடன் என் முலைக்காம்பை இறுகப் பற்றிக்கொள்கிறாள்... மேலும்...

இல்லை... இல்லவேயில்லை.. என் குழந்தை அருகில் வர நான் கிலி கொள்வேனா?... வாரி அணைக்கும்போது விச நாக்கால் விழுங்கி விடுவேனா?... நான்.... நான்.

சுவரோரம் சாய்ந்திருந்த அதைப் பார்க்கிறேன். கறுத்து நீண்ட... ஏதோ ஒன்றாய்... காலனின் கயிறாய்... விசப் பாம்பாய்... இன்னும் என்னென்னவோவாய்... அது அது என்னை விழுங்க வருவதாய்.....

ஐயோ.. இல்லை... இல்லவேயில்லை.

ஜேம்ஸின் அழுகுரல் வியட்நாமியக் காடெங்கிலும் எதிரொலித்தது.

அவன் ஏன் அழுகிறான் என்பதை புரியாத அவர்கள் அவனைச் சுற்றி நின்றார்கள்.

அது அனாதரவாய் சுவரோரமே கிடந்தது.

நன்றி - நூலகத்திட்டம்



## அபிப்பிராயம் தெரிவிப்பது பற்றி ...

நான் ஆரம்பப் பாடசாலை வகுப்பொன்றில் இருந்து அபிப்பிராயம் தெரிவிப்பது பற்றி கட்டுரையொன்று எழுதுவதெப்படி என எனது ஆசிரியரை கேட்பதாகக் கனவொன்று கண்டேன்.

'அது மிகவும் சிரமமானது' எனத் தனது கண்ணாடிகளின் ஓரங்கள் வழியாகப் பார்த்துச் சொன்னார். 'உனக்குக் கதையொன்று சொல்கிறேன்'.

'ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தையொன்று பிறந்ததும் வீட்டார் அனைவரும் மகிழ்ந்தனர். ஒரு மாதம் ஆனதும் அவனை விருந்தினருக்குக் காட்டும் நோக்கோடும் பாராட்டுப் பெறும் நோக்கோடும் வெளியே எடுத்து வந்தனர்.

ஒருவர் 'இவன் ஒரு பணக்காரன் ஆவான்' என்று கூறினார். அவருக்கு நன்றி தெரிவித்தனர். வேறொருவர் 'இந்தப் பையன் ஓர் அதிகாரியாவான்' என்று சொன்னார். இந்தக் கூற்றுக்குப் பிரதியாக அவருக்குப் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

மற்றொருவர் 'இந்தப் பிள்ளை ஒரு நாள் இறக்கும்' என்று தெரிவித்தார். முழுக் குடும்பத்தினரும் அவரை நன்று நையப் புடைத்தனர்.

'ஒரு நாள் இக்குழந்தை இறக்கும் என்பது தவிர்க்க முடியாதது. அவன் செல்வன் ஆவதும் அதிகாரி ஆவதும் பொய்யாக இருக்கக் கூடும். பொய் சொன்னவருக்குப் பரிசும் பாராட்டும். கட்டாயம் நடைபெறக்கூடியதைக் கூறியவனுக்கு அடியும் உதையும்.

நீ...'

'எனக்குப் பொய் பேச விருப்பமில்லை. அதே நேரம் அடிவாங்கவும் விருப்பமில்லை. அப்படியானால் நான் என்ன சொல்ல வேண்டும்?'

அப்படியானால்... ஆ! பிள்ளையைப் பார்த்து... 'இந்தப் பையன் ஓ... ஓ... இவன்...இவன்... இவன்...'




**போர்க்காலச் சிந்தனைகள்**
**கட்டுரைத் தொகுதி**
சீன மொழியில்: லூ ஷுன்
மொழிபெயர்ப்பு: க.நடனசபாபதி

வெளியீடு:
தேசிய கலை இலக்கியப் பேரவை
விநியோகம்:
வசந்தம் (பிரைவேட்) லிமிடெட்
44, 3வது மாடி
கொழும்பு மத்திய கூட்டுசந்தைத் தொகுதி
கொழும்பு - 11

விலை: 100.00

I I I

சீன இலக்கியத்தின் முன்னோடிகள் எனக் கருதத்தக்கவர்களுள் ஒருவரான லூ ஷுன் இன் ஒரு சிறு கட்டுரை இது.

லூ ஷுன் சீன இலக்கியத்தில் சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என படைப்பின் பல பரிமாணங்களையும் பயன்படுத்துபவராக விளங்கினார். அதனால் தானோ என்னவோ அவரது கட்டுரையில் கூட இலக்கிய செழுமை படர்ந்து காணப்படுகின்றது. சீன புரட்சிக் காலத்தை ஒட்டி அவரால் எழுதப்பட்ட இக்கட்டுரைகள் சமூக மாற்றத்திற்கான அறிவுறுத்தல்களாக மட்டும் இல்லாமல் ஒரு அழகிய இலக்கியப் படைப்பாகவும் நகைச்சுவையாகவும் அக்காலகட்டதை உணர்த்துபவையாகவும் உள்ளன. அத்தோடு, இக்கட்டுரைகள் சீன புரட்சிக் காலத்தை எமக்கு முன் விரித்துக் காட்சிப்படுத்துகின்றனவாகவும் இருக்கின்றன.

சீன புரட்சிக் காலத்தில் லூ ஷுன் சீன இலக்கியத்திற்கு ஆற்றிய பணி அளப்பரியது என்று சொல்கிறார்கள். அவரது எழுத்துக்கள் யாவும் சமூக மாற்றத்திற்காக எழுந்து நின்ற மக்களுக்கு வலுச் சேர்த்தது. இலக்கியத்தின் மூலமாக சீன மக்களுக்கு வழிகாட்டியாகவும் அவர் திகழ்ந்தவர்.

உலக இலக்கிய மேதைகளுள் ஒருவராகவும் இன்று இவர் போற்றப்படுகின்றார். சீனப் புரட்சிக்கு மாஓ எப்படியோ அதே போல் சீன இலக்கியத்திற்கு லூ ஷுன் என்று கூடத் தைரியமாகச் சொல்லலாம் என்கிறார் இந்நூலுக்கு முன்னுரை எழுதிய சிவசேகரம் அவர்கள்.

தமிழ் இலக்கியத்திற்கு பாரதி ஆற்றிய பங்களிப்பினை லூ ஷுன் சீன இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்புடன் ஒப்பீடு செய்யலாம் என்று கூறிய சிவசேகரம் , அந்த ஒப்பீடு யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் தாயகம் சஞ்சிகையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

1940ம் ஆண்டுகால லூஷுன்னுடைய சமூகம் பற்றிய சிந்தனைகள் இன்றும் மாற்றத்திற்குள்ளாகாமல் இன்னும் அவரை விட பலமடங்கு உத்வேகத்துடன் எதிர்த்து நிற்கப்பட வேண்டிய சமூக பிரச்சினைகளாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

லூ ஷுன் இன் போர்க்காலச் சிந்தனைகள் எனும் இக்கட்டுரைத் தொகுப்பு பருத்தித்துறை புலோலியைச் சேர்ந்த க.நடனசபாபதியினால் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு தொகுக்கப்பட்டு அண்மையில் தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ளது. க.நடனசபாபதியின் நூல் எழுத்துருப் பெறுவதும் இதுவே முதற்தடவையாகும். ஒரு சிறந்த இலக்கிய மேதையை அறிமுகப்படுத்துவதுடன் உங்கள் முன் அறிமுகமாகிறார் க.நடனசபாபதி. அவரிடம் இருந்து இன்னும் சிறந்த மொழிபெயர்ப்புக்களை நாங்கள் எதிர்பார்க்கலாம் .

லூ ஷுன் இன் ஒரு சில இலக்கியப் படைப்புகள் ஏற்கெனவே தமிழ் வாசகர்களுக்கு கிடைக்கப் பெற்றிருந்தாலும் கூட லூ ஷுன் இன் இன்னொரு பக்கத்தை 'போர்க்காலச் சிந்தனைகள்' எனும் இத்தொகுப்பினூடாக நீங்கள் காணலாம்.

– JMI

## தலைப்பிடப்படாத கவிதை

நான் தயாராய் இருக்கிறேன்
கவிதையாய் விரிய

சிறகை அகலவிரித்து
இறகுகளில் அதிர்வூட்டி
காற்றைக் கிழித்து
சிறகசைத்த
நேற்றைய வானில்
உன்னியெழுந்து
மீளச் சிறகசைக்க முனைகிறேன்

இலையுதிர்ந்தாலும்
உயிர் மூச்சை
வேரின் அடியுள் ஆளப்பதுக்கி
மீளத்துளிர்க்கும் சிறுதோப்பாய்
ஒருதுளி விந்தின் வீரியத்துடன்

ஒன்றே வானம் பூமியும் அஃதே
இடையிரவில் எப்படி நிகழ்ந்தது
ஒரு யுகத்தின் மாற்றம்?

எதுவும் இயல்பாய் இல்லை
புயலாய் எழுகிறது
உருவழிந்த மனிதத்தின் இறுதிமூச்சு
சூல்கொண்டு கொதிக்கிறது யுத்தம்
உலகச் சந்துகள் அடங்கிலும்

காற்றை ஆழ உள்வாங்கி பெருமூச்சாய்
விடவும் முடியவில்லை
நஞ்சில் வெந்து போகிறது இதயம்

என் குரல்வளையை
எப்போதும் தழுவிக்கிடக்கிறது
துப்பாக்கியின் விரல்கள்
எக்கணம் பிடியிறுகும் எனச் சொல்வதற்கில்லை

விரல்கள் நெருடும் உறுத்தலிடையிலும்
கல்லடிபட்ட மாவின் பூக்களாய்
விரவிப்பூக்கிறேன்

வினாடிக்கு இலட்சமாய் பிறக்கின்ற
குழந்தைகளின் முதல் மூச்சிலும்
மழலைக் குரலிலும்
உயர்த்தியிசைக்க விழைகிறேன்

போதும் எனக்கு
ஒருதுளி ஒளியும்
அதில் எழும் வெப்பமும்.

**திருமாவளவன்**

## நஞ்சூட்டப்பட்ட எம் மண்ணின் கதை



மண்மூடிக்கிடந்த விதைகள்
ஒரு நாள்
வெடித்துச் சிதறும் நட்சத்திரமாய்
உயிர் சிந்தும்... ...?
வெற்று முலை சப்பும்
குழந்தையின் முதுகில்
நவீன ஓவியம் வரைந்தது யார்?
நிலவற்ற வெளியில்,
பதுங்கு குழியுள்ளிருந்து வரும்
ஒரு பெண் நண்டின் பிறப்புறுப்பில்
துப்பாக்கி விரல்கள் எழுதிய
ஒவ்வொரு வரியும்
ஒவ்வொரு சொல்லும்
நஞ்சூட்டப்பட்ட எம் மண்ணின்
கதையைச் சொல்லும்.

எப்படியாயினும்,
எமக்கு மிஞ்சுவதெல்லாம்
பிச்சைப் பாத்திரங்களுடனான
ஒரு சமாதானமும்
ஊனமுற்ற மனிதர்களுமேயன்றி
வேறென்ன?

**முழுமதி எம்.முர்தளா**
24022000

## காதல் பற்றிய மூன்று கவிதைகள்

1–
பாலையாய்க் கிடந்த பூமியில்
நீ மட்டும் முளைத்திருந்தாய்
பெரு மரமாய்....
ஆழத்தில் நட்டது
நீண்ட வேர்விட்டிருக்கும்,
இருந்தும்
நிழல் கொடுத்துக் கொண்டிருந்தாய்
எவனுக்கோ!

2–
நட்புக்கும் காதலுக்குமிடையே
மெல்லிய கோடொன்று தான் இருக்கிறதென்றார்கள்
ஆளுக்கொரு பக்கம் நின்றோம்,
இணையும் எந்தப் புள்ளிகளிலும்
சந்தித்துக் கொள்ள நாம்
தயாராய் இருந்ததில்லை.
ஒருவரின் வெற்றியால்
இன்னொருவரைத் தோற்கடிக்கவும்
நாம் விரும்பவில்லை
ஆளுக்கொரு பக்கம்
தோற்றுக் கொண்டே சந்தோஷமாயிருக்க
முடிவதென்பதும் கற்பனை –
அதுவே தான் நம் வாழ்க்கையுமாய்
இருந்தது!

3–
சிதறுண்டு கிடந்த போது
தோற்றம் காட்டினீர்கள்.
பின்னர்,
நீங்களும் புரிந்து கொண்டீர்கள்:
நொருங்கிப் போன கண்ணாடியில்
முழு உருவம் தெரியாதென்று!

**ஜிப்ரான்**
10032000

நன்றி - நூலகத்திட்டம்



# ஊர்விட்டு ஊர் ஓடும் காலம் இது!

மார்ச் 19 அன்று வவுனியாவில் அரச செயலகத்தினரால் வவுனியா நகர சபை உள்ளக அரங்கில் இரண்டாயிரமாம் ஆண்டின் உதயவிழா நடைபெற்றது. இந்த விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இங்கு மேடையேற்றப்பட்ட நாடகம் பார்வையாளர்களை உணர்வுகளால் கவ்வியிழுத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. பூந்தோட்டம் பகுதியில் உள்ள கல்வியியல் கல்லூரியின் ஆசிரிய மாணவர்களால் மேடையேற்றப்பட்ட 'நிதர்சனத்தின் புத்திரர்கள்" கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்டது. நாடகத்தின் கதைக்கான கருவை ஆசிரிய மாணவர்களின் ஆலோசனைக் கருத்தாடலோடு கந்தையா ஸ்ரீகணேசன், சிறந்த முறையில் உருவாக்கியுள்ளார்.



போர்க்காலச் சூழலில் குறிப்பாக வடக்கில் இருந்து தெற்கிற்கு வருவதற்காக இராணுவ அனுமதி (பாஸ்) பெறுவது தொடர்பான பிரச்சினைகளை மக்கள் எவ்வாறு எதிர் கொள்கின்றனர் என்பதை வெளிப்படுத்தும் வகையில் கதை உருவாக்கம் இருந்தது. இது யாழ்ப்பாணத்திலிருந்து கிளியறன்ஸ் ( இதுவும் தெற்கிற்கு வருவதற்கான ஒரு வகை அனுமதி தான்) பெற்று பல்வேறுபட்ட தேவைகளிற்காக கொழும்பு வருபவர்கள் கிளியறன்ஸ்சைப் பெற்றுக் கொள்ள எப்படியான துன்பதுயரங்களைச் சந்திக்கிறார்கள் என ஒப்பிடவும் உதவிற்று. இன்றுள்ள இச் சூழ்நிலையை அரங்குக்கு கொண்டு வந்தது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமே.

பாரதியார் பாடல் பொருத்தமான இடத்தில் பொறி தட்டுகின்றது.

**ஆதித் தாய் தந்தை நீசர் உமக்கே**
**ஆயிரந் தரம் அஞ்சலி செய்வேன்.**

என்று மண்மீது காதல் கொண்டு வரும் வரிகள் சொல்ல வேண்டிய பலதை சொல்லி நகர்கின்றது.

கொழும்புக்கு எவரும் காரணம் இல்லாது போக மாட்டார்கள் என்பதை பாத்திரங்களின் வாயிலாக வெளிக் கொணர்ந்திருந்தபோதும் அவ்வளவு துன்பங்களையும் வெளிச் சொல்ல சிரமப்பட்டிருக்கின்றார் - நெறியாளர்.

**ஊர்விட்டு ஊர் ஓடும் காலம் இது**
**நாதியற்று நாயாய் அலைகின்றோமே**
**வேதனைகள் சொல்ல முடியாது - எம்**
**சந்ததிகள் படும் துன்பம் மடியாதோ...**

என்ற பாடல் வரிகள் ஒவ்வொருவரும் படும் துயரை அழுத்துகின்றது. 'கிளியறன்ஸ்' எடுத்து கொழும்பு போய் தமது அலுவல்கள் நிறைவேறாமல் படைத்தரப்பாரின் கெடுபிடிகளுக்குள் சிக்கி, கொழும்பில் நிக்க வழியில்லாமல் பொலிஸ் பதிவு பெற்றுக்கொள்ளவும் இயலாமல், மீண்டும் தமது மண்ணுக்கு கப்பலேறுவோம் என எண்ணி முடிவு எடுக்கின்றனர். இந்தக் காட்சி ஒவ்வொருவருக்கும் தமது சொந்தக்கதை போலவே இருக்கும் காரணம் நிறையப் பேருடைய நிஜக்கதை அதுதானே...

கொழும்பு சென்று தமது தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது திண்டாடுவதை வெளிக்காட்ட மக்கள் முழுப்பேரும் சேர்ந்து மேடையில் விழுவர். இன்றைய மக்கள்படும் துன்பத்தை வெளிக்கொணர்வதற்கு இப்படிமம் போதாது போலவே இருக்கின்றது. மண்ணை விட்டு வெளிச்சென்று தமது தேவை நிறைவேறாதவர்கள். மனிதன் நான்கு எனும் பாத்திரம் கூறும் கவிதை ஒன்றின் மூலம் சொல்லப்பட வேண்டிய கருத்து இப்படிப் பொறி தட்டுகின்றது.

**மீண்டும் எமது நிலத்தில் பனைவடலி**
**தோன்றி நிமிர்க துயரம் பொடிபடுக.**

இதன்போது குறிசொல்பவர் மேடையின் முன்புறத்திலிருந்து மேடையேறி

உலகம்
பிறந்திடும் -
புது
உலகம்
பிறந்திடும்.

எனக்குறி சொல்வபர் குறிபார்த்து சொல்வது மாற்றமொன்றைக் கொண்டுவருகின்றது. அது தான் இன்று மக்கள் படும் வேதனைகள் சோதனைகள் துன்பதுயரங்களை துடைத்தெறிந்து புது உலகொன்று வேண்டும் அமைதியான உலகொன்று வேண்டும் என்று பறைசாற்றி நிற்கின்றது. உண்மையில் அதற்கு மாற்றம் ஒன்று தேவை அந்த மாற்றத்தை மக்களால் மட்டுமே கொண்டு வர முடியும் மக்கள் தமது சக்தி எவ்வளவு பெரிதென்பதை உணர வேண்டும் என்பதற்காக... குறிசொல்பவர் வந்தபின் மக்கள் கையேந்துவதில் எழுச்சி கொள்ள வேண்டும் என்பதை உணர்கின்றார்கள். அந்த உணர்வலையென்பது வெறுமனே அரங்கோடு அமுங்கிவிடக்கூடாது என்பதை உணர்த்தியது.

மக்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள் அது எப்படி எமக்குக் கிடைக்கும். உயிர் வாழ்வதென்பது மனிதன் வெறுமனே உடலைச் சுமந்து அலைந்து திரிவதா? இல்லையென்பதையும் கௌரவத்துடன் உயிர்வாழ்வது அவசியம் என்பதையும், அதைபெற்றுக்கொள்ள மக்கள் எழுச்சியே தான் வழி என்பதை அழுத்தியது "நிதர்சனத்தின் புத்திரர்கள்" முடிவு.

**ஆற்றல் மிகுந்த கரங்களால் உலகை**
**விடுதலை செய்வாய் தோழா - அதன்**
**விலக்கினை முறிப்பாய் தோழா - புது**
**உலகம் சமைப்பாய் தோழா - புது**
**உலகம் சமைப்பாய் தோழா**

அனைவரும் கூடி ஆடி எழுச்சி கொள்வர். இந்த எழுச்சி தேவையென்பதை அரங்கு நோக்கிய விழிகளும் உணர்ந்திருப்பர். இருந்த போதும் கிளியறன்ஸ் மட்டுமே எமது பிரச்சினையில்லை. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். ஆயிரம் அலவங்களுக்குள் ஒரு அவலம். யாழ்ப்பாணத்தல் இருந்து வர கிளியறன்ஸ். வன்னயிலிருந்து வர? இவை போல துன்ப வேர்சாய்க்க கலைகள் களமாக வேண்டும்.

இலங்கையில் வன்னியின் மண் இருவேறு கூறாக இருவேறு நாடாக உள்ளது போல பல நடைமுறைகள் மக்களைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளது. நிறையவே உதாரணப்படுத்த உள்ள போதும் அரை மணி நேரம் வித்தியாசமாக உள்ளதே பலவற்றைச் சொல்லிவிடும். வவுனியாவின் கிராமப்புற மக்கள் அனுபவிக்கும் பல்வேறு இன்னல்களும் படைப்புகளாக்கப்பட்டு மக்கள் விழிப்படைய வைக்கப்பட வேண்டும். இதற்காக அரங்கேற வேண்டும் இன்னும் பல நிதர்சனத்தின் புத்திரர்கள்!

**க. ரவீந்திரன்**



## நோயிலிருத்தல் பற்றி....



எந்த அவசரங்களும், ஆர்ப்பாட்டமுமில்லாத சூழலில் நீ அனுப்பி வைத்திருந்த "நோயிலிருத்தலை" படிக்க முடிந்தது. நீண்ட நாளைக்குப்பின் இழுபறியின்றி வாசிக்க முடிந்ததில் ஒரு திருப்தி. புத்தகமும் வாசிப்புமாய் இருந்த சூழல், இயந்திரங்களுக்குள் சிக்குப்பட்டுப் போயிருப்பதை நினைக்கையில் கவலையாய்த் தான் இருக்கிறது.

நாவலைப் பற்றிக் கொஞ்சம் சொல்லத் தான் வேண்டும். வாசிக்கத் தொடங்க முன்னமே எழுத்தாளர் பற்றிய அபிப்பிராயங்கள் முன்னுக்கு ஓடி வந்து விடுதலைத் தவிர்க்க முடியவில்லை. இதற்கெல்லாம் நமது விமர்சகர்கள் தான் காரணம். எல்லாருக்கும் முத்திரை குத்தி விட்டிருக்கிறார்கள். கடிதத்தைப் பிரிப்பதற்கு முதல் முத்திரையிலும் முகவரியிலும் கண் போவதைப் போல் ஆட்கள் பற்றி உலாவ விடப்பட்டிருக்கும் அப்பிராயங்கள் தான் முன் செல்கின்றன. இதனால் வாசிப்பின் பிறகான சுய அனுமானங்களை அபிப்ராயங்களை ஏற்படுத்திக் கொள்வதென்பது இயலாமலாகி விடுகிறது.

ஏற்கெனவே சர்வதேச அளவில் இருக்கும் இலக்கிய இஸங்களை விட நம்மவர்களிடம் இன்னும் பல போக்குகள் இருந்து கொண்டிருப்பது நமக்குத் தெரியும் தானே. பெரும்பாலும் ஈழத்தைப் பொறுத்தவரை சில தனிநபர்கள் மட்டுமே தான் ஓரியக்கமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். நாம் புதிதாய் நுழைந்தவர்கள். நமக்கு இது பற்றி நிறையத் தெரியாவிட்டாலும். ஏதோ தெரியுமளவுக்கு இருக்கிறது தானே.

நோயிலிருத்தலை வாசிக்கத் தொடங்க முன்பே மு.பொவின் இலக்கியப் போக்கு பற்றிய உலாவித் திரியும் அபிப்பிராயங்கள், விமர்சனங்களே முன்னுக்கு வந்தன. ஆன்மீகத்தை முன்னிறுத்துகிற ஏன் கூடவே விடாப்பிடியாகவும் இருக்கிற மாற்றுக் கருத்துக்களை விமர்சனங்களைத் துணிவுடன் எதிர்கொண்டவராகவே ஒரு தனிநபர் இயக்கமாகவே இயங்கி வருகிற எமக்குத் தெரிந்த மு.பொவே கண்ணுக்குள் வந்தார். போதாதற்கு பின் அட்டைக் குறிப்பும் நாவல் இன்ன மாதிரித்தான் இருக்கும் என்பதைக் கட்டியம் கூறிவிடுகிறது.

இன்னொன்று அட்டைப்பட ஓவியர்களுக்கும், புத்தகங்களுக்கும் அல்லது உள்ளடக்கத்திற்கும் ஓவியத்திற்கும் இருக்கும் இடைவெளி குறைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு பூரண சுதந்திரமும் தெரிவும் வழங்கினால் இது ஓரளவு குறைக்கப்படலாம். அங்கு சிலர் சொல்ல கீறிக்கொடுக்கிற சித்திரக்காரனாய்த்தான் நாம் பலரைப் பார்க்கிறோம்.

சமூக நாவல் என்ற வறையறையோடிருக்கிறது நாவல். இதில் சமூகம் என்பது அவரவர் மனதில் நிற்கிற அவரவர் வாழ்கிற, அவரவர் கற்பனைக்குள் எதிர்ப்பார்ப்பிற்குள் அகப்பட்டிருக்கிற சமூகம். நான் அல்லது நீ நினைக்கிற சமூகம் அது என்ற எதிர்பார்ப்பு வாசிக்கையில் நம்மிடம் இருக்கக் கூடாது. மு.பொ. என்ற நாவலாசிரியனின் சமூகத்திற்குள் நுழைகிறோம்.

மு.பொ.வின் சமூகம் நிறைய நோய்க்கூறுகள் கொண்ட சமூகமாக இருக்கிறது. இதற்கெல்லாம் எத்தனையெத்தனையோ காரணங்கள் இருக்கின்றன- எப்படி காச நோய் உருவாகக் காரணமாய் பல காரணிகள் இருக்கின்றனவோ... அவ்வாறே. ஆனால், இந்த சமூக நோய்க்கு மயிலிட்டியில் இருப்பது போன்றது மாதிரியான ஆஸ்பத்திரிகளும் இல்லை. அதற்கென்று படித்த விஷேச வைத்தியர்களும் இல்லை. அதனால் தான் சமூக நோய்களுக்கு எத்தனை எத்தனையோ நோய் நிவாரணிகளைப் பலரும் சொல்கிறார்கள். மு.பொவுக்கும் இந்த நோய்கள் பற்றியெல்லாம் தெரிந்திருக்கிறது. தன்னளவில் இதற்கான நிவாரணியும் இருக்கிறது. ஆனால், அதையே சொல்லிவிட முடியுமா? முடியாது. சொன்னால் அது "ஆத்ம ஞானியின் அறிவுரைகள் தொகுப்பு ஆகிவிடும். ஆனால், நாவல் ஆகாது. இங்கே தான் மு.பொ என்ற படைப்பாளியும் இருக்கிறார். இலக்கியத்தில் எதுவும் முற்றாக ஆதிக்கம் செலுத்திவிட முடியாதென்பது நமக்கு விளங்குகிறது. இப்போதும் கூட இது ஓர் ஆத்மீக நூலொன்று தான் என்று சொல்ல ஒரு கூட்டம் இருந்தாலும் அதற்கப்பால் சென்று இலக்கியத்தில் நகர்த்தல் என்பது எல்லோருக்கும் வராதது. அதை மு.பொ. செய்திருப்பது விஷேசமானது.

மு.பொ. ஒரு படைப்பாளியாகவும், படிப்பாளியாகவும் நீண்ட காலங்களைக் கழித்திருக்கிறார். வாழ்க்கை அவருக்கு நிறையக் கற்றுத் தந்திருக்கிறது. அந்தப் படிப்பினைகள் அனுபவங்கள் என பலது தான் சார்ந்த கொள்கை வழிநின்று இந்நாவலில் விரவிக் கிடக்கிறது. நிறைய்ய விடயங்கள். நாமெல்லாம் அவர் மாதிரி எதிலேயும் ஈடுபட்டிருக்க மாட்டோம். நுனிப்புல் மேய்கிறவர்கள் தானே நாம். வாசித்துத் தெரிந்து கொள்ள இதில் நிறையவே இருக்கிறது. அவர் சில விடயங்களைச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் இதனை எழுதியிருப்பார். சில வேளைகளில் அப்படித் தோன்றுகிறது. இன்னும் சில வேளைகளில் அதற்கு மாற்றமாகவும் தோன்றுகிறது. எனினும் முன்னது தான் முன்னுக்கு நிற்கிறது. சிலர் தமது விடயங்களைச் சொல்லிவிட வேண்டும் என்றிருப்பார்கள். அதற்கான வழிகளைத் தேடிக் கொண்டிருப்பார்கள். மு.பொ. அந்த வழியை இங்கே காண்கிறார்.

இந்நாவல் இரண்டு பாகங்களாக ஆக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் பாகம் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரியில் இருக்கும் போதான மனப்பதிவுகள். இங்கேயும் மீண்டும் தன்னைத் தேடியே தன் பாதையில் செல்கிறார். வரலாற்றுச் சம்பவங்கள் தமிழர்களின் போர்வாழ்வு, இராணுவத்தார் நடவடிக்கைகள், இயக்க நடவடிக்கைகள் என்று பலதும் பத்தும் முன் பாகத்தில் வந்து செல்வது போல் இதிலும் வந்து போகின்றன. எது வந்தாலும் அதன் எல்லையை விட்டுப்போகாத ஆழ்மனத் தேடலிலேயே தன்னை அர்ப்பணித்திருக்கிற மு.பொவை நாம் மீண்டும் காண்கிறோம்.

இடையில் இன்னொன்று 80களுக்குப் பின்னான ஈழத்து இலக்கியத்தில் "போர் சார்ந்தவை" பெரும் மாறுதலை, தனித்துவத்தை ஏற்படுத்தின என்கிறார்கள் தானே. அந்தத் தனித்துவம் ஏற்பட்ட பின்பு நல்ல படைப்புகள் கிடைத்தன தான். ஆனால், நான் அவதானித்த இன்னொரு விடயம் என்னவென்றால், அந்தத் தனித்துவத்தை இயல்பாக உள்வாங்க முடியாத பல முஸ்லிம் எழுத்தாளர்கள் கண்டு கொள்ளப்படாமல் போனார்கள். இந்த நிலைமையை ஒரு கூட்டத்தில் திக்வல்லைக் கமாலும் எடுத்துச் சொன்னது ஞாபகம். இதில் விதி விலக்காய் நாம் சோலைக்கிளியைக் காண்கிறோம். ஆக போரிருப்பு என்பது ஈழத்து இலக்கியத்தைத் தீர்மானிக்கிற ஒற்றைப்படை விடயமாய்ப் போய்விட்டது என்பதைத்தான் சொல்ல வருகிறேன். எடுபட்ட கவிஞர்களின் கவிதைகளைப் பார் கடைசிப் பந்தியில் எப்படியாவது யுத்தகாலப் பதிவுகள் அனேகமாய் வந்துவிட்டிருக்கும்.

சமகாலத்திற்கு வந்து போகிற இரண்டாம் பாகத்தில் ஈழத்து இலக்கிய அரசியலை நாம் பார்க்கிறோம். மு.பொவுக்கு தன் அண்ணன் மீதிருக்கும் பற்றும், பாசமும், நிறைய இடங்களில் வெளிப்படுகிறது. மு.த. ஒரு அண்ணனாக, நண்பனாக, ஆசானாக, ஆன்மீக வழியாகாட்டியாகவென பல வடிவங்களில் வெளிப்பட்டு நிற்கிறார். அண்ணனும், தம்பியும் ஏற்றுக் கொண்ட கருத்தியலை அண்ணனுக்குப் பிறகு இலக்கியத்தில் எடுத்துச் செல்கிறார் மு.பொ. உண்மையில் மு.பொ. ஒரு தனித்த இயக்கம்.

மு.பொ.வின் வாழ்க்கையில் எத்தனை அனுபவங்கள், தேடல்கள், அவை அத்தனையும் அவரது பாதையின் முடிவு தேடி இட்டுச் செல்வது - நாவலுக்கான இடையூறாகத் தென்படினும் - நிறைய சிந்தனைகளைத் தருகிறது. எல்லோருமே தவிர்க்க முடியாதபடிக்கு அவரவர் பாதையில் சென்றுதானே ஆக வேண்டும். இந்நாவலின் முடிவு அவரின் கருத்தியலை நிறுவ முயல்கிறதாய் ஆக்கப்பட்டிருப்பது ஏனோ மனதோடு ஒன்றிச் செல்லவில்லை. இரண்டாம் பாகத்தில் நாவலை நன்றாக நகர்த்திச் செல்லக்கூடிய கூறுகள் தென்படுகின்றன. ஆனால், மு.பொ "தன்னை" விட்டு வெளியே வரவில்லை.

எதற்கும் நீயும் வாசித்துப் பார். உன் பார்வையில் பிரதிவேறு கோணங்களைத் தரலாம். "மு.பொவின் தர்க்க ரீதியலான ஆத்ம விசாரணையே நோயிலிருத்தல்" எனும் இந்நாவல் என்று பின் அட்டையிலேயே சொல்லியிருக்க ஏன்டா இப்படி அறுக்கிறாய் என்கிறாயா?

அதுவும் சரிதான்.

நன்றி - நூலகத்திட்டம்



# 'தரிசனம் உள்ள ஒருவரால் மட்டுமே நல்ல ஓவியங்களைப் படைக்க முடியும்!'

**– ஓவியர் கோ. கைலாசநாதன்**

ஒரு அழகான மாலை நேரம். ஓவியர் கைலாசநாதன் கொழும்பு வந்திருந்தபோது சரிநிகருக்காக அவருடன் உரையாடுவதற்காக ஒழுங்கு செய்திருந்தோம்.

பிசிறில்லாத கோடுகள். மனதின் ஆழமான உணர்வுகளை கிளரச் செய்கின்ற நேர்த்தி. கட்புலனின் உள்வாங்கலுக்குள்ளாகப் போய் மனதையும் அறிவையும் ஒருங்கே பற்றி உலுப்பிவிடுகிற வெளிப்படுத்தல். உணர்வுக்கும் அனுபவத்திற்கும் வடிவம் கொடுக்கும் லாவகம். கைலாசநாதனது ஓவியங்களில் நீங்கள் உங்களைக் காணலாம். அவை உங்களை, உங்கள் வாழ்வுபற்றி, நீங்கள் வாழும் உலக யதார்த்தம் பற்றி உங்கள் உணர்வுகள் பற்றியெல்லாம் தரிசிக்க அழைத்துச் செல்பவை. உங்களுடன் பேசுபவை.

'நவீன ஓவியம் ஒரு புரியாத மொழி. அதை அறிந்தவர்கள் மட்டுமே அதைக்காண முடியும் என்றோ அவரவர் அறிவுக்கும் ரசனைக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப அவை வெவ்வேறு அளவுகளில் பார்ப்பவரைப் பாதிக்கும்' என்றோ சொல்லப்படும் வழமையான வியாக்கியானங்களுக்குள் போலிகளும் பிரமாதமானவை என்ற அங்கீகாரத்தைப் பெற்றுவிடுகின்றன. 'கடவுளைக் கண்டேன்' என்று பரவசமடைந்தாற்போல தம்மைக் காட்டிக்கொள்வதன் மூலம் பலரதும் கௌரவத்துக்குரியவர்களாக தம்மை உயர்த்திக்கொள்ள முயலும் ஒரு கூட்டம் இந்த நவீன ஓவியத்துடன் சம்பந்தப்பட்டும் இருக்கவே செய்கிறது. இவர்கள் 'கண்டதை' 'விண்டுரைக்கப்' புறப்பட்டாலோ, நவீன ஓவியம் மட்டுமல்ல, அவர்களுக்கு மரபு ஓவியங்கள் கூடப் புரிவதில்லை என்று தெரியவந்துவிடும். 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்று இதனால் தான் சொன்னார்கள் போலும்!



கோ.கைலாசநாதன்

கைலாசநாதனுடைய ஓவியங்கள் வெளிப்படையான அழகும், உணர்வு வெளிப்பாடும் கொண்டவை. பார்ப்பவர்களை, காட்சி அழகால் ஈர்க்கப்படும் அழகுணர்வுக்கும் அப்பால் இழுத்துச் செல்லும் ஆற்றல் மிக்கவை. அவைபற்றி எவருக்குமே பேசமுடியும். எவரும் பேசுவதற்கு அதில் விடயம் இருக்கும். அதன் உள்ளே போகப்போக இன்னும் பல அர்த்த பரிமாணங்களை அவை வெளிப்படுத்தும்.

நடராசர் சிலையையும் சீகிரிய ஓவியங்களையும் 'தத்துருப' படைப்புகளாகவும் 'மரபு' சார்ந்தவையாகவும் புரிந்து கொண்டுள்ள "ஓவிய விமர்சகர்க"ளுக்கு கைலாசநாதனது ஓவியங்களை வைத்து தம்மை உயர்த்திக்கொள்வது சாத்தியமில்லை. அவை அவர்களது சிக்கலான வார்த்தை ஜாலங்களையும் மீறி தமக்காகவே பேசக்கூடியவை.

'நான் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போதே ஓவியத்தில் நாட்டம் கொண்டிருந்தேன். அப்போது வந்துகொண்டிருந்த அம்புலிமாமா, News Week போன்ற பத்திரிகைகளில் வரும்படங்களைப் பார்த்து வரைந்து நிறந்தீட்டும் பழக்கம் என்னிடம் இருந்தது. களிமண்ணில் உருவங்கள் செய்யும் ஆர்வமும் இருந்தது.

பாடசாலைகளில் கடைசிப்பாடம் நடந்துகொண்டிருக்கும்போதே வீட்டிற்கு போய் உருவங்கள் செய்யும் உந்துதல் ஏற்பட்டுவிடும். அந்த உந்துதலுடனேயே வீட்டிற்கு ஓடிவந்து உருவங்கள் செய்வேன்...." என்று தனது இளமைக்காலம் பற்றிய நினைவுகளை மீட்கிறார் கைலாசநாதன்.

சாவகச்சேரி மட்டுவிலைச் சேர்ந்த கைலாசநாதனின் ஓவிய ஆர்வத்திற்கு ஊக்கம் தருபவர்களாக அவரது தந்தையாரும் சகோதரர் கேதாரநாதன் அவர்களும் இருந்தனர். மட்டுவில் மகாவித்தியாலயத்தில் சித்திரத்தை ஒரு பாடமாக கற்பித்த விசாகப் பெருமாள் என்ற ஆசிரியர் அவரது ஓவியத்துறைக் கல்விக்கு அடித்தளமிட்ட முக்கியமானவர் என்று சொல்லலாம்.

ஆயினும், கைலாசநாதனின் ஓவியக் கல்வி முறைசார் வகையைச் சார்ந்ததாக இருக்கவில்லை. நல்ல ஓவியங்களைப் பார்த்தல், அவைபற்றி கலந்துரையாடல் என்ற வழிமுறையூடாகவே அவரது படைப்பு முயற்சிகள் வளர்ந்தன. சித்திரபாட ஆசிரியராக அவர் தனது தொழிலையும் தெரிவு செய்து கொண்டார்.

"முறைசார் கல்வி ஓவியம் தொடர்பான தொழில்சார் அறிவையும் பயிற்சியையும் வழங்க முடியுமே அன்றி அதனால் ஒரு தரிசனத்தை தர முடியுமா என்பது கேள்வியே. தரிசனம் இருக்கும் ஒருவருக்கு இவை பயன்படலாம். இவை இல்லாமலும் கூட தரிசனம் உள்ள ஒருவரால் நல்ல ஓவியங்களைப் படைக்க முடியும்" என்று கருதுகிறார் கைலாசநாதன். அவரது படைப்புகளை நோக்குகையில் அவரது இந்தக் கருத்தை நாமும் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

தனது மனதை ஏதோ ஒரு விதத்தில் பாதிக்கிற காட்சிகள் உடனடியாக இல்லாவிட்டாலும் காலம் கடந்தாவது படைப்பாக்க உந்துதலை ஏற்படுத்தித் தன்னை ஓவியமாக தீட்டவைத்திருக்கின்றன என்று கூறும் கைலாசநாதன் தனது மலையகப் பெண் தொழிலாளி, அகதி போன்ற ஓவியங்களை இந்த வகையில் உருப்பெற்றவை என்கிறார்.

'நுவரெலியா[illegible] ஆசிரியராக கடமையாற்றிய வேளையில் தினமும் நான் தங்கியிருந்த வீட்டைத் தாண்டி முதுகில் கூடையுடன் ஒரு பெண் போவார். அவருடன் நான் ஒருநாள் கூட பேசியதில்லை. ஆனாலும் அவரது உருவம் என்மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டது. இதை பிறகு நான் மாற்றலாகி வந்தபின் ஒருநாள் ஏற்பட்ட திடீர் உந்துதலால் வரைந்து முடித்தேன். ஒரே மூச்சில் வரையப்பட்ட ஓவியம் இது. இவ்வாறுதான் மட்டுவில் அம்மன் கோவிலில் நான் கண்ட ஒரு அகதிப்பெண். கையில் பிடித்தபடி ஒரு குழந்தை, இடுப்பில் ஒரு குழந்தை, வயிற்றில் ஒன்றுடன் நின்றிருந்த தோற்றம் - அவருடன் நான் பேசவில்லை. ஆயினும், அவர் தோற்றம் - அவர் ஒரு கணவனை இழந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்று என்னை எண்ணவைத்தது. இந்தக் காட்சியும் என் மனதில் ஆழமாகப் பதிந்துபோயிருந்தது. - காட்சிப் பதிவு என்று சொல்லலாம். பின் நீண்ட நாட்களின் பின் ஒரு நாள் இந்த ஓவியத்தை நான் வரைந்தேன்."

கைலாசநாதனது காட்சிகள் - அல்லது அவரைப் பாதிக்கின்ற காட்சிகள் அவரது சமூக உணர்வை வெளிப்படுத்துகின்றன என்று கூறலாமா என்று நாம் குறிப்பிடுகையில் அவர் இப்படிச் சொல்கிறார்: 'வெறும் அரசியல் ரீதியான அடிப்படையிலான பதிவுகள் என்று மட்டும் சொல்ல முடியாது. அரசியல் அற்ற அழகுணர்வு விடயங்களும் கூட ஓவியம் வரையும் உந்துதலைத் தந்திருக்கின்றன. ரெயினிலே போகும்போது அருவியில் நீராடும் பெண்களைக் கண்டிருக்கிறேன். பலதடவை அவர்களது நளினம், வளைவுகள் என்பன அழகுணர்ச்சி காரணமான ஓவிய உந்துதலை ஏற்படுத்தின. நீராடும் நங்கைகள் அவ்வாறான ஒரு ஓவியம் தான். தூரிகையின் வீச்சுக்கு இடம்கொடுப்பதற்காகவும் கூட ஓவியங்கள் வரையப்படலாம்."

ஆம், அவரிடம் வெளிப்படுவது உணர்வுகளின் வெளிப்பாடு காணும் காட்சிகள், அதன் சிந்தனையில் எழும் தரிசனங்கள். அவருள் ஏற்படுத்தும் உணர்வின் கலை வெளிப்பாடாகவே அவரது ஓவியங்கள் அமைகின்றன. அவரது பிள்ளையாரின்ரை ஓவியம், தனது அகத்தில் தான் தரிசித்த பிள்ளையார் என்கிறார் கைலாசநாதன். spring ஆல் ஆன துதிக்கை, இரும்பு மரக்கட்டைகளால் ஆன உருவம் என்பன பிள்ளையார் பற்றிய அவரது அகதரிசனம்.

உணர்வுகளை வெளிப்படுத்துகையில் காணும் பொருட்களில் புதிய வடிவங்களை காணல் அவ்வடிவங்களின் ஊடாக உணர்வுகளை வெளிப்படுத்தல் நவீன ஓவியத்துக்கு அவசியம் என்கிறார் கைலாசநாதன். உணர்வு வெளிப்பாடு இல்லாவிட்டால் ஓவியம் பரவசத்தைத்தர முடியாது என்று கருதுகிறார் அவர். அத்துடன் ஓவியத்தில் வடிவ ஒழுங்கும் முக்கியம் என்கிறார். வடிவ ஒழுங்கு இல்லை என்றால் சிதைந்த உணர்வுதான் வரும் என்று கருதுகிறார் கைலசநாதன்.

அரசியல் சமூக சூழலின் நிர்ப்பந்தங்கள் காரணமாக மனிதம் வெறும் ஆய்வுகூடப் பொருளாகப் போய்க்கொண்டிருப்பதாக உணரும் கைலாசநாதனின் 'ஆய்வு கூட மேசையில்' என்ற ஓவியம் உணர்ச்சி வெளிப்பாட்டு ஓவியம் எனலாம். ஆயினும், அந்த ஓவியம் அதனுள்ளே சென்று பார்ப்பவர்களை பல்வேறு தளங்களுக்கு அழைத்துச் செல்லும் ஒரு அருமையான படைப்பு.

ஓவியர்களில் வின்சன் வான்கோவைத் தனக்கு மிகவும் பிடிக்கும் என்று கூறும் கைலாசநாதன் அவரது தூரிகையின் வீச்சும் உணர்ச்சி வெளிப்பாடும் தான் தனக்கு மிகவும் பிடித்தவை என்கிறார்.



நீராடும் நங்கையர்



அடக்கப்பட்ட வீரியம்

ராஜபுத்தானத்து ஓவியங்களில், சீன ஓவியங்களில் மிகுந்த விருப்பம் - அவை மரபோ அல்லவோ என்பதற்கு அப்பால் - தனக்கு இருப்பதாக கூறும் கைலாசநாதன் அதற்குக் காரணம் அவற்றில் வெளிப்படுத்தப்படும் உணர்வு வெளிப்பாட்டு அழகே என்கிறார். "இயற்கையை வரைவதில் சீன ஓவியர்கள் எப்படி வெற்றிபெற்றார்களோ அவ்வாறே காதல் உணர்வை வரைவதில் ராஜபுத்தானத்து ஓவியர்கள் வெற்றிபெற்றிருந்தார்கள். உலகத்தின் சிறந்த ஓவியங்களாக இவற்றைச் சொல்லலாம் என்று கலாநிதி ஆனந்த குமாரசாமி ஒருமுறை சொன்னார். என்றென்றும் முடிவுறாத வசீகரம் அவற்றுக்கு - an unending buty - இருப்பதாக அவர் சொன்னது முற்றிலும் உண்மை என்கிறார் கைலாசநாதன்.

காதலுணர்வு பிரிவு தனிமை உணர்வுகளை வெளிப்படுத்தும் ராஜபுத்தானத்து ஓவியங்கள்... மேல்மாடங்களில் பெண்கள் நிற்பார்கள். நிலவு எறிக்கும். நிலவின் கீழ் மரங்கள் - பிப்பிள் மரங்கள் என்ற ஒருவகை மரங்கள் - இரவு நேரத்தில் நிலவின் ஒளிபட்டு ஒளிரும். நீர்ச்சுனைகளில் இருந்து நீர் பாயும். இவை இரவின் ரம்மியத்துடன் சேர்ந்து எழும் - மேல் மாடத்தில் பெண்கள் நிற்கும் நிலை - ஏக்கம் கலந்த உணர்வை வெளிப்படுத்தும் அற்புதமான ஓவியங்கள் இவை.

சீன ஓவியங்களில் தூரிகைகளின் சுயாதீன அசைவைக் காணலாம். தாமரையினதும், மூங்கிலினதும் ஆன்மாவை தூரிகையின் அசைவுகளினூடாக கொண்டு வந்துவிடுகின்ற சுத்தமான ஓவியங்கள் அவை. அவை நன்றாக இருப்பதற்கு காரணம் - நிற ஒழுங்கமைப்பு, பெண்களை அழகுற வரைந்திருத்தல், கண்களை பெரி-தாகவும் கைகளை நளினமாகவும் மெல்லிய ரேகைகளால் காட்டியிருப்பார்கள். ஓடும் ஆறு, அதில் ஓடும் நீரின் கோடுகள், அதிலுள்ள தாமரைப் பூக்கள், சில குருவிகள், நிழல் மரங்கள்.. இவையெல்லாம் ஒரு குளிர்மையான உலகுக்கு பார்ப்பவரை இட்டுச்செல்லும்....

ஓவியர்கள் பற்றி குறிப்பிடுகையில் "யாரையும் நாம் ஒதுக்கிவிடமுடியாது. நியூட்டன் சொன்னதுபோல எமக்கு முந்தியவர்களின் தோளில் ஏறிநின்றுகொண்டு தான் நாம் செயற்படுகிறோம். எல்லா ஓவியர்களும் ஒருவர் தோள்மீது ஒருவராக ஏறித்தான் வந்திருக்கிறோம். எல்லோருக்கும் அவரவர் பங்களிப்பு இருக்கத்தான் செய்கிறது. நாம் யாரையும் நிராகரிக்க முடியாது" என்கிறார் கைலாசநாதன்.

கீழைத்தேய ஓவியங்களுக்கு ஒருவகை தனிச்சிறப்பு உண்டு. ஆரம்பகால மேற்கத்தைய ஓவியங்களில் உள்ளதை உள்ளபடி தத்ரூபமாக வரைதல் இருந்தது. குதிரையை குதிரையாக, மரத்தை மரமாக வரையும் போக்கு கிழக்கிலேயோ ஓவியங்களில் ஒருவகை நீட்சியும் லயமும் இருக்கும். பெண்பூவை வைத்திருப்பதிலும் ஒரு அழகை - நடனமுத்திரையைக் காணலாம். கையைத் தொங்கவிட்டிருந்தாலும் சரி பூவைப்பற்றியிருந்தாலும் சரி அதில் ஒரு லயமும் அழகும் உண்டு. இது கீழைத்தேய ஓவியங்களில் தான் காணப்படும். மரக்கொப்பை பற்றிநிற்கும் பெண், விக்கிரகம், கையில் வைத்திருக்கும் பொருள் எல்லாவற்றிலும் ஒரு லயம் உண்டு.



மாற்றம்

நடராஜர் சிலையை மரபு என்பார்கள். ஆனால், அது நிஜ உருவ அளவில் செய்யப்பட்ட ஒன்றல்ல. அதில் propotion இல்லை. ஆனால், அது பிழை அல்ல. அப்படி இருப்பது தான் அதன் சிறப்பும் அழகும். இதைக் காண்பதற்கு உண்மையில் மூன்றாவது கண் தேவைதான். அனுபவமும் பயிற்சியும் கல்வியும் கொண்டு உருவாக்கிக் கொள்ள வேண்டிய மூன்றாவது கண்.

ஈழத்து ஓவியர்கள் தொடர்பாக பேசுகையில் "ரமணி ஒரு நல்ல ஓவியர். சக்திவாய்ந்த கோடுகள் அவரது. ஆனாலும் அவர் Commercial art க்குள் போய்விட்டார். ஓவியர் ராசையாவிடம் நல்ல வர்ணம் பற்றிய உணர்வு இருக்கிறது. ஆயினும் அவருக்கு நவீனம் பிடிக்காது. மாற்கு யாழ்ப்பாணத்தில் நவீன ஓவியத்தை அறிமுகப்படுத்தியவர். (என்னிடம் மாற்குவின் பாதிப்பு இருப்பதாக சொல்கிறார்கள் சிலர். ஆனால் அது உண்மை இல்லை.)

ஓவியர் கனகசபை நமது மண்வாசனையை எண்ணை ஓவியங்களூடாக (oil painting) கொண்டுவந்தவர். யோகர் சுவாமி, கடையில் சுவாமி போன்றோர் நடந்து போகையில் அவர்களது சிந்தனை வேறெங்கோ இருப்பதை உணர்த்தும் விதமான ஓவியங்களூடாக அவர் மண்வாசனையை கொண்டு வந்தவர்..." என்கிறார் கைலாசநாதன்.

கைலாசநாதனது ஓவியங்கள் வெவ்வேறு சாதனங்களுக்கும் மாற்றப்படக்கூடிய தன்மையை கொண்டிருப்பதைத்தான் அவதானித்தாக ஓவியர் நிலாந்தன் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். சிறுவயதிலிருந்தே களிமண் உருவங்கள் செய்து வந்தமை இத்தகைய தன்மையான ஓவியங்கள் அவரிடம் உருவாக காரணமாக இருக்கலாம். அவரது ஓவியங்களில் காணப்படும் ஓரங்கட்டல், புடைத்து நிற்றல் வெளிவிடல் என்பன இந்த ஓவியங்களை உலோகம், மரம் ஆகியவற்றிற்கு அப்படியே மாற்றிக்கொள்ள இலகுவான தன்மையைக் கொடுக்கின்றன.

தனது ஓவியங்களை எதனால் எதில் வரைவது என்பதில் எந்தக் குறிப்பிட்ட கொள்கையையும் அவர் இறுக்கமாக கடைப்பிடிக்கவில்லை. அவருக்கு வசதியாக கிடைப்பதை கொண்டு செய்கிறார்.

அவரது ஓவியங்களில் சட்டநாதனின் 'மாற்றம்' சிறுகதை தொகுதிக்கு அவர் வரைந்த அட்டைப்படம் - பெண் விசுவரூபமெடுக்கையில், ஒரு செத்த தவளையைப்போல ஆண் தூக்கி எறியப்பட்டு சிறுத்துப்போவதை சித்திரிக்கும் படம் போன்-றவை இத்தகைய வேறு ஊடகங்களுக்கு இலகுவாக மாற்றப்படக் கூடியதன்மையை கொண்டிருக்கின்றன.

**எஸ்.கே.வி.**

நன்றி - நூலகத்திட்டம்





ஷியாம் செல்லத்துரையின் ஃபணிபோய்:

ஆறு கதைகள் கொண்ட நாவல்

# அப்பாவித்தனத்தினதும் அனுபவத்தினதும் கதைகள்

ஏ.ஜே. கனகரத்தினா

ஷியாம் செல்லத்துரையின் இரண்டாவது நாவலான 'சினமன் கார்டன்ஸ்' அரவர் முதலாவது நாவலான 'ஃபணிபோய்' போலவே வெற்றுப்பாவனையற்ற, உண்மையான ஒன்றாக இருக்குமா அல்லது பகட்டுத்தன்மைக்கு இலக்காகுமா? (ஃபணிபோய் அனேகமாக பாவ ஒப்புக்கொள்ளல் தன்மையில் எழுதப்பட்டது)

இன்னும் 'சினமன் கார்டன்ஸ்' (கறுவாத்தோட்டம்) விற்பனைக்கு வராததால் அது பற்றி எவரும் ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால், வெற்றுப்பாவனைக்கும் பகட்டுத்தன்மைக்கும் இடமளிக்குமாயின் இதற்கான பொறுப்பை மூன்றாம் உலக நாடுகளில் உள்ள, உண்மையாகவே ஆற்றல் கொண்ட எழுத்தாளர்களை பிரபலஸ்தர்களாக்கி இலக்கிய ரீதியில் ஒழுக்கமற்றவர்களாக்கும் மேற்கத்திய இலக்கிய உலகே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கனடாவில் முதன் முதலாக 'ஃபணிபோய்' வெளியிடப்பட்ட போது, அதற்குக் கிடைத்த அசாதாரணமான வெற்றி அதன் இலக்கியத் தரத்தால் ஏற்பட்டதல்ல. (அத்தகையவையும் கணிசமான அளவு அதில் உண்டு,)




மாறாக, நூலாசிரியர் தன்னை ஓரினச் சேர்க்கையாளனாக அதில் வெளிப்படையாகக் கூறியதும், கூடவே ஊடகங்களூடாக அதற்குக் கிடைத்த மிதமிஞ்சிய அனுசரணையுமேயாகும்.

அந்நாவலில் எந்த அம்சம் - ஓரினச் சேர்க்கையா அல்லது இனப்பிரச்சினையா - தூக்கலாகத் தெரிகிறது என்பது பற்றி விமர்சகர்கள் தமக்குள்ளே இரண்டு பட்டனர். ஆனால், என்னைப் பொறுத்தவரை இக்கதைகள் அப்பாவித்தனத்திலிருந்து அனுபவத்திற்கும், விகல்பமற்ற அபிப்பிராய நிலையிலிருந்து அறிவை நோக்கிய விழித்தெழுதலுக்குமாய் பேரம் பேசிச் செல்லும் தடங்களாகவே உள்ளன. உண்மையில், எல்லாக் கதைகளுமே Dying Fallன் ஒத்திசைவின் வகைகளாகவே உள்ளன.

ஏனக்கு மிகவும் பிடித்த கதை முதலாவதாக வரும் 'பன்றிகளுக்கு பறக்க முடியாது' என்பதாகும். இது அப்பாவித்தனத்திலிருந்து அனுபவத்திற்கு மாறி வரும் நிலையை உயிர்த்துவமாகவும், விருப்புடனும் எந்தவித சோடனையுமற்ற காத்திரமான மொழி நடையில் சொல்கிறது.

"கழிந்து போன அந்த நாட்கள், ஞாபகத்துக்கு வரும் பிள்ளைப் பராயத்தின் அப்பாவித்தனம் ஆகியன எல்லாம் இப்போ பின்னேர மங்கலொளி வானில் பன்னிறங்காட்டும் படங்களாக முன்நிற்கும் இவை, இவற்றோடு சம்பந்தமுடைய சகலவற்றினதும் இழப்பால் உருக்க உணர்வை அள்ளி வரும். நாங்கள் எல்லோரும் பின்னர் இனக்கலவரம் காரணமாக இலங்கையை விட்டு நீங்கி கனடாவில் ஒரு புது வீட்டை உருவாக்கிக் கொண்டதால் ஏற்பட்டவை தான் இவை."

"இருந்தாலும் அந்த ஞாயிற்றுக்கிழமைகள். நான் ஏழு வயதாக இருந்த காலம் நான் விரும்பியிருந்த உலகத்தை விட்டு வெளியேறும் ஆரம்பத்தை குறிப்பதாய் இருந்தன. துறையை விட்டு நீங்கி விரிந்த கடற்பரப்பை நோக்கிச் செல்லும் கப்பல் போல் நான் எனது சிறுபராயம் என்னும் துறைமுகத்தை விட்டு ஆபத்து நிறைந்த ஆழக்கடலாம் முதிர்ச்சிப் பருவத்திற்கு எடுத்துச்



செல்லப் பட்டேன்" (பக்கம் 5)

முதலாவது கதை, குடும்ப உறுப்பினர்களோடு தனக்கிருக்கும் ஒட்டுறவு விட்டுப் போவதை கதை சொல்லும் அர்ஜி மெதுவாக உணர்வதை உணர்வுபூர்வமாக ஆய்வு செய்கிறது. மேற்கத்தைய விமர்சகர்கள், பால்நிலை அரசியலில் தம்மை ஈடுபடுத்தித் தேங்கிப் போனதால், அர்ஜியைப் பாதிக்கத் தொடங்கியிருந்த குடும்ப அரசியலை அவர்கள் கவனத்திற் கொள்ளவில்லை.

இரண்டாவது கதையான 'ராதா ஆன்ரி'யில் கொழும்புத் தமிழர் என்று சொல்லப்படும் வகையைச் சேர்ந்த அர்ஜி பல்வகைப்பட்ட இனத்துவ இடக்கு முடக்குகளுக்குள் - விசேடமாக பிழையான இனத்துவ பிரிவுக்குள் நிற்பவரைப் பாதிக்கும் - ஆற்றுப்படுத்தப்படுகிறான். இங்கு நாம் மீண்டும் மாயையிலிருந்து விழித்தெழும் Dying Fall வகையைக் காண்கிறோம்.

"குருவானவர் இப்போ ராதா ஆன்ரியின் கைவிரலில் மோதிரத்தை இடுமாறு ராஜன் நாகேந்திராவைப் பணித்தார். திடீரென எனக்கு அந்தச் சடங்கை பார்த்துக் கொண்டிருக்கச் சகிக்கவில்லை. நான் எங்கே போய்க் கொண்டிருக்கிறேன், என்று தெரியாது பின்வழியே சென்று சமையலறைக்குச் சென்றேன்.

"இறுதியாக நான் பின்தோட்டத்தில் நின்றேன். அந்த இடத்தில் தான் நான் கொஞ்ச மாதங்களுக்கு முந்தி 'மணப்பெண் - மணப் பெண்' விளையாட்டு விளையாடினேன். சென்றமுறை விளையாடிய இடத்தில் கிடந்த மேடையைப் பெண்கள் அகற்ற மறந்து விட்டால் அது அண்மையில் பெய்த மழையில் நனைந்து அசிங்கமாகத் தெரிந்தது. அலரிப் பூமாலைகள் சிதைந்து மண்ணில் கிடந்தன.

"எனக்கு மணப்பெண் - மணப்பெண்' இன்னும். இதைப் போன்று என்னால் உண்டாக்கப்பட்ட நீண்ட சடங்குகள் நினைவுக்கு வந்தன. நான் எவ்வாறு கலியாணம் என்பது மாயவித்தை நிகழ்வைவிட வேறு எதுவாகவும் இருக்க முடியாது என்று நினைத்திருந்தேன். அவையெல்லாம் எவ்வளவு என்னை விட்டு துாரம் சென்று விட்டன. நான் - விட்டு வந்த அந்த உலகம்.

"சமையலறையில் ஜானகி எதையோ உரலில் இடித்துக் கொண்டிருந்தாள். அந்த ஒலியின் ஒத்திசைவை நான் அவதானித்த போது அவளின் காதல் கேளிக்கைகள் நினைவுக்கு வந்தன, அவற்றில் எவ்வளவு ஆர்வங் கொண்டு நம்பிக்கை வைத்திருந்தேன். இரண்டுபேர் ஒருவரையொருவர் காதலிக்கும் பட்சத்தில் எல்லாமே சாத்தியமாகும் என எண்ணினேன். இப்பொழுது எனக்குத் தெரிந்திருந்தது அது அவ்வாறல்ல என்று. நான் படிகளில் அமர்ந்து எனது நாடியைக் கைகளில் ஏந்தியவாறு தோட்டத்தைப் பார்த்தவாறு இருந்தேன். ஒரே தாளகதியியல் உரலில் இடிபடும் ஓசை வந்து கொண்டிருக்க நான் அங்கே வெகுதுாரம் இருந்தேன்.. (பக்கம் 99-100)

ஏனைய பின்னுள்ள கதைகளைவிட இக்கதையிலேயே தனிப்பட்ட உறவுகளையெல்லாம் நாசமுறச் செய்து கொண்டு போகும் இனத்துவத்தின் பாதிப்பு மிகச் சிக்கனமாகவும், உணர்வுபூர்வமாகவும் எழுப்பப்படுவதை நான் காண்கிறேன்.

'சிறிய தெரிவுகள்' என்ற கதை இதற்கு மாறாக நம்பகத்தன்மைச் சோதனையில் அருந்தலாகவே சித்தியெய்தும் ஜெகனை அறிமுகம் செய்கிறது. என்மனதை அரித்தெடுக்கும் சந்தேகம் எனன்வெனில் இக்கதை தமிழ்ப்போராளி ஒருவரை இரத்தமும் சதையுமாக தென்பகுதி வாசகர்களுக்கு 'காட்சிப் படுத்தவே ஆக்கப்பட்டது என்பதே. ஆகவே கதை சொல்பவரின் ஜயப்பாட்டில் பங்குகொள்வதில் எமக்கு எந்த இடர்பாடும் இல்லை. "தன்னுடைய பெருவிரலைக் கிழித்து தன்னுடைய இரத்தத்தை அவனுடையதோடு கலக்கும் அளவுக்கு ஒருவனில் ஈடுபாடு கொண்டு அவ்வளவு இயல்பாக நடந்து கொள்ள அவரால் சாத்தியமானதை நம்புவதற்கு கடினமான நிலையில் என்னுடைய அப்பாவை நாம் முறைத்துப் பார்த்தோம்" (பக் 156)

"எல்லாவற்றுள்ளும் மேலான பாடசாலையும் கலகச் சஞ்சிகையும், ஒரு முடிவுரை" ஆகிய கதைகள் வெற்றிகரமாக வந்துள்ள படைப்புகளாகும். (முக்கியமாக முன்னது) ஆனால், அவை கடந்து செல்லும் பிரதேசங்கள் புதியனவல்ல.

இந்நாவல் 1977 ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழ் அரசியலுக்கு எதிரான போக்கை ஆழமாக ஆய்வதை நோக்காகக் கொள்ளவில்லை. அத்தகைய ஒரு நோக்கை ஆசிரியர் எதிர்கொள்ளவிரும்பியிருந்தால் கூட, திறந்தவெளிப் பொருளாதார நாணயத்தின் அடுத்த பக்கமான 83 கறுப்பு ஜூலையின் பாதிப்புக்குபட்டு, 'உபகாரம் பெறுவோராய்" ஆக்கப்படும் வரை ஜே.ஆரின் திறந்த வெளிப் பொருளாதாரத்தின் நலன்' அனுபவிப்போராய் அவரும் அவரது குடும்பமும் இருந்ததால் அதை அவரால் வெற்றிகரமாகச் செய்திருக்க முடியாது.

ஷியாம் செல்லத்துரை கனடா சஞ்சிகைக்கு கூறிய போது "எனது அம்மா சிங்களவர், அப்பா தமிழர் ஆகவே என் வீட்டில் இனத்துவம் பொருதலுக்குரிய நிலையாக இருந்ததே இல்லை" என்று மிக எளிதாகவே கூறிவிடுகிறார். ஆனால், என் காலை வாருகிற விஷயம் என்னவெனில், தனது அம்மா டாரி என்பவனோடு சோரம் போவது பற்றியெல்லாம் எந்த மனக்குறுக்கமும் இன்றி கூறும் அர்ஜி, ஏன் ஃபணிபோய்" நாவலில் "அம்மா தமிழராக இருந்த போதும், புலிகள் பிழையானவர்கள், அவர்கள் பயங்கரவாதிகளேயன்றி வேறு யாருமல்ல என்று சிந்தித்தாள்" என்று கூறவேண்டும்? (பக்கம் 110)

இதற்கு கருத்தியல் ரீதியாக பார்வைக் குறுக்கமுள்ள விமர்சகர்கள், அர்ஜியை, ஷியாம் செல்லத்துரையோடு இனங் காணக்கூடாது என்று பதிலளிக்கலாம். ஃபணிபோய் நாவல் பாவ ஒப்புக்கொள்ளல் பாணியில் எழுதப்பட்டுள்ளதாலும் ஷியாம் செல்லத்துரை ஓரினச் சேர்க்கையாளனாக இருந்தது பற்றியும் தனது அம்மாவின் சிங்கள அடையாளம் சம்பந்தமாகப் பிறருக்கு சொல்வது பற்றியும் குறியாக இருப்பதால், இங்கே நாம் அவரது தாயார், தனது சிங்கள அடையாளம் தமிழ் மயப்படுத்தப்பட்டதன் விளைவாக அனுபவிக்கும் அடிமன (நனவிலிமன) உளவியல் அழுத்தங்களை நாவலில் நாம் சந்தேகிக்கமால் இருக்க முடியாது. "என் வீட்டில் இனத்துவம் பொருதலுக்குரிய நிலையாக இருந்ததே இல்லை" என்று ஷியாம் கூறுவது அளவுக்கு மிஞ்சி எதிர்ப்புக் காட்டுவது போலவே ஒலிக்கிறது.

தமிழில் மு.பொன்னம்பலம்




**அரும்பு**

பொது அறிவுச் சஞ்சிகை

இதழ் ~ 15

வெளியீடு: இஸாடீன் மெமோறியல்

147, பிரதான வீதி,

டாகா ரவுண்

விலை: 20.00

பொருளாதார, சமூக, அரசியல் தொழில்நுட்பத் துறைகளின் இன்றைய போக்குகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாத வரையில் நாம் சிறந்த பிரஜைகளாக இருக்க முடியாது. எனவே தற்காலப் போக்குகள் பற்றிய அடிப்படை விளக்கத்தை ஒவ்வொருவரும் பெற்றிருப்பது அவசியமாகின்றது. இந்த வகையில் வாசகர்களின் விளக்கத்தை அதிகரிக்கச் செய்வதற்கு அரும்பும் தன்னால் இயன்ற பங்களிப்பைச் செய்யும் , என்று கூறும் ஆசிரியர் எம். ஹாபிஸ் இஸ்ஸதீன் இன் வெளியீடு இதுவாகும்.

மாணவர்களுக்கான இப்புத்தகம் பல நல்ல அறிவியல் தகவல்களை தன்னோடு கொண்டு வருகின்றது. இவரின் முயற்சி பாராட்டப்பட வேண்டியதுடன், கட்டாயம் மாணவர்களால் வாசிக்கப்பட வேண்டிய புத்தகமும் இதுவாகும்.




பெண் சஞ்சிகை

தொகுதி: 04 இலக்கம்: 03

வெளியீடு: சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

46/2, பழைய வாடிவீட்டுத் தெரு,

மட்டக்களப்பு.

தொலைபேசி: 065-23297

விலை: ரூபா 30

பெண்களை மீளமையப்படுத்தும் முயற்சியும் பெண்கள் இயக்கமும் என்பது இவ்விதழின் சிறப்புப் பொருளாக அமைவதுடன் அட்டைப்படம் உட்பட அனைத்து ஆக்கங்களும் இதனையொட்டியதாகவே உள்ளன. "தமிழ் நாட்டில் பெண்கள் இயக்கம் அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் வ.கீதாவின் உரை சிறப்புக் கட்டுரையாக வெளிவந்துள்ளது. இலங்கையில் தமிழ் பேசும் பெண்களிடையே பெண்நிலை இயக்கம் - ஆரம்பகாலச் சிந்தனையும் செயற்பாடுகளும், பெண்ணுரிமைகளும் சர்வதேச பெண்கள் இயக்கங்களும், அவற்றின் போராட்டங்களும் ஆகிய கட்டுரைகளும் இடம்பெறுகின்றன. சூரியா கலைக்குழுவினரின் மட்டுநகர் கண்ணகைகள் கவிதா நாடகமும் சஞ்சிகையில் இடம் பெற்றிருக்கின்றது.

நன்றி - நூலகத்திட்டம்





# மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு ஏன்?

சரிநிகர் இதழ் 194 இல் ஜஹாத் விடு[illegible]டை வழங்கிய தண்டனைகள் [illegible]ன்ற தலைப்பில் சில முஸ்லிம் இளைஞர்களால் ஏறாவூரில் நடத்தப்பட்ட கொலை, பாலியல் வல்லுறவு, சொத்தழிப்பு போன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்களை நிராஜ் என்பவர் வெளிக்கொணர்ந்திருந்தார். இவ்வாறான அசம்பாவிதங்கள் யார் செய்தாலும் வெளிக் கொணரப்பட வேண்டியதும், தகுந்த தண்டனைக்குட்படுத்த வேண்டியதும் என்பதில் யாருக்கும் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. எனினும், ஜிஹாத் என்ற அமைப்புக்கும் இவ்வாறான ஈனச்செயல்களுக்கும் தொடர்பிருக்கின்றதா என்பதை இங்கு விளக்கியாக வேண்டும். ஜிஹாத் படை என்ற ஓர் அமைப்பு இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் அதுவும் கிழக்கு மாகாண முஸ்லிம்களுக்கிடையில் தீவிரமாக இயங்கி வருவதுடன் இவ்வமைப்பானது கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, ஆட்கடத்தல் போன்ற தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறான தீவிர வன்செயல்களுக்கு வடிவம் கொடுப்பதான ஜிஹாத் என்பது போல் சில பத்திரிகைகளும் எழுத்தாளர்களும் எழுதி வருகின்றார்கள். இதன் மூலம் இஸ்லாம் இவ்வாறான ஈனச் செயல்களுக்கு ஜிஹாத் அமைப்பின் மூலம் ஊக்கம் கொடுத்து ஆதரித்து வருகின்றது என்ற தவறான கருத்தை வாசகர் மத்தியில் ஏற்படுத்த முனைகின்றனர். (இங்கு நிராஜ் டேவிட் அவர்கள் இச்சொல்லை பயன்படுத்தியுள்ளார் என்று அவர் மீது பழிபோடவில்லை. அவர் தவறாக விளங்காதிருப்பாராக. மேற்படி குற்றவாளிகள் பயன்படுத்திய சொல்லையே நிராஜும் சுட்டிக்காட்டி எழுதியுள்ளார்.) எனவே இஸ்லாம் ஜிஹாத் குறித்து கூறும் கருத்துக்களை இங்கு சரிநிகர் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமானதாய் இருக்கும் எனக் கருதுகின்றேன்.

ஜிஹாத் என்ற சொல் இஸ்லாமிய மார்[illegible]யுத்தம் என்றழைக்கப்படும். இஸ்லாமிய வரலாற்றை நன்கு ஆய்ந்து படித்தோர் இவ்வுண்மையை நன்கு அறிந்து கொள்வர். அநீதிகளுகெதிராகவும், அராஜக ஆட்சிக்கெதிராகவும் இஸ்லாமியர்கள் ஜிஹாத் செய்ததுடன் முஸ்லிம் அல்லாதோரின் நலன்களைக் காக்கவும் அவர்களின் வேண்டுகோளின்படி பிற நாட்டு கொடுங்கோலர்களுக்கெதிராகப் போர் புரிந்து முஸ்லிம் அல்லாதோரின் நலன்களை காக்கவும் முஸ்லிம்கள் ஜிஹாத் செய்துள்ளதை வரலாறு நெடுகவும் காண முடிகின்றது. ஜிஹாத் என்பது ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுவதுபோல் நில ஆக்கிரமிப்பு போர்களோ மதத்திணிப்பு போர்களோ அல்ல. தற்பாதுகாப்பு யுத்தத்திற்கு செல்லும் போது கூட நபி முஹம்மது அவர்களும் அவர்களைப் பின்பற்றி ஆட்சி புரிந்த ஆட்சியாளர்களும் பின்வருமாறு கண்டிப்பான கட்டளையிட்டு அனுப்பிவைத்தனர். நீங்கள் கோயில்களை அழிக்கவோ, அங்கு தங்கியிருக்கும் மதகுருக்களை இம்சிக்கவோ கூடாது. முதியோர், பெண்கள், சிறுவர்கள் சமாதானத்தை விரும்புவோர் ஆகியோரைக் கொல்வதும் சித்திரவதை செய்வதும் உங்கள் மீது தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் கனி தரும் மரங்களை வெட்டுவதும் மனிதருக்கு நிழல் தரும் மரங்களை தறிப்பதும் தடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் எதனையும் தீயிட்டு கொளுத்தவும் வேண்டாம் என உங்களுக்கு கட்டளையிடுகின்றேன். உங்களை எதிர்ப்போருடன் மட்டும் ஜிஹாத் செய்யுங்கள் என்ற உத்தரவு ஜிஹாத் என்பது எதனைக் குறிக்கின்றது என்பதை நன்கு தெளிவுபடுத்துகின்றது. எனவே ஜிஹாத் என்ற சொல்லைப் பயன்படுத்தி சில முஸ்லிம் பெயர் தாங்கி இளைஞர்கள் செய்யும் காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கும் இஸ்லாத்திற்கும் எந்த விதமான தொடர்பும் கிடையாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் இத்தகைய குற்றவாளிகள் பாரபட்சமின்றி தண்டிக்கப்பட வேண்டும். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு பார்ப்பது போல் இத்தகைய அக்கிரமங்களுக்கும் ஜிஹாத்துக்கும் முடிச்சுப்போட்டு எழுதுவதையும் விமர்சிப்பதையும் தவிர்ப்பது போல் இந்தப் பெயரை பயன்படுத்தி வன்செயல்களில் ஈடுபடுவோரை உளவியல் ரீதியில் திருத்தி நல்வாழ்வு அமைத்துக்கொடுக்க முஸ்லிம் சமூக சேவை நிறுவனங்களும் அமைப்புக்களும் முன்வர வேண்டும்.

சரிநிகரில் தொடர்ந்தும் அச்சுப்பிழைகள் ஏற்பட்டு வருவதை நான் அவ்வப்போது சுட்டிக் காட்டி வருகின்றேன். அதுவும் சிறுகதை கவிதைகளில் ஏற்படும் சிறு அச்சுப்பிழையும் படைப்பின் மையக்கருத்தையே சிதைத்து விடுகின்றது. குறிப்பாக கவிதைகளில் ஏற்படும் சிறு எழுத்துப்பிழைகளையும் அக் கவிதையின் உயிர்த்துடிப்பையே மாற்றிவிடுகின்றது. எனது பிரகடனம் கவிதையில் அவ்வாறான பிழையொன்றை சரிநிகர் இழைத்துள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அச்சம் கரைந்து  
சுதந்திரமுதிர்க்க யாமே காரணம்  
என்றெல்லாம் புழுகுவர்  
எனினும் நமக்கினி அவர்  
வேற்றுலக வாசிகள் தாம்.

என்று முடிவுறும் கவிதையில் சரிநிகரின் கவனயீனத்தால் 'எனினும்' என வர வேண்டிய இடத்தில் மீண்டும் 'என்றெல்லாம்' என்ற சொல்லை போட்டு வாசகரை மட்டுமன்றி படைப்பாளியையும் தொடர்ந்து சங்கடத்திலாழ்த்தி வருகின்றது. இவ்வாறான தவறுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது அங்கீகரிக்க முடியாத செயலாகும். இதை சரிநிகர் உணர்ந்து நிவர்த்தி செய்ய வேண்டும்.

**- ஓட்டமாவடி அறபாத்**

## சிங்கள இனவாதிகள் கூட்டு....

முனசிங்கவும் சிங்கள உருமய கட்சியில் இயங்கி வருகின்றனர்.

### NMAT யின் திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்துகிறது

இதற்கிடையில் கடந்த 21ஆம் திகதி தென்னிலங்கையில் 232 மில்லியன் ரூபா செலவில் ஒரு ஆயுதத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுவதாக அரச வானொலிகளில் அறிவிக்கப்பட்டிருந்தது.

அரசாங்கம் எதிர் கொண்டு வந்த தொடர்ச்சியான தோல்விகளைச் சமாளிக்க சிங்கள மக்களுக்கு ஆறுதல் சொல்லும் வகையில் இந்த செய்தியை பேச்சுவார்த்தை முயற்சிகளின் மத்தியிலும் சொல்ல வேண்டியதாயிற்று. உள்ளூரிலேயே ஆயுதங்களை உற்பத்தி செய்யும்படி ஏற்கெனவே பயங்கரவாத ஒழிப்பு தேசிய இயக்கத்தின் செயற்திட்டத்தின் மூலம் அரசாங்கத்துக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் 6ஆம் திகதியன்று கொழும்பில் தேசிய மகா சங்கத்தினர், சிங்கள வீரவிதான, பயங்கரவாத ஒழிப்பு தேசிய இயக்கம், தேசிய ஒருங்கிணைப்புக் குழு ஆகியன கூடி எடுத்த முக்கியமான 7 முடிவுகள் கூர்ந்து கவனிக்கப்பட வேண்டியவை. இது பற்றி சம்பிக்க ரணவக்க சண்டே டைம்ஸ் பத்திரிகையில் கும்பகர்ண எனும் பெயரில் எழுதி வரும் பத்தியில் இப்படிக் குறிப்பிடுகிறார்.

"...மூன்று நிகாயவின் மகாநாயக்கர்களும் ஏனைய அமைப்புகளுடன் சேர்ந்து இந்த முடிவுகளை எடுத்திருப்பது அவர்களின் அரசியல் பொறுப்பை வெளிப்படுத்துகின்றன. அதில் மூன்று அதி முக்கியமான பிரகடனங்கள். அரசாங்கமானது ஒரு கட்டத்தில் போர் நிறுத்தமொன்றை செய்யுமாயிருந்தால் அதனை ஏற்க வேண்டாமென படையினருக்கு கட்டளையிடுவதாகவும், அரசாங்கம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை பாராளுமன்றத்துக்கோ அல்லது நீதிமன்றத்துக்கோ கட்டுப்படாது "புரட்சிகரமான வகையில்" நடைமுறைப்படுத்த முயன்றால் மகாசங்கத்தின் மூலம் கட்டளை பிறப்பித்து தலதா மாளிகையில் மகாசங்கத்தினர் கூடி அரசியலமைப்பொன்றை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவருவதாகவும், அரசியல் முரண்பாடுகளை மறந்து நாட்டை யுத்த தயாரிப்புடன் எந்நேரமும் தயாராக வைத்துக் கொள்ள உறுதி பூணுவது என்பன முக்கியமான முடிவுகள். முன்னர் அரசாட்சி என்பது அரசு, மகாசங்கத்தினர், மக்கள் என்கிற "திரிபீடக" முறையில் (முக்கோண வடிவத்தில்) காணப்பட்டது போல இனி செய்தாக வேண்டும்.

### எந்த நிலையிலும் ஆட்சியைக் கைப்பற்றலாம்

சம்பிக்க ரணவக்க தனது பத்தியில் அவசர நிலைமையொன்றில் ஆட்சியை கவிழ்த்து புதிய ஆட்சியை நிறுவும் உரிமை மகாசங்கத்தினருக்கு இருக்கிறது எனும் சாராம்சப்பட முடித்திருந்தார். உண்மையில் இந்த நிலைமை ஒரு பாசிசத் தயாரிப்புத் தான். மதம் மக்கள் மத்தியில் வகிக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி மதத்தின் பெயரால், கற்பிதம் செய்யப்பட்ட புனிதத்தின் பெயரால், புனையப்பட்டுள்ள இனத்தூய்மையின் பெயரால் இதனைச் செய்வதே சிங்கள பௌத்த நவ பாசிச வடிவத்தின் யுத்த தந்திரோபாயமாக இருக்கிறது என்பது கொஞ்சம் கொஞ்சமாக வெளித்தெரிந்து கொண்டிருக்கிறது.

ஆனையிறவு வீழ்ச்சி ஏற்கெனவே படையினரை வெறிகொள்ள வைத்திருக்கிறது போலவே பேரினவாதமயப்படுத்தப்பட்டு வரும் மக்கள் மத்தியிலும் சீற்றத்தை உண்டுபண்ணியிருப்பதானது தமிழ் மக்கள் மத்தியில் பதட்டத்தையும், பீதியையும் கிளப்பியுள்ளது. எந்தநேரத்திலும் ஒரு இனஅழிப்பு சிவில் சமூகத்திலிருந்தே எழலாம் என்கிற நிலையை உணரக்கூடியதாக இருக்கிறது. அப்படி நிகழ்ந்தால் அது 1983 போல இருக்காது. ஏனெனில் அப்போது அதற்கு பின்னணியில் தலைமை தாங்கியது ஒரு கட்சி, அதனை சாதகமாகப் பயன்படுத்தியது காடையர் கூட்டம். இன்று அப்படி அல்ல ஏனெனில் சிவில் சமூகம் தன்னிச்சையாக எழக்கூடிய சூழலானது பெரும் அழிவைத் தரத்தக்க ஆபத்து மிக்க போக்கு.

தமிழ் மக்கள் சேர்ந்து வாழும் சந்தர்ப்பத்துக்கான அறிகுறிகள் அற்றுப்போய்கொண்டிருக்கிற நிலையில் தமக்கான தேசத்தை நிறுவுவது என்பது தவிர்க்க இயலாத வகையில் தள்ளப்பட்டுக் கொண்டே போகின்றனர். எவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது தவிர்க்கமுடியாது.

○

## சிங்களக்...

சூழலை ஏற்படுத்துதல் இரு பகுதியினதும் தேசியவாத இயக்கங்களுக்கு கொலை அச்சுறுத்தலாக இருக்கும். பிரதான அரசியல் கட்சிகளுக்கிடையில் அரசியல் அதிகாரத்தை பரவலாக்குதல் தொடர்பாக ஏற்படும் இணக்கப்பாட்டைத் தடுத்தல், மூன்றாம் தரப்பு தலையீட்டின்படி புலிகள் இயக்கத்தை சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைத்தலை தடுத்தல் என்பன இச்சந்தர்ப்பத்தில் நவீன சிங்கள தேசியவாத இயக்கத்தின் பிரதான இலக்காகுவது இதனாலேயே ஆகும். மறுபுறம் புலிகள் இயக்கமும் மற்றும் பிரபாகரனும் இந்த புதிய அரசியல் போக்குக்கு சந்தோஷமான ஆதரவை வழங்கக் கூடும் என்பது உறுதி. சிங்கள மேலாதிக்கம் கொண்ட அரசை தோற்றுவிக்க பகிரங்கமாக செயற்படும் அரசியல் கட்சியொன்று தோற்றம் பெறுதல் பிரபாகரனின் கனவை நனவாக்கும். ஏனெனில் இதனால் அவரது தமிழ் அரசியல் செயற்திட்டம் நீதியானதாகின்றது.

இலங்கையில் வாழும் நாம் மிக முக்கியமான அரசியல் போக்குக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். தேசிய, மத அடையாளத்தை கொண்ட அரசியல் இயக்கங்கள் தற்போது சிங்கள மற்றும் முஸ்லிம் இனங்களுக்கிடையிலும் வளர்ச்சிபெற்று வருகின்றன. இதன்படி எமது எதிர்காலம் அவர்களுக்கு உரியதாயின், இலங்கைக்கு என எதிர்காலம் என்று ஒன்று இல்லை எனலாம்.

○

## மட்டு. கல்வித் திணைக்கள......

இடமாற்றம் வழங்கப்படுகின்றது என்ற வகையில் இதனை வரவேற்கும் அதேவேளை, இந்த இடமாற்ற நடைமுறையில் ஒரு சில முறைக்கேடுகள் இடம்பெற்றுள்ளதையும் ஏற்றுக்கொள்கின்றேன். ஆசிரியர்கள் மாணவர்களுக்காகத் தான் அதில் சந்தேகம் இல்லை. அனால், அந்த ஆசிரியர்களும் மனிதர்கள் தாம். அவர்களுக்கும் சில அடிப்படை உரிமைகள் இருக்கின்றது. கஷ்டப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு கல்வி ஊட்டச்செல்லும் ஆசிரியர்கள் தாம் பழிவாங்கப்பட்டு விட்டோம் என்ற மனநிலையில் செல்வது செல்ல வைப்பது, நல்லதல்ல' என்று தெரிவித்தார்.

இந்த ஆசிரியர் இடமாற்றங்கள் பற்றி மட்டக்களப்பு வலயக்கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த ஒரு இரண்டாம் நிலை அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்ட போது 'இலங்கையிலேயே மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள் தான் அதிக 'நோய்களுடன்' பணிபுரிபவர்கள் என்றும், அவர்களுக்கு இடமாற்ற உத்தரவுகள் வழங்கிய பின்னர் தான் அவர்களுக்குள்ள நோய் விபரங்கள் வெளியே தெரிய வருகின்றன என்றும் தெரிவித்தார்.

கல்வித்திணைக்கள அதிகாரிகளின் உறவினர்களான சில ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படாதது பற்றித் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி வினவிய போது..., 'விரைவில் அவர்களும் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாகவும் அப்போதாவது மற்ற ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைவார்களா என்று பார்ப்போம்' என்று தெரிவித்ததுடன் பொது நிர்வாக சுற்றறிக்கையைக் காரணம் காட்டி இது சம்பந்தமாக மேலதிக கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

மட்டக்களப்பு வலயக்கல்வித் திணைக்களத்தில் பணியாற்றும் அதிகாரிகளின் இறுமாப்பான பேச்சுக்களும், அதிகா துஷ்பிரயோகங்களுமே, ஆசிரியர்கள் தாம் பழிவாங்கப்படுகின்றோமோ என்று பல சந்தர்ப்பங்களிலும் சந்தேகப்படுவதற்குக் காரணமாக அமைகின்றது.

பல வழிகளிலும் பாதிப்புற்று, பொருளாதார நெருக்குதலுக்கு உள்ளாகி இருக்கும் இப்பகுதி மாணவர்களது கல்வியின் அவசியம் பற்றிப் பார்க்கும் போது இப்பகுதிக்கான ஆசிரிய சேவை மிகவும் அவசியமானதும், இன்றியமையாததும் ஆகும்.

ஆசிரியர்கள் இப்பகுதிகளில் பணியாற்றும் போது, அதனை ஒரு கடமையாகக் கருதாமல் ஒரு சேவையாக கருதியே செயற்பட வேண்டும்.

அதேவேளை இப்பகுதிகளுக்கு ஆசிரியர்களை இடமாற்றும் போது அதிகாரிகளும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும்.

இப்பகுதிகளுக்கு இடமாற்ற உத்தரவு பெற்றுச் செல்லும் ஆசிரியர்கள் தாம் பழிவாங்கப்பட்டு விட்டோம் என்ற மன நிலையுடன் அப்பகுதிக்குச் செல்லாத நிலையை உறுதி செய்தவதில் அதிகாரிகளின் பங்கு அளப்பபெரியது.

கஷ்டப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் பணிபுரிவதற்கு இங்குள்ள ஆசிரியர்கள் முன்வராமையும் இங்கு பணிபுரிய காண்பிக்கும் தயக்கமும், 'ஆசிரிய சேவை' என்ற உன்னத சேவைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் அதேவேளை கஷ்டப்பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாது வெறும் பழிவாங்கல்களுக்காவே ஆசிரியர்களை அங்கு இடமாற்றம் செய்யும் கல்வி அதிகாரிகளின் செயல்களும், மாணவ சமுதாயம் பற்றிய இரு தரப்பினரதும் பொறுப்பற்ற தன்மையையே காண்பிக்கின்றது.

○

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

*"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"*
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
**மின்னஞ்சல்:** sarini@sltnet.lk

Registered as a Newspaper in Sri Lanka


## புலிகளின் முன்னுள்ள கடமை!

பொ.ஐ.மு அரசாங்கத்தின் சமாதான யுத்தம் தொடங்கி கடந்த 19ம் திகதியுடன் ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன.

சமாதான யுத்தத்தின் ஐந்தாண்டு காலச் சாதனையை உற்று நோக்குகையில், இன்னும் சில நாட்களுள் ஐந்தாண்டுகளுக்கு முன்பு இருந்த அதே நிலை வந்துவிடும் போல தோன்றுகிறது.

ஒரு சில ஆயிரம் உயிர்கள், சொத்துக்களின் இழப்பும் பல கோடிக்கணக்கான பண விரயத்தையும் தவிர வேறு வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

சமாதானத்திற்கான யுத்தம், சமாதானத்தைக் கொண்டு வருவதற்காக சமாதானத்திற்காக நடந்த பேச்சுவார்த்தைக் காலத்தின் போது சாதித்த அற்ப சொற்ப சாதனைகளைக் கூட சாதிக்கவில்லை.

யுத்த வெறியர்களும், சமாதான வியாபாரிகளும், யுத்தத்துக்காக வாதாடும் அரசியல்வாதிகளும், தங்கள் வயிறுகளை வேண்டியளவு வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், சமாதானம் வருவதற்கான எந்த சமிக்ஞைகளையும் காண முடியவில்லை.

பேச்சுவார்த்தைக்கு பிரபாகரன் அழைத்த போது, அவரை நம்பமுடியாது என்று மறுத்த அரசு தரப்பு அவரை ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு வருமாறு சண்டித்தனம் கதைத்தது.

அப்போது யுத்தத்தில் அரசாங்கத்தின் கை ஓரளவு ஓங்கியிருந்தது.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான பேச்சுக்கு புலிகள் தயார் என்று அறிவித்து அதற்கான முஸ்தீபுகள் தொடங்கிய பின்னும் ஜனாதிபதியின் பேச்சுக்கள் நம்பிக்கை தருவதாக அமையவில்லை.

நோர்வேயை புலிகளின் ஏஜன்ட் என்று கூறி அவர்களை மத்தியஸ்தர்களாக வைப்பது எப்படி என்று கேட்டு பௌத்த பிக்குகளும் சிங்கள இனவாத சக்திகளும் திரண்டு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

நோர்வே நாட்டின் தேசியக் கொடியை அதன் தூதரகம் முன்பாக எரியூட்டினார் ஒரு பௌத்த பிக்கு. ஆனால், இன்றுவரை அவர் கைது செய்யப்படவில்லை.

இந்த இனவாதக் கும்பல், இப்போது ஒரு அரசியல் கட்சியாக 'சிங்கள உருமய' என்ற கட்சியாக - அமைத்துக் கொண்டு செயற்படத் தொடங்கியுள்ளன.

இந்த நிலையில் இப்போது புலிகளின் ஆனையிறவு வெற்றி அறிவிப்பும் வந்து சேர்ந்திருக்கிறது.

இப்போது புலிகளின் யுத்த பலம் சமநிலை அதிகரித்துள்ளது. அவர்கள் பேச்சுவார்த்தையில் பலத்துடன் நின்று பேசக்கூடிய நிலை உருவாகியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார்.

யுத்தத்தில், வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரலாம்.

ஆழமாக சிந்தித்தால் எந்த யுத்தத்திலும் யாரும் வெற்றி பெறுவதில்லை என்ற உண்மை விளங்கும்.

இன்று புலிகளுக்கு கிடைத்துள்ள வெற்றி அநுருத்தருக்கு சூரியக்கதிரின் போது ஏற்பட்டது போல அவர்களுக்கு தற்பெருமையையும் மமதையையும் ஏற்படுத்தி விடக்கூடாது.

இந்த வெற்றியின் பயனை, தமிழ் முஸ்லிம் மக்கள் முழுமையாக அனுபவிக்க கூடிய ஒரு சூழல் உருவாகையில் தான் அது அர்த்தமுள்ள வெற்றியாக அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான தோல்வி நிச்சயமாக தமிழ் மக்களை தோல்விக்கு இட்டுச் செல்லும் பிரதான ஒருபடி என்பதில் புலி எதிர்பாளர்கட்கு கூட மாற்று கருத்து இருக்காது. ஆனால், புலிகளின் வெற்றி தமிழ் முஸ்லிம் மக்களின் வெற்றியாகுமா என்ற கேள்விக்கு இன்னமும் தெளிவான பதில் இல்லை.

உண்மையில் அதற்கான பதில் புலிகளிடமிருந்து தான் வரவேண்டும். வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் திரும்பி வடக்குக்கு அழைக்கப்படுவது பற்றி, அவர்கள் பாதுகாப்பு பற்றி புலிகள் தரப்பில் உறுதியான மொழிதல் எதுவும் இல்லாதவரை, புலிகள் பெறுகின்ற வெற்றி அவர்கள் காணவிரும்பும் தமிழீழ மக்களின் வெற்றி என்ற முழுமையைப் பெறப்போவதில்லை என்பதை இவ்விடயத்தில் நினைவிற் கொள்வது அவசியமாகும்.

புலிகள் சமாதானத்திற்கும் அரசியல் தீர்வுக்கும் தயார், பேச்சுவார்த்தைக்கு தயார் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க வேண்டும்.

ஆனையிறவோ, அல்லது குடாநாடோ கூட புலிகளினால் மீள வென்றெடுக்கப்பட்டாலும் கூட அவர்களின் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படக் கூடாது.

தோல்வியைவிட அதிக நிதானத்தையும் பொறுப்பையும் கோரி நிற்பவை வெற்றிகள் தான். அந்த நிதானமும் பொறுப்புமே அரசியல் ரீதியான நடவடிக்கைகளிலும் வெற்றிகரமாக முன்னேற உதவும்.

எல்லாவற்றிற்கும் மேலாக முஸ்லிம் மக்கள் தொடர்பான உறுதியான தமது நிலைப்பாட்டை அவர்கள் உத்தியோகபூர்வமாக தெரியப்படுத்த வேண்டும்.

இது புலிகளின் முன்புள்ள கடமை.

# பி. பி. சியினர் புலிகளின் கைக்கூலிகள் என்கிறார்

*சம்பிக்க ரணவக்க*

ஏப். 6ம் திகதி பி.பி.ஸி. சிங்கள சேவையின் செய்தியாளரான எல்மோ பெர்ணாந்து தாக்கப்பட்டமை தொடர்பாக கடுமையான விமர்சனத்தை மேற்கொண்ட சந்தேஷிய சிங்கள நிகழ்ச்சி தயாரிப்பாளர் பிரியத் லியனகே, இச்சம்பவமானது உலகம் முழுவதும் காணப்படும் பாசிஸவாத அடிப்படைவாத செயற்பாடுகளில் ஒன்றெனக் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கம், சிங்கள வீரவிதான, மகா சங்கத்தினர் சபை ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து, நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கு எதிராக நடத்திய கண்டன ஊர்வலத்தின் போது செய்தி சேகரித்துக் கொண்டிருந்த எல்மோ பெர்ணாந்து அவர்கள் தாக்கப்பட்டார்.

தமது கூட்டத்தில் பின்னால் வந்த சிலரே அவரைத் தாக்கினர் என மேற்படி அமைப்புகள் தற்போது கதையளக்க ஆரம்பித்து விட்டன. அத்துடன் பி.பி.ஸி. சந்தேஷய பிரிவில் இருப்பவர்கள் புலிகளின் கைக்கூலிகள் என்றும், ஆனந்தி, எல்மோ, வசந்தராஜா ஆகியோர் இவ்வாறு செயற்படுகின்றனர் என்றும் பயங்கரவாதத்திற்கெதிரான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் சம்பிக்க ரணவக்க கடுமையான குற்றச்சாட்டுக்களைச் சாடியுள்ளார். பி.பி.சி. பொய்யான பல செய்திகளைக் கூறிவருகின்றது. ஓட்டிசுட்டான் முகாமை புலிகள் தாக்கிய வேளை 800 படையினர் இறந்ததாக பி.பி.சி. செய்தி வெளியிட்டிருந்தது. ஆனால், உண்மையில் இறந்த படையினர் எண்ணிக்கை 79 தான் என்றும் குறிப்பிடும் சம்பிக்க, வேறொரு நாடென்றால் இவ்வாறு பொய் பேசுபவர்களை தூக்கிலிட்டு கொன்று விடுவார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

படையினரால் மேற்கொள்ளப்படும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள், கடத்தல்கள், கொள்ளையடிப்புகள் பற்றி முக்கியத்துவமளித்து செய்தி வெளியிடும் பி.பி.சியினர், புளொட் இயக்கத்தினரால் கடைகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. அப்பாவி மக்களுக்கு அனுப்பப்படும் உணவுப் பொருட்களை



புலிகள் கைப்பற்றிக் கொள்கின்றனர். இதைப் பற்றியெல்லாம் மௌனமே சாதித்து வருகின்றனர். புலிகள் அரந்தலாவையில் பௌத்த பிக்குகளை கொலை செய்தனர். ஸ்ரீமஹாபோதியை குருதியால் குளிப்பாட்டினர். தலதா மாளிகையைத் தாக்கினர். இந்த நிலைமையில் பௌத்தத்தின் பரிசுத்தத்தை பேணுவது என்பது விசர்த்தனமானது. நாம் புலிகளை தோற்கடிக்க வேண்டும் என்றே வலியுறுத்துகின்றோம். ஆனந்தியின் தமிழ் சேவையின் காரணமாக தமிழ் பிள்ளைகள் யுத்தத்திற்கு சென்று செத்துமடிகின்றனர். ஆதலால் யுத்தம் செய்ய வேண்டாம் எனக் கூறப்படுகின்றதா? என்றும் கேள்வியெழுப்பியுள்ள சம்பிக்க நோர்வே தேசிய கொடியை எரித்தது பிக்கு அல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

பொதுவாக சிங்களத் தரப்பிலிருந்து இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில் சந்தேஷிய பக்கச் சார்பாக நடந்து கொள்கின்றது என்றும், புலிகளுக்குச் சார்பான செய்திகள் வெளியிடப்படுகின்றன என்றும், சாதிப் பிரிவினைகள் பற்றிய கதையாடல்களை அதிகம் மேற்கொள்கின்றது என்றும் இவ்வாறான இனவாதிகளால் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றது.

எனினும், இந்தக்குற்றச்சாட்டுக்கள் அர்த்த[illegible]வையென வன்மையாக ம[illegible]ும் பிரியத் லியனகே [illegible]க்கு சார்பான செய்திகளை [illegible]வெளியிடுகின்றோம் என்ற குற்றச்சாட்டை சிங்கள பௌத்த அமைப்புகளே முன்வைக்கின்றன. ஜே.வி.பிக்கு எதிராக அடக்குமுறை சூழலில் நாம் இவ்விடயம் பற்றி கதைத்த வேளை இப் பௌத்த சிங்கள அமைப்புகள் மௌனம் சாதித்தன. ஜே.வி.பி. என்பது ஒரு சிங்கள பௌத்த அமைப்பு. அவ் அமைப்பை அழிக்கும்போது மௌனம் காத்த இந்த அடிப்படைவாதிகள் இன்று எம்மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். நாம் மக்களுக்கு உண்மையான நம்பகமான தகவல்களையே வழங்குகின்றோம். எமக்கு எதிரான தாக்குதல் இதன் காரணமாகவே மேற்கொள்ளப்பட்டது எனத் தெரிவித்தார்.

எல்மோவை தாக்கவில்லையெனவும், அவர் வழியை மறைத்துக் கொண்டிருந்ததால், அவரை அப்புறப்படுத்தியதாகவும் கூறப்பட்டது. இது பொய். அச்சந்தர்ப்பத்தில் நானும் அவ்விடத்தில் நின்றேன். இது தான் இலங்கையில் காணப்படும் தொடர்பூடகச் சுதந்திரம். இது எல்மோவுக்கு எதிரான தாக்குதல் மட்டுமல்ல. அடிப்படைவாத சக்திகளினால் இந்நாட்டு தொடர்பூடக சுதந்திரத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே நான் கருதுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

எல்மோவுக்கெதிரான தாக்குதலுக்கு எதிராக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட பல்வேறு ஊடக சுதந்திரம் தொடர்பான அமைப்புக்களும் கண்டனம் தெரிவித்திருந்த போதும் தாக்குதலில் ஈடுபட்ட பௌத்த பிக்கு இது வரை கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பி.பி.சிக்குத் தடை?

யுத்தமுனைத் தகவல்களை அறிய வானொலி கேட்பவர்களுக்கு உள்ள ஒரே வசதியான சேவை லண்டன் பி. பி. சி. சேவை என்பது வடக்கு கிழக்கில் யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் தொடரும் உண்மைக் கதை. அதுவும் இப்போது பி. பி. சியை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் கேட்கக் கூடியதாக வந்த பின் அதைக் கேட்காதவர்களே இல்லை எனலாம்.

நாள் பூராக ரெலிபோனில் உரையாடி மக்களைக் "களியாட்டக் கலாசார"த்துக்கள் திக்கு முக்காடச் செய்து கொண்டிருக்கும் புதிய பண்பலைச் சேவைகளைக் கேட்பவர்கள் கூடப் பி. பி. சிக்காகக் காது கொடுக்காமல் இருப்பதில்லை.

ஆனால், கடந்த ஞாயிறன்று ஆனையிறவு வீழ்ச்சி பற்றிய தகவல் அறிய (23. 04. 2000) வானொலி முன் குந்தி இருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றம். பி. பி. சி. ஒலிபரப்புக் குறித்த நேரத்தில் தேசிய சேவையூடாக நடக்கவில்லை.

அவசர அவசரமாகச் சிற்றலையூடாக நேரடியாகக் கேட்க முனைந்தவர்களுக்குப் பெரும் ஆச்சரியம் காத்திருந்தது.

வழமை போல லண்டன் பி. பி. சியின் தமிழோசை சிற்றலையில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது.

காரணம் என்ன ? பி. பி. சியைத் தடை செய்து விட்டார்களா ?

ஆனையிறவுத் தோல்வியைத் தேசிய சேவையில் சொல்லக் கூடாது என்று அரசாங்கம் முடிவு செய்து பி. பி. சியுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு விட்டதா ?

ஆனால், என்ன ஆச்சரியம். சரியாக அரை மணி நேரம் கழித்து, பி. பி. சி. தமிழோசை தேசிய சேவையில் ஒலித்தது.

அப்படியானால் என்ன தான் நடந்தது ?

ஆனையிறவு பற்றி ஏதாவது வந்து விடக் கூடும் என்ற பயத்தில்தான் பி. பி. சி. தமிழோசை நிகழ்ச்சிகளை ஒலிப்பதிவு செய்து அரை மணி நேரம் கழித்துப் பிறகு ஒலிபரப்பி இருக்கின்றதோ தேசிய சேவை என்று தோன்றியது.

ஆனால், பிறகு தான் விஷயம் தெரிந்தது.

முதல் நாள் சனியன்று நடந்த ஒரு சம்பவம் தான் இந்த நிலை ஏற்படக் காரணம் என்று தெரிந்தது.

ஆம். இலங்கை வானொலியில் பிரபாகரன் பேசியதால் ஏற்பட்ட சங்கடம்தான் அதை அப்படிச் செய்ய வைத்திருக்கின்றது! ஆம், இலண்டன் பி. பி. சியின் சிங்கள ஒலிபரப்பான "சந்தேஷய" சனியன்று நடந்த போது, அதன் பொறுப்பாளர் பிரியத் லியனகே ஒரு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தார். மூன்றாவது ஈழ யுத்தம் தொடங்கிய ஐந்தாண்டு ஏப்ரல் 19 உடன் முடிவடைந்ததை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி அது.

அந்தப் பேச்சில் பிரபாகரனின் குரலில் அவரது மாவீரர் தினப் பேச்சு ஒலிபரப்பானது.

வந்தது வினை.

இலங்கை வானொலியில் பிரபாகரன் பேசுவதா ? அதுவும் சிங்கள மொழிச் சேவையில் ?

மறுநாளும் இந்தக் கதை தொடரக் கூடும் என்ற பயத்தில் பி. பி. சியை ஒலிப்பதிவு செய்தது தேசிய சேவை. பிறகு ஒன்றும் இல்லை என்று கண்டவுடன் அரை மணி நேரம் கழித்து ஒலிபரப்பியது !

சிங்கள - தமிழ் இரு நிகழ்ச்சிகளையும் தான் !

பாவம். பிரபாகரன் குரலுக்குமா இவ்வளவு பயம் ?